கன்மோகினி!

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE ... 17 APR 193 MADRAS



கஸ்தூரி திலகம்

(தொடர்ச்சி)

16. வம்பர் கூட்டத்தின் வயிற்றெரிச்சல்
17. ஓண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டிற்றும்
18. ஏமாற்றமும், தடுமாற்றமும்
19. மூர்க்க நாடகத்தின் முதல் காட்சி
20. சந்தர்ப்ப சாட்சியும், சனியனின் ஆட்சியும்
21. சுயநலப் புலியின் சூரக் கோள்ளை
22. காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்
23. அதிர்ச்சி அமளி—கானுஸ்திரப் பிரயோகம்
24. திருமணப் பேச்சு—உருகிடும் பேதை

பொன்விழா ! ! !

39 கானாம்ருதம்

அணா 2

உங்கள் அன்பிற்கு வந்தனம்

மோகினிச் செல்வியின் அன்பர்களே !

ஸ்ரீ பார்த்தஸாரதியின் கருணையினுலும், உங்களுடைய பேரன்புடன் கூடிய ஆதரவினுலும் மோகினிச் செல்விக்குச் சென்ற ஆண்டை விட இந்த—அவளுடைய 16-வது—ஆண்டில் இன்னும் அதிகமான சந்தாதாரர்கள் பெருகியுள்ள சந்தோஷச் செய்தியை, நான் மனப்பூர்வமான நன்றியறிதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனவரி மாதம் ஆரம்பித்த "கஸ்தூரி திலகம்" முதல் இதழ், அம் மாதம் 15-ந் தேதிக்குள் முற்றிலும் செலவாகி, மறு பதிப்புப் போடும் நிலைமைக்கு, கடவுள் உங்களுடைய ஒத்தாசையால் உதவி புரிந்திருக்கிருர். என்னுடைய அகமுருகும் வந்தனம் அப் பரம்பொருளுக்கும், உங்களுக்கும் உரித்தாகும்.

பல அன்பர்கள், தம் சிநேகிதர்களைச் சேர்த்து உதவி யிருக்கிருர்கள். பல சகோதர சகோதரிகள் மோகினியைப் பற்றியும், நம் நாவல்களைப் பற்றியும் புகழுரைகள் எழுதி எம்மை உத்ஸாகப்படுத்தி யிருக்கிருர்கள். அந்தக் கடிதங்களை எல்லாம் பிரசுரிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தும் அத்தனையும் பிரசுரிக்க இடமின்றி விட்டிருக்கிரும். பல அன்பர்கள் நம் நாவல்களில் சிலவற்றைக் குறிப்பிட்டு, சினிமா சம்பந்தமாகவும் எழுதியிருக்கிருர்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதில் எழுதுவதற்கு அவகாசம் இல்லாமையினுல் அந்த அன்பர்களுக்கெல்லாம் எனது நன்றி வி[illegible]வாசமுள்ள வந்தனத்தை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். [illegible]னிமாவைப் பற்றிய விவரத்திற்கு எனக்கு ஒழியும்போது மோகினியி[illegible]லயே கட்டுரைகளாக எழுத உத்தேசம்.

அன்பர்கள், இதுபோலவே மோகினியின் வளர்ச்சியில் [illegible]அன்பும், ஆதரவும் கொடுத்து எம்மை ஊக்கி, உத்ஸாகமளித்து, அந்த உத்[illegible]கத்தின் பலனுக, இத் துறையில் சலிப்பிலாது எழுதி உழைத்துப் பணி செய்யும் சக்தியைக் கொடுக்க உங்களை வேண்டி, எல்லாம் வல்ல இறைவனது திருவடிகளைத் தொழுது பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் நன்றியுள்ள

சகோதரி,

வை. மு. கோதைநாயகி

ஒரு வருஷ சஞ்சிகையும் இதர நாவல்களும் இனமாக வேண்டுமா?

1. மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு, ஒரு வருஷ சஞ்சிகை இனம்.

2. எத்தனை புதிய சந்தாநேயர்களைச் சேர்த்து முன் பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை ரூபா விலையுள்ள நாவல் இனம்.

உதாரணமாக 4 சந்தா நேயர்களைச் சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கொடி இனம்.

17 APR 1939 MADRAS

புதிய சந்தா நேயர்களுக்கு!

16-வதாண்டுக்குச் சந்தாவைச் செலுத்திய பலர், தங்களுக்கு 15-வது ஆண்டில் வெளியான 3 நாவல்களையும் (வானக்குயில், ஜீவியச்சுழல், மாலதி) சந்தா விலைக்கே கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதால், அவர்களின் அவாவைப் பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டுவோர் உடனே ரூ. 1-8-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

A1228 1939-16

இதுவரை யாரும் அளிக்காத
நூதன வெகுமதி

அன்பர்களின் உதவிக்கு நன்றிசெலுத்தல் கடமையல்லவா?

16-வதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, புதுவருஷ சந்தாவைசெலுத்துவதுடன், புதிதாக ஒருவரைச் சந்தாதாரராகச் சேர்த்து அனுப்பும் சந்தாநேயர்களுக்குப் புதுவிதமான வெகுமதியளிக்க முன்வந்துள்ளோம். அதாவது:—அங்ஙனம் உதவும் அன்பரின் முழு விலாசத்துடன் 100 தாள்கள் கொண்ட "லெட்டர் பேபர் பாட்" ஒன்றை முற்றிலும் இனமாக அளிப்பதாகத் தீர்மானித்துள்ளோம்.

183030.

கற்பனை சித்திரம்!
கர்தல் களஞ்சியம்!

மந்தாகினி

காதல், சோகம், உண்மைத் தேசப் பணி, தியாக வாழ்வு முதலியவற்றை நன்கு விளக்கிக் காட்டும் அருமையான நாவல்.

வை. மு. கோதைநாயகி அம்மாள் முன்னுரையுடன்

விலை அணு 8

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

திரு. ராகவாசாரியர்
இயற்றிய நூல்கள்

துருவ வெண்பா	0	8
சம்பு ராமாயணம்	0	10
நீதி மஞ்சரி	0	5
திருமால் வெண்பா	0	3
சிவபிரான் துதி	0	4
ராஜ ராஜேச்வரி	(அச்சில்)	

ரூ. 1—8 முன்பணமனுப்புவோருக்கு 5 புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

ஜகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

புதிய பதிப்பு தயார்! உடனே முந்துங்கள்!!
இம்மாதிரி பதிப்பு இதற்குமுன் தமிழில் வெளிவந்ததில்லை!

"அனாதைப் பெண்"

டாக்கீ நாவலின் அழகிய உயரிய பதிப்பு

"அனாதைப் பெண்" டாக்கியிலிருந்து இப்பதிப்பில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 36 ஆப்டோன் படங்கள் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனல், புத்தகத்தின் விலையை மாத்திரம் அதிகரிக்கவில்லை யென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக!

இந்தப் புஸ்தகம் உங்கள் கைக்குப் பூஷணம்!
மனதுக்கு ஆனந்தம்! யாவர்க்கும் இனியதோர் விருந்து!

விலை ரூ. 1-4-0 தான்.

நாவலைப் படித்துப் படத்தைப் பாருங்கள்

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:
ஶாஸ்த்ரஜ்ஞாந யோகஜந்யஜ்ஞாநங்களைவிட
ஆயிரம்மடங்கதிஶயித்த
பகவத்ப்ரஸாதஜந்ய தத்வயாதாத்ம்யஜ்ஞாநவித்தமராய்
ப்ரபந்நஜநகூடஸ்த்தராய் எழுந்தருளியிருக்கும்

மஹாப்ரபாவரான

நம்மாழ்வார் அருளிச்செய்த

பகவதநுபவ பரீவாஹரூபமான, த்ராவிடவேதஸாகரஸாரமாகிய

திருவாய்மொழிக்கு

(1) திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறுயிரப்படி வியாக்யாநமும்

(2) வேதாந்தியான நஞ்சீயர் செய்தருளிய ஒன்பதினாயிரப்படி வ்யாக்யாநமும்

(3) பெரியவாச்சான்பிள்ளையின் திருக்குமாராகிய நயினாராச்சானது சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் செய்தருளிய பன்னீராயிரப்படி வியாக்யாநமும்

(4) மற்றை மூவாயிரங்களுக்கும் வ்யாக்யாநஞ்செய்தருளிய பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய இருபத்துநாலாயிரப்படி வியாக்யாநமும்

(5) நஞ்சீயர் சிஷ்யரான நம் பிள்ளையினிடத்து வடக்குத்திருவீதிப் பிள்ளை கேட்டபடியே பட்டோலைகொண்டு அங்ஙனமே வெளியிட்டருளிய ஈடுமுப்பத்தாறுயிரப்படி வ்யாக்யாநமும்

ஆக, ஐந்து வ்யாக்யாநங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் ஈடுமுப்பத்தாறுயிரப்படிக்கு அடையவளைந்தான் அரும்பதவுரை யென்றும், சீயர் அரும்பதவுரையென்றும், இரண்டு உரைகள் உண்டு.

இவ்வாறு, பெருமை பெற்ற இந்தப் பகவத் விஷயம் அச்சு முடிந்து இப்பொழுது கையிருப்பில் உள்ள ஸெட்டுகள் மிகச்சிலவே. விலையிலும் சகாயம் செய்யப்பட்டிருக்கிறது.

	ரூ.	அ.		ரூ.	அ.
முதற்பத்து	6	8	ஆறும்பத்து	6	0
இரண்டாம்பத்து	5	0	ஏழாம்பத்து	5	0
மூன்றும்பத்து	5	0	எட்டாம்பத்து	5	0
நான்காம்பத்து	5	0	ஒன்பதாம்பத்து	6	0
ஐந்தாம்பத்து	6	0	பத்தாம்பத்து	6	0

மேற்கண்ட பத்துக்களை ஒரே தடவையில் வாங்குபவர்க்கு (பைண்டு) 10-வால்யூம்கள் ரூபா. 45; 5-வால்யூம்கள் ரூபா. 40.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை,
19, தென்னண்டை மாட வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

பிரகடனம்.

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்புப் புஸ்தகங்கள்.

உரையின் தன்மை:—மூலம், பதவுரை, கருத்து, விசேடவுரை, பதப்ரயோசனம், புராணகதை, அணியிலக்கணம், இலக்கணக்குறிப்பு, யாப்பிலக்கணம் முதலியன விளக்கமாக எழுதப்பட்டிருக்கும்: தமிழுலகம் கொண்டாடற்குரிய அருமையுடைத்து.

கம்பராமாயணம்.		ரூ.	அ.	பை.
பாலகாண்டம் முழுவதும் உரையுடன்	...	5	0	0
அயோத்தியா காண்டம் ,,	...	5	0	0
ஆரணியகாண்டம் ,,	...	4	0	0
கிஷ்கிந்தாகாண்டம் ,,	...	4	8	0
சுந்தரகாண்டம் ,,	...	5	0	0
யுத்தகாண்டம் ,, 2-வால்யூம்	...	10	0	0
வில்லிபாரதம் சபாபருவம் உரையுடன்	...	3	0	0
ஷை உத்தியோகபருவம் உரையுடன்	...	2	8	0
ஷை கிருட்டிணன்தூது (தனி) உரையுடன்	...	1	8	0
ஷை வீட்டும துரோண கர்ண பருவங்கள் உரையுடன்	...	3	8	0
ஷை விராடபருவத்தில் நிரைமீட்சிச்சருக்கம் உரையுடன்		1	0	0
ஷை சல்லிய சௌப்திக பருவங்கள் உரையுடன்	...	1	8	0
பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப்ரபந்தம் உரையுடன்	...	3	8	0
நித்யாநுஸந்தாநம் தென்கலை	...	0	2	0
ஷை வடகலை	...	0	10	0
ஸ்தோத்ர பாடம் (க்ரந்தாக்ஷரம்)	...	0	8	0
நாலடியார் முழுவதும் உரையுடன்	...	2	0	0
சடகோபரந்தாதி உரையுடன்	...	0	12	0
சரசுவதியந்தாதி உரையுடன்	...	0	4	0
திருவேங்கடக்கலம்பகம் உரையுடன்	...	0	10	0
மதுரைக்கலம்பகம் உரையுடன்	...	0	10	0
அழகர்கலம்பகம் உரையுடன்	...	0	10	0
நாலாயிரதிவ்யப்ரபந்தம் (3-ம் பதிப்பு) தனித்தனியாயிரமாகவும் கிடைக்கும்.	...	3	8	0
ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் (2-ம் பதிப்பு)	...	2	8	0
யதீந்திரப்ரவணப்ரபாவம்	...	1	0	0
திருமந்த்ரார்த்தம் (மூமுக்ஷுப்படி வ்யாக்யாநம்)	...	1	8	0
நன்னூற்காண்டிகையுரை	...	1	8	0
சப்தகாதை வ்யாக்யானம்	...	0	4	0
திருப்பாவை வ்யாக்யாநம் ப்ரமாணத்திரட்டுகளுடன்	...	2	0	0
விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்	...	1	0	0
திருக்கச்சிநம்பிப் ப்ரபாவம்	...	0	4	0
திருக்கருவைக் கலித்துறையந்தாதி உரையுடன்	...	0	12	0
திருக்கருவை வெண்பாவந்தாதி உரையுடன்	...	0	6	0
ஸ்ரீவசனபூஷண வ்யாக்யாநம் ப்ரமாணத்திரட்டுஸஹிதம்	...	3	0	0
திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் இவைகளின் மூலமும் பரிமேலழகருரையும் குறிப்புரையுடன்	...	5	0	0

ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 16	பகுதான்ய ஸூ மாசி மீ மார்ச் 1939	இதழ் 3

திருமால் துதி

நாரா யணனே நமவென்றுனை யடைந்தேன்
ஆராயி னற்கதிநீ யாதலினுற்—றீராத
வென்வினை தானீங்க வெழிற்கமல மெல்லடியென்
சென்னிக் கணிக சிறந்து. 1.

சிறந்த பெரும்புகழ் சேர்தேவர்க்கா நீசர்
இறந்து படநூறி யிலங்கை—அறந்திகழும்
வீடணற்குத் தந்த விறலோனே யென்னெஞ்சத்
தீடனைக ணீங்க விரங்து. 2.

இரக்கமுனக் குண்டோ வெம்பெருமா னென்பால்
கரக்கும்ப மால்யானை காத்துப்—பரக்கும்
சிலைமழையை முன்னஞ் சினையாற் றடுத்தாய்
நிலவுமிழுஞ் சக்கரத்தாய் நீ. 3.

—திரு. ராகவாசாரியர்.

வெற்றி யளிப்பது அஹிம்ஸையே

அபேதவாதிகளுக்கு நேருவின் பதில்

"ஏற்கனவே சிக்கலாயிருக்கும் நிலைமையை இன்னம் சிக்கலாக்கக் கூடாதென்பதற்காக, காங்கிரஸ் அக்ராசனர் தேர்தலால் ஏற்பட்ட நிலைமையைப்பற்றி நான் அதிகமாக ஒன்றும் சொல்லாமலிருந்தேன். என் மனதில் எப்போதும் இதே எண்ணம்தான். ஆகவே நாம் ஐக்கியமாக ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தடையாயிருக்கக்கூடிய எதுவும் நடைபெறக்கூடாதென்று தடுப்பதற்கு, என்னால் முடிந்தவரை முயற்சித்தேன். இதனால்தான் ஸ்ரீ. சுபாஷ்போஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதை நான் ஆதரிக்கவில்லை. ஏனென்றால், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நான் அறிவேன்.

ஸ்ரீ. சுபாஷ்போஸ் நடத்திய தேர்தல் பிரசாரத்தில், காரியக் கமிட்டியிலுள்ள தன்னுடைய சகபாடிகளைப்பற்றிச் சொன்ன சில விஷயங்கள் எனக்கு ஆச்சரியத்தையும், மனோ வேதனையையும் அளித்தன. எனக்குத் தெரிந்தவரையில் அவைகளுக்கு ஆதாரமே கிடையாது. அக் குற்றச்சாட்டுகள் உண்மையா யிருந்தால், இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் அல்லது ஈடு படாவிட்டாலும் ஆதரவு கொடுத்தவர்களும், காங்கிரஸ் நிர்வாகத்தை நடத்தத் தகுதியற்றவர்களாகிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையல்லவென்றால், அவைகளை நிபந்தனையின்றி வாபஸ் பெற்றுக் கொள்வதுதான் நியாயமாகச் செய்யவேண்டியது. இதைத் தவிர வேறு குறுக்கு வழி ஒன்றும் கிடையாது.

பரஸ்பரம் சந்தேகத்துடனும், அவநம்பிக்கையுடனும் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் விவகாரங்களை நடத்துவதென்பது ரொம்பவும் முறையற்ற காரியம். சில முக்கியமான விஷயங்களில் அவருடைய அபிப்பிராயங்களை என்னால் ஆதரிக்க முடியவில்லை. ஆகவே, நிலைமை மேற்கொண்டு தெளிவாக வேண்டியது அவசியமென்று நான் கருதினேன். துரதிர்ஷ்டவசமாக அம்மாதிரி எதுவும் செய்யப்படவில்லை. ஸ்ரீ. போஸுக்குத் தேக அசௌக்கியம் ஏற்பட்டிருப்பதால், நாங்கள் அவருடன் விவாதம் நடத்தவும் முடியவில்லை.

இப்போதுள்ள காரியக் கமிட்டி கலைந்துவிட்டது. ஆகவே காங்கிரஸ் அக்ராசனர், தன் இஷ்டம்போல் காரியக்கமிட்டியை அமைத்துக்கொண்டு, தனக்குப் பிடித்தமான வேலைத் திட்டங்களைக் காங்கிரஸ் முன் சமர்ப்பிக்கலாம். என்னுடைய தனிப்பட்ட முறையில் கூட, நான் அக்ராசனருக்கு உதவியாயிருக்க முடியாது. அந்தரத்தில் நின்றுகொண்டு நாம் தீர்மானங் [illegible] முடியாது. சுற்றுணர்ச்சி என்னவென்பதைக் கவனிக்க வேண்டும். இவைகளை யெல்லாம் பார்க்கும்போது எனக்குப் பிடித்தமாயில்லை.

மேலும், உள்ளூர் காங்கிரஸ் தகராறுகளை, வழக்கம்போல் சமாளிப்ப
தற்கு விடாமல், நேரில் மேலே இருந்தே தீர்க்கும் சுபாவமும் ஏற்பட்டு
வருகிறது. இதனால் குறிப்பிட்ட சில கோஷ்டிகளும், கக்ஷிகளும் ஆதரிக்
கப்படுவதாக ஆகிறது. இதனால் குழப்பம் அதிகமாகி, காங்கிரஸ் வேலை
தடைபடுகிறது. இந்தப் புதிய முறைகளால் உள்ளூர் தகராறுகள் தலைமை
ஸ்தாபனத்திற்கும் பரவுவதுதான் ஏற்படும் பலன். நான் நீண்டகாலமாக
காங்கிரஸுடன் சம்பந்தப்பட்டிருக்கிறேன். ஆனால், எந்தக் குறிப்பிட்ட
கோஷ்டியுடனும் நான் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டது கிடை
யாது. மகத்தான இந்த ஸ்தாபனத்தில் நான் ஒரு ஊழியனா யிருந்திருக்
கிறேன். அதுவும் கஷ்டமான காரியமே.

நான் பதவி வகித்திருந்த காலத்தில் பல சமயங்களில் ராஜினாமா
செய்யவும் நினைத்தேன். ஏனென்றால், பதவிப் பொறுப்பு இல்லாமலிருந்
தால், காங்கிரசுக்கு இன்னும் அதிக சேவை செய்ய முடியுமென்று கருதி
னேன். ஆனால், மகத்தான சம்பவங்கள் நடக்கும் இந்தக் காலத்தில், நம்
முடைய ஐக்கியத்தைக் குலைக்கக்கூடிய முறையில் நம்முடைய சொந்த
அபிப்பிராயம் ஏதாவது இருந்தால், அந்த ஐக்கியத்தைக் காப்பாற்றுவதற்
காக, சொந்த அபிப்பிராயங்களை அடக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக,
நான் எதுவும் செய்யாமலிருந்தேன்.

எனக்கு அபேதவாதத்திலும், ஜனநாயகத்திலும் தீர்மானமான நம்பிக்கை
யுண்டு. ஆனால், சென்ற 20 வருஷங்களாக மகாத்மா காந்தி வெற்றி
கரமாக அனுஷ்டித்து வரும் அஹிம்ஸைக் கொள்கையை நான் மனப்பூர்வ
மாக ஏற்றுக்கொண்டுவிட்டேன். பாமர மக்களிடமிருந்துதான் நாம்
பலம் பெறமுடியுமென்பது என்னுடைய திடமான நம்பிக்கை. ஆனால்,
போராட்டத்திற்கோ, புதிய உலகத்தை நிர்மாணிக்கும் வேலைக்கோ,
வேண்டிய பலம் கட்டுப்பாடான, அமைதியான பலமா யிருக்கவேண்டும்.

இன்று நம்மிடம் சக்தி இருக்கிறது. கட்டுப்பாடான முறையில் நமக்கு
அதை உபயோகிக்கத் தெரிந்தால் சுதந்தரத்தை அடைந்துவிடுவோம்.
அக்ராசனர் தனக்குப் பிடித்தமான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டு
மென்றும், தன் கொள்கையை ஆதரிப்பவர்களிடையே யிருந்து அக்ராசனர்
தன் காரியக் கமிட்டியை அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும்
சொல்லுபவர்களின் அபிப்பிராயத்தை நான் அங்கீகரிக்கிறேன்.

நமக்குள்ளேயே நெருக்கடி ஏற்பட்டு விட்டது. இதன் மூலமாக
வாவது, நாம் நிலைமையை நன்றாக அலசிப் பார்த்து, பலன் பெற முயற்சிக்க
வேண்டும். அர்த்தமில்லாத வார்த்தைகளை வேண்டிய அளவு உபயோகித்
தாய்விட்டது. இப்போதையை நிலைமையிலிருந்து புத்திசாலித்தனமாக
நாம் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொண்டால், எதிர்காலத்தைப்பற்றிக்
கவலைப்படவேண்டிய அவசியமில்லை யென்றே நான் கருதுகிறேன்.
நெருக்கடி வந்தால், நாங்கள் எப்போதும்போல், ஒற்றுமையுடன் அதை
சமாளிப்பதற்குத் தயாராயிருப்போம்.”

உங்கள் வேலைத் திட்டத்தை நடத்திக்காட்டுங்கள்

ஸ்ரீ போஸுக்குப் படேல் முதலியோர் பதில்

சர்தார் வல்லபபாய் பட்டேல், மௌலானா அபுல்கலாம் ஆஸாத், பாபு ராஜேந்திர பிரசாத், ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, ஸ்ரீ. புலாபாய் தேசாய், டாக்டர் பட்டாபி சீதாராமையா, ஸ்ரீ. சங்கரராவ் தேவ், ஸ்ரீ. ஹரிகிருஷ்ண மெஹதாப், ஆசாரிய கிருபளானி, கான் அப்துல் கபார் கான், ஸ்ரீ. ஜெயராம்தாஸ் தௌலத்ராம், சேத் ஜம்னுலால் பஜாஜ் ஆகிய 12 மெம்பர்களும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து பிப்ரவரி மாதம் 22-ந் தேதி யன்று ராஜிநுமா செய்துவிட்டார்கள்.

இவர்கள் தங்கள் ராஜிநுமாவை அறிவித்துக் காங்கிரஸ் அக்ராசனருக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றனர்.

''அன்புள்ள சுபாஷ்,

உங்கள் தேக அசௌக்கியத்தைக் கேட்டு நாங்கள் மிகவும் மன வருத்தமடைந்தோம், உடம்பு இப்படி இருக்கும்போது நீங்கள் வார்தாவுக்கு எப்படி வர முடியும்? சீக்கிரத்தில் உங்களுக்குச் சொஸ்தமாய்விடுமென்று நம்புகிறோம். சமீபத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றி நாங்கள் நன்குக ஆலோசித்தோம். அக்ராசனர் தேர்தல் சம்பந்தமாக நீங்கள் விடுத்த பல அறிக்கைகளையும் வாசித்தோம். உங்கள் அறிக்கைகளைப்பற்றி நாங்கள் அபிப்பிராயம் சொல்லி யிருப்போம். ஆனுல், துரதிர்ஷ்டவசமாக உங்களுக்குத் தேக அசௌக்கிய மேற்பட்டுவிட்டதாலும், அதனுல் நமது வார்தா கூட்டம் நடைபெருததாலும், எதுவும் அபிப்ராயம் சொல்லாமல் நிறுத்திக் கொள்ளுகிறோம். அடியிற் கையொப்பமிட்ட நாங்கள் காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநுமா செய்கிறோமென்பதை மட்டும் இப்போது தெரிவித்தால் போதுமென்று கருதுகிறோம். இத்துடன் எங்கள் மெம்பர் பதவிகளை ராஜீநாமா செய்கிறோம்.

உங்களுடைய அபிப்பிராயத்திற்கு உகந்தவிதத்தில், நீங்கள் காரியக் கமிட்டியை அமைத்துக்கொள்ள விட்டுவிட வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஸ்பஷ்டமான ஒரு வேலைத் திட்டத்துடன் தேசத்தில் காரியங்களை நடத்தவேண்டிய காலம் வந்துவிட்டதென்று நாங்கள் நினைக்கிறோம். ஒன்றுக்கொன்று பொருந்தாத பலகோஷ்டிகள் சேர்ந்து சமரசம் செய்து கொண்டு ஒரு கொள்கையை நடத்த முடியாது. ஆகையால், மெஜாரிடி அபிப்ராயத்தின் பிரதிநிதிகளாக ஒரே விதமான அபிப்பிராயமுடையவர்களை நீங்கள் காரியக் கமிட்டியில் எடுத்துக் கொள்ளுவதுதான் சரி. உங்களுடைய கொள்கைகளில் நாங்கள் ஆதரிக்கக் கூடியவைகளாயிருப்பவைகளுக்கு எங்களுடைய ஒத்துழைப்பை அளிப்போமென்று உறுதி கூறுகிறோம். பொது ஜனங்களின் சந்தேகங்களைத் தணிப்பதற்காக, இந்தக் கடிதத்தை நாங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறோம்.''

அநுபவக் குறிப்புக்கள்

—அச்வின் குமார்

சில பட முதலாளிகள், பத்திரிகைக்காரர்களுக்கும், இதர பட வியாபாரிகளுக்கும் தனியாகக் காட்சி வைப்பதால் ஏற்படும் செலவை மிகுதிபடுத்தக் கருதி, பொதுக் காட்சியுடனேயே நடத்தி, ஜம்பமாகப் பலருக்கு அழைப்புக் கடிதம் அனுப்புகிறார்கள். ஆனால், தியேட்டரிலோ வந்தவர்களுக்கு நிற்கவாவது இடமிருக்கிறதா என்று கவனிப்பதற்குக்கூட யாரும் தலை காட்டுவதில்லை. அதிதி உபசாரத்தில் பெயர் பெற்ற பரதநாட்டின் நிலைமை இந்த விஷயத்திலும் சீர்கெட்டு விட்டது.

பட்டம், பதவி வகித்துள்ளோரின் தலைமையில் திறப்பு விழா நடைபெறுமென்று பிரமாதமாக விளம்பரஞ் செய்து, அவர்கள் பூஷித்துப் பேசுவார்களென்றும் அதனால் கும்பல் நிறைய வருமென்றும் சிலர் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், தலைமை வகிப்போரில் சிலர், சம்பந்தமில்லாத விஷயத்தைப்பற்றியும் சிலர், படத்திலுள்ள குறைகளைப் பற்றியும் பேசிவிடின், ஏமாற்றமடைந்து வருந்துகிறார்கள். படத்திற்கு உண்மையான நீடித்த விளம்பரம், பார்த்து ரஸிப்பவர்களாலேயன்றி, படாடோபத்தினால் அல்லவென்பதை அறியும் காலம் என்று வருமோ?...

எவ்வளவுதான் தியாகஞ் செய்திருந்தாலும், பதவி மோஹம் பிடித்துவிடின், அந்த வெள்ளத்தில் தியாகாக்னி அணைந்து, அடித்துக்கொண்டு போகப்படுகிறது. பிறகு, சிந்தித்துப் பலனென்ன?

யாருடைய நன்மதிப்பைப் பெற்றதனால் நாம் முன்னணியில் நிற்கிறோமென்பதை மறந்து, அன்னவரின் இஷ்டத்திற்கு நேர் விரோதமாக நடந்துவிட்டு, வெளிக்கு மாத்திரம் அவரைப் பூஷித்துப் பேசுவது...உண்மை வெளியான பிறகு விழித்துத் தலையைச் சொறிவது, முறிந்த பாலின் கதியே.

கோர்ட்டு, கச்சேரி முதலிய இடங்களுக்குச் செல்கையில், அந்தந்த இடத்திற்குத் தக்க முறையில் உடைகளை யணிந்து செல்வதுபோல பகவத் ஸந்நிதானத்திற்குப் போகும்போது ஆடம்பரமற்ற உடையணிந்து அடக்க ஒடுக்கமான நடையிலிருக்க வேண்டுமென்ற எண்ணம் பலருக்கு உதிக்காததேனோ? பேசுந் தெய்வமா யிருந்தாலல்லவோ நம்மைக் கண்டிக்குமென்ற தைரியம்போலும்!

நாஸ்திகம் மிகும் இக் கலிகாலத்தில் பாமர மக்களுக்கு எந்தவிதத்திலாவது சிறிது பக்தி யூட்ட வேண்டுமென்றே பகவான் பல ரூபங்களெடுத்துப் பல ஊர்களில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளி இருக்கிறார் என்பது பெரியோர் வாக்கு. அந்த ஸந்நிதானங்களை நிர்வகிக்கும் புண்யாத்மாக்களோ சிறு குழந்தைகளுக் கிருக்கும் பக்தி கூட இல்லாமல், குரங்காட்டியைப் போல விக்ரகத்தை ஆட்டி வைக்கிறார்கள். மேலுக்கோ பக்தியில் கரைந்து ஆழ்ந்தவர் போல நடிப்பது.

ஒருவருக்கு, சாதாரணமாக கிடைக்கமுடியாத வெகு உன்னத பதவியைப் பெற்றுள்ள செய்தியும், திடீரென்று பேரிடி விழுந்ததுபோன்ற துக்ககரமான செய்தியும் ஒரே சமயத்தில் கிடைத்தால், அவரது மனம் எந்த நிலைமையை அடையும்?...கைதவறியதைப் பற்றிக் கவலையுற்றுப் பயனென்ன? இருளை யகற்றி, ஒளியைக் கண்டு மனம் தேறுவதே.

வெளிநாட்டுச் செய்திகள்

பிரிட்டனுக்குப் பெரிய யுத்தக் கப்பல்கள்

இரண்டு 40,000 டன் யுத்தக் கப்பல்களைக் கட்ட நான்கு பெரிய கம்பெனிகளைச் சர்க்கார் நியமித்திருக்கின்றனர். இந்தக் கப்பல்களில் 16 அங்குல பீரங்கிகள் இருக்கும்.

அதிவேகமாய்ப் போகும் யுத்தக் கப்பல்

உலகத்திலேயே மிகவும் வேகமாய்ச் செல்லக் கூடிய, "ஐந்தாவது ஜார்ஜ்" என்ற 35,000 டன் யுத்த கப்பலை 6-வது ஜார்ஜ் மன்னர் இன்று கடலில் வெற்றிகரமாய் மிதக்க விட்டார்.

ரூஸ்வெல்ட் போக்கு

நாஜிகளின் குற்றச் சாட்டு

உள் நாட்டுக் கஷ்டங்களிலிருந்து ஜனங்களின் கவனத்தைத் திருப்பி விட வேண்டுமென்ற நோக்கத்துடன், ஐரோப்பா யுத்தத்தில் ஈடுபடும்படி ரூஸ்வெல்ட் நிர்ப்பந்திப்பதாகவும், ஆயுத வர்த்தகத்துக்கு இலாபம் கிடைக்கப் பாடுபடுவதாகவும் நாஜிகள் கூறுகின்றனர்.

பெல்ஜியத்துக்குப் புதிய மந்திரி சபை

12 நாட்களாக சர்க்கார் இல்லாமலிருந்த பிறகு, புது மந்திரி சபை அமைக்கப்பட்டுள்ளது. பியேர்லாட் என்ற கத்தோலிக்கர் பிரதம மந்திரியாகிறார். சோஷலிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த ஸ்பாடான் வெளி நாட்டு மந்திரி. பழைய மந்திரிகளில் இருவர்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

வல்லரசுகளுக்கு ஜப்பான் எச்சரிக்கை

ஸர்வதேசக் குடியேற்றத்திலும் பிரெஞ்சு குடியேற்றத்திலும் பயங்கர இயக்கத்தைச் சமாளிக்கும் பொறுப்பை, இனி ஜப்பானே நிர்வகிக்குமென்று ஜப்பானிய யுத்த மந்திரி ஜெனரல் இடகாகி, ஜப்பானிய பார்லிமெண்டில் தெரிவித்தார்.

வெளி நாட்டு மந்திரி அரீடாவும் ஏறக்குறைய அதே தோரணையில் பேசினார். ஸர்வதேச குடியேற்ற அதிகாரிகள் சட்டத்தை நிலை நாட்டுவதில் இனியும் தவறினால், ஜப்பானே போதிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டி நேரிடுமென்று அவர் கூறினார். இரண்டு தினங்களுக்குமுன் சென்று என்ற அதிகாரி கொல்லப்பட்டதைப் பற்றித்தான் அரீடாவும் இடகாகியும் மேற்கண்டவாறு கூறியது.

தென் ஆப்பிரிக்காவின் நிறத் திமிர்

இந்தியர்களை ஒதுக்கி வைத்துவிடும் புதிய மசோதாவை ஆட்சேபித்து இந்தியர்கள் ஒரு கண்டனக் கூட்டத்தை நடத்தினர். ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி விசாரிக்க, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

பிரிட்டிஷ் வர்த்தக பேரங்கள்

ரஷ்யாவுடன் இருந்துவரும் உடன்படிக்கையை மாற்றியமைப்பது பற்றிப் பேச, பிரிட்டிஷ் வெளி நாட்டு வர்த்தக இலாகா காரியதரிசி ஸ்ரீ. ஹட்ஸன், மார்ச் கடைசியில் மாஸ்கோ போகிறாராம்.

மேலும் யூதர்களுக்குத் தொல்லை

பிப்ரவரி 22-ந் தேதி முதல் 2 வாரங்களுக்குள் ஜெர்மனியிலுள்ள எல்லா யூதர்களும் தங்களிடமுள்ள தங்கம், வெள்ளி, பிளாடினம், நவ ரத்தினங்கள், முத்துக்கள் முதலியவற்றைச் சர்க்காரிடம் ஒப்படைத்து விடவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சியானோ போலந்து விஜயம்

போலந்தின் ஸ்தானாதிபதி, இத்தாலிய வெளிநாட்டு இலாகாவைச் சேர்ந்த பல அதிகாரிகள் முதலியோருடன், இத்தாலிய வெளிநாட்டு மந்திரி கவுண்ட் சியானோ, போலந்தின் தலைநகரான வார்ஸாவுக்குப் புறப் பட்டார்.

பிராங்கோவுக்கு ஹாலந்து அங்கீகாரம்

ஜெனரல் பிராங்கோவுக்கு, சட்ட பூர்வமான அங்கீகாரத்தை யளிப்ப தென்று, டச் சர்க்கார் தீர்மானித்துவிட்டனர்.

மதிப்புரை

ஆடல் பாடல் ஆண்டு மலர்

"ஆடல் பாடல்" பத்திரிகையின் நான்காவது ஆண்டு மலர் வரப் பெற்றோம். வழக்கம்போல் இம்மலர் நல்ல ஆர்ட் பேப்பரில் பல படங்க ளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீ. எம். எஸ். சுப்ரமணிய ஐயர், ஸ்ரீ. ஏ. வ, சோமயாஜுலு, பி. ஏ., ஸ்ரீ. எல். முத்தையா பாகவதர், ஸ்ரீ. எப். ஜி. நடேச ஐயர் முதலியோர் கட்டுரைகள் எழுதி யிருக்கின்றனர். வினிமாத் துறையில் அபிருசியுள்ள ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டிய மலர்தான் என்பதில் ஐயமில்லை.

"ஆடல் பாடல்" 313, தம்பு செட்டித் தெரு, சென்னை. என்ற விலாசத்திற்கு, அணா ஆறு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ் நேசன் : : ஆண்டு மலர்

[அணா 8. சென்னை ஆபீஸ், 187, மௌண்ட்ரோடு.]

'ஒருவர் தன்னுடைய சாமர்த்தியத்தினால் எத்தகைக் காரியத்தையும் சாதிக்கலாம்' என்ற வாக்கின்படி மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூரில் வெளியாகும் தினசரிப் பத்திரிகையான தமிழ்நேசன் பத்திராதிபர், காலஞ் சென்ற ஸ்ரீமான் நரஸிம்மய்யங்கார், வெளி நாட்டிலும் தம் திறமையால் பத்திரிகையை நடத்திப் பெரும் புகழும் சீர்த்தியும் அடைந்ததோடு பொது மக்களின் அன்பிற்கும் பாத்திரமானார். தமிழர் செய்த துர்ப்பாக்கியமே அத்தகைய பெரியார் காலமாகிவிட்டார். எனினும் அவருடைய ஆன்மா சாந்தியாகும் முறையில் அப் பத்திரிகையை, அவரைச் சார்ந்த நிர்வாகிகள் அவர் நடத்தியதற்கு இம்மியளவும் குறையாமல் இன்னும் அதிகப்படியான உயர்ந்த முறையில் நடத்தி வருவதானது மிகவும் போற்றத்தக்கதாகும். தற்போது வெளிவந்துள்ள ஆண்டு மலரே அதற்கு நிதர்சனமாக அமைந்திருக்கிறது.

தாய்நாட்டைச் சேர்ந்த பல அறிவாளிகளின் கட்டுரைகளுடனும், தற்காலத்திற்கு ஏற்ற வகையில் விஷயங்களுடனும் பல படங்களுடனும் வெகு நன்றாக அமைந்திருக்கிறது. இந்த ஆண்டு மலரை ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படித்து அவர்களுக்கு உற்சாக மளிக்கவேண்டியது கடமையாகும். இதன் மூலமாகத் தாய் நாட்டுக்கும் வெளி நாட்டிலுள்ள தமிழர்களுக்குமுள்ள தொடர்பு நன்கு விளங்குகிறது.

மா த ங் கி னி

[அல்லயன்ஸ் கம்பேனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரு. 1.

'ஜகன்மோகினி' ஆபீஸிலும் கிடைக்கும்.]

ஸ்ரீ. பங்கிம்சந்த்ர சட்டோபாத்யாய இயற்றியது. ஸ்ரீ. டி. என். குமார ஸ்வாமியால் மொழிபெயர்க்கப்பட்ட இந்த அருமையான நாவல் ஏற்கனவே ஆனந்த விகடனில் தொடர் கதையாக வெளிவந்துள்ளதை, இப்பொழுது முழு புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. முன்பு வந்த படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன், இவர்களின் வழக்கப்படி உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு அழகிய மேலட்டையுடன் கூடியது. ஸ்ரீ பங்கிம் சந்திரரின் நாவல்களில் சிறந்த இதை ஏற்கனவே படிக்காதவர்கள் அவசியம் படித்து இன்புறவேண்டும். தனி இதழ்களில் படிப்பதைவிட மொத்தமாகக் கதையைப் படிப்பது வேறு ஆனந்தம்.

உள்நாட்டுச் செய்திகள்

ராஷ்டிரபதி ரதத்துக்கு 52 யானைகள்

திரிபுர காங்கிரஸ் செஷன் அக்ராசனர் பாபு சுபாஷ் சந்திரபோஸ் மார்ச் மாதம் 7-ந்தேதி ஸ்பெஷல் ரயிலில் மதன்மஹால் ஸ்டேஷனுக்கு வந்து சேருவாரென்றும், அங்கிருந்து 52 யானைகள் பூட்டிய ரதத்தில் காங்கிரஸ் நகருக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவாரென்றும் தெரிகிறது.

முஸ்லிம்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் விசேஷ சலுகை

சில உத்யோகங்களுக்கு நியமிக்கப்பட விரும்பும் அபேக்ஷகர்கள், எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில், "எ" குரூப்பிலுள்ள பாஷைப் பரீக்ஷையில் 100க்கு 40 மார்க்குகளாவது வாங்கியிருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. முஸ்லிம் வகுப்பினருக்கும் ஹரிஜனவகுப்பினருக்கும் இவ் உத்தியோகங்கள் கிடைக்க அதிக சந்தர்ப்பம் ஏற்படும்பொருட்டு, அவ்விரு வகுப்பினர் விஷயத்தில் சர்க்கார் விதிவிலக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் பாஷைப் பரீக்ஷையில் 100-க்கு 35 மார்க்குகள் வாங்கியிருந்தால் போதும். இந்த விதிவிலக்குச் சலுகை 1940 டிசம்பர் முடிவு வரை நீடிக்கும் என்று சென்னை சர்க்காரின் விளம்பர மந்திரி இலாகா அறிவிக்கிறது.

சர். எஸ். வரதாசாரியர்க்குப் பதவி

சென்னை ஹைகோர்ட் நீதிபதி, சர். எஸ். வரதாசாரியார், பெடரல் கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்திய சட்ட சபை—சிம்லா செல்லாவிட்டால்

ஸ்ரீ. கே. சந்தானம், அசெம்பிளி செஷன் சிம்லாவில் நடப்பதற்குப் பதிலாக டில்லியிலேயே நடந்தால் செலவில் எவ்வளவு ரூபாய் குறையுமென்று கேட்டார். இதற்கு சர். என். என். சார்க்கார் பதிலளிக்கையில், 1925-ல் கணக்குப் பார்த்தில், ரூ. 50,000 மிச்சமாகுமெனத் தெரியவந்ததென்றார்.

காஷ்மீருக்குச் சீர்திருத்தம்

"இப்பொழுது சமஸ்தான அசெம்பிளியில் 33 தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும், 42 நியமன மெம்பர்களுமிருக்கிறார்கள். இந்த சீர்திருத்தத்தின்படி, 40 தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும், 35 நியமன மெம்பர்களும் இருப்பார்கள். அசெம்பிளிக்கு ஒரு உப சபாநாயகரும் இருப்பார். இவர், மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மந்திரிகள், மகாராஜாவுக்கே ஜவாப்தாரிகள். மந்திரி சபைக்கும் சமஸ்தான அசெம்பிளிக்

கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டு மென்பதற்காக, மந்திரிகளுக்கு அசெம்பிளி மெம்பர்களிலிருந்து உதவி காரியதரிசிகள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் தகுந்த 'கௌரவச் சம்பளம்' கொடுக்கப்படும். அசெம்பிளியில் விவாதிக்கப்படும் விஷயங்கள் சம்பந்தமான வேலைகளை மாத்திரம்தான் இவர்கள் கவனிக்கவேண்டும். வரி மசோதாக்கள் இனி அசெம்பிளியில் சமர்ப்பிக்கப்படும். இது சம்பந்தமாக எந்த முடிவுக்கும் வர அசெம்பிளிக்கு உரிமையுண்டு. அந்த முடிவுகள் மந்திரி சபைக்கு அனுப்பும் சிபார்சுகளாகவே கருதப்படும். அதை ஏற்கவோ, நிராகரிக்கவோ மந்திரி சபைக்கு உரிமையுண்டு" என்று மகாராஜாவின் பிரடகனம் தெரிவிக்கின்றது.

விமானப் படையில் இந்தியர் சேரத் தடை

பார்லிமெண்டில் ஆர். ஏ. எப். என்ற விமானப் படைக்கு, குடியேற்ற நாட்டினர் செய்யும் உதவி பற்றி விமான மந்திரி சர். கிங்ஸ்லே உட்ஸ் விடுத்த அறிக்கையைக் கவனித்தாரா வென ஸ்ரீ. கே. சந்தானம், ராணுவ இலாகா காரியதரிசி ஸ்ரீ. ஓஜிலிவியைக் கேட்டார். அவர் "ஆம்" என்றார். கே:—"பயலட்டு" (விமானம் ஓட்டுபவர்களாக) ஆக குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் நூற்றுக்கணக்கான வாலிபர்களுக்குப் பிரிட்டனில் பயிற்சியளிக்கப் படுவது வாஸ்தவம் தானா? பதில்:—விமான மந்திரி பிரசங்கத்தில் உள்ளதைத் தவிர, சர்க்காருக்கு வேறு தகவல் கிடையாது. கே: இந்தியா இம்மாதிரி வேண்டுமெனக் கேட்டதா? ப: இல்லை. கே: மற்றவர்களைப் போல இந்திய வாலிபர்களும் இதில் சேரலாமா? ப: கூடாது. கே: எதற்காக இந்த வித்யாசமான நடத்தை? ப: இது பிரிட்டிஷ் தற்காப்புப் படையாதலால் சுத்தமான பிரிட்டிஷ் ரத்தம் ஓடும் வெள்ளையருக்குத்தான் இப்பயிற்சி யளிக்கப்படும். ஸ்ரீ. பிரகாசர்:—"ரத்தசுத்த"த்தை எப்படி கண்டுபிடிப்பீர்கள்? ப:—இந்தக் கேள்விக்கு நோட்டீஸ் வேண்டும்.

தேசீயக் கொடி—சர்க்கார் கட்டளை

ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தேசீயக் கொடி ஏற்றவேண்டு மென வற்புறுத்தப் படுவதாகச் சில விஞ்ஞாபனங்கள் வந்ததின் பேரில், எப்போதாவது விசேஷ காலங்களில், கொடியேற்றமோ அல்லது அலங்காரங்களோ செய்ய வேண்டுமானால், இது சம்பந்தமான சாமக்கிரியைகளை ஸ்தல ஸ்தாபனங்கள் தங்களிடமே வைத்துக்கொண்டு, இவைகளைக் கேட்கும் பள்ளிக்கூடங்களுக்குமட்டும் கொடுக்கலாம் எனச் சர்க்கார் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

மாஜி இந்திய கவர்னருக்குப் பதவி

இந்திய சர்க்கார் வர்த்தக மெம்பர் பதவியை ஏற்க ஏப்ரல் மாதம் இறுதியில் இந்தியாவுக்குத் திரும்பும் சர். ஏ. ராமசாமி முதலியாருக்குப் பதிலாக 1936-ம் வருஷம் ம. மா. ஆக்டிங் கவர்னராக இருந்த, டாக்டர் ஈ. ராகவேந்திர ராவை, இந்தியா மந்திரி லார்டு ஜெட்லண்ட் தமது ஆலோசனை கர்த்தாவாக நியமித்துள்ளார்.

பம்பாயில் பூர்ண மதுவிலக்கு

அஹமதாபாத்தில் இப்போது அமுலிலுள்ள மதுவிலக்குமுறை இன்னும் 2 தாலூகாக்களில் அமுலுக்கு வரும். பக்கத்திலுள்ள பரோடா சமஸ்தானமும் ஒத்துழைக்க முன் வந்திருக்கிறது. பம்பாய் நகரம், ஸால்ஸெட் தீவு, டிராம்பே தீவு ஆகிய மூன்றிலும் மதுவிலக்கு அமுலுக்கு வரும். ஒரு வருஷத்துக்கு இந்த மதுவிலக்குத் திட்டத்தால் சர்க்கார் வருமானம் 120 லக்ஷம் குறைவுபடும். மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தால் புது வரிகள் ஏற்படுகின்றன வென்று கருதுவது தவறான மனப்பான்மையாகும். மதுவிலக்கானது, குடிப் பழக்கத்துக் கிரையாகும் வகுப்பாருக்கு மட்டுமல்லாமல், சமூகம் முழுதுக்குமே நன்மை யளிப்பதாகும். ஆகையால், சமூகம் முழுதுமே இப் பெரிய சீர்திருத்தத்தால் ஏற்படும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். பம்பாய் நகரில் மதுவிலக்கு 1939 ஆகஸ்ட் 1ந் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

பர்த்வானில் வரி கொடா இயக்கம்

கால்வாய் வரி சம்பந்தமாக பர்த்வான் ஜில்லாவில் விவசாயிகளின் கிளர்ச்சி மும்முரமாக விருக்கிறது. சமீபத்தில், அயுஷா என்ற கிராமத்துக்கு அருகிலுள்ள ஒரு சத்யாக்கிரக முகாமின் தலைவர்கள் உள்பட 18 தொண்டர்கள் கைதியாயினர். கைதியானவர்கள் ஒரு பஸ்ஸில் போலீஸ் பந்தோபஸ்துடன் பர்த்வான் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப் பட்டனர். கால்வாய் வரி வசூலுக்காக ஜப்தி முறையை அதிகாரிகள் அனுசரித்தால், சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக, சமீபத்தில் கிராமவாசிகள் தீர்மானித்தார்கள். முன்பு வரி கொடுக்க மறுத்த ஒருவரின் கால் நடைகள் ஜப்தியாயினவாம்.

ஹைதராபாத் சீர்திருத்தம்

"அஸாப் ஜாஹி ராஜவம்சம் இதுவரை மத விஷயத்தில் சகிப்புத் தன்மையைக் காட்டியிருக்கிறது; நடு நிலைமையும் வகித்தே வந்திருக்கிறது. இந்தப் பழக்கம், எந்த விதத்திலாவது மாற்றப்பட்டிருக்கிறது என்பதை நிரூபிக்க எதுவும் நடந்து விடவில்லை. அதே பழக்கம் இன்னும் இருப்பதையும், முன்பு இருந்ததைவிட அபிவிருத்தி யடைந்திருப்பதையும் சீர்திருத்தங்கள் வெளியான பின் நீங்கள் மேலும் தெரிந்து கொள்ளலாம். அந்த அறிவிப்பில் அரசியல் சீர்திருத்தங்களோடு, மத சம்பந்தமான குறைகளை நிவர்த்திக்க ஒரு கமிட்டி அமைப்பதுபற்றியும் இருக்கும். இக் கமிட்டியில் சர்க்கார் ஊழியர்களும் உத்யோகப்பற்றில்லாதவர்களும் இருப்பார்கள். எல்லா வகுப்பினரின் குறைகளையும் இக் கமிட்டி கவனிக்கும். குறைகளை நிவர்த்தி செய்ய என்ன செய்ய வேண்டுமென கமிட்டி, சர்க்காருக்குச் சிபார்சு செய்யும்" என்று சர். ஹைதரி கூறுகிறார்.

இந்தியருக்கு ஐ. ஜி. பதவி

இந்தியாவிலேயே முதல் முதலாக பீஹாரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவிக்கு ஒரு இந்தியர் (ஸ்ரீ அலக்ஷ குமார் சின்ஹா) நியமிக்கப் பட்டிருக்கிறார்.

ஸினிமாத் தொழிலின் அபிவிருத்தி

இந்தியாவிலே சினிமாத் தொழில் ஆரம்பமாகி இருபத்தைந்து வருஷங்கள்தாம் ஆகின்றன. ஆனால் இந்தியாவின் தொழில்களுக்குள்ளே அது எட்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. இந்தத் தொழிலில்—அதாவது பட உற்பத்தி, வினியோகம், வெளிநாட்டுப் பொருள் காட்சி—இம் மூன்றையும் சேர்த்து—17 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. 40,000 பேர் இத் தொழிலால் பிழைக்கிறார்கள். சுமார் 75 பிலிம் உற்பத்திக் கம்பெனிகள் இருக்கின்றன. ஒவ்வொரு படம் எடுக்கவும் சுமார் ஒரு லக்ஷ ரூபாய் செலவாகிறது. வருஷம் ஒன்றுக்கு ஏறக்குறைய 200 படங்கள் தயாராகின்றன. பம்பாய், பூனா, கோல்ஹாப்பூர், கல்கத்தா, மதராஸ், கோயம்புத்தூர், சேலம் இவ்விடங்களில் சினிமாப் படம் பிடிக்கும் ஸ்டுடியோக்கள் இருக்கின்றன.

இந்தியாவிலே இப்பொழுது 996 சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. 532 கொட்டகைகள் இந்தியப்படங்களைக் காட்டுகின்றன. 266 கொட்டகைகள் இந்தியப்படங்களையும் வெளிநாட்டுப் படங்களையும் காட்டுகின்றன. 198 கொட்டகைகள் வெளிநாட்டுப் படங்களை மட்டும் காட்டுகின்றன.

திரிபுரி காங்கிரஸ்—படம் பிடிக்கப்படும்

திரிபுரி காங்கிரஸ் வைபவங்களை ஸினிமாப் படம் எடுக்க வரவேற்புக் கமிட்டியினர், பம்பாய் சிகாகோ ரேடியோ கம்பெனியாருக்கு அனுமதி தந்துள்ளனர். இவர்கள்தான் ஹரிபுரா காங்கிரஸையும் படமெடுத்தது. இப் படம் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் காட்டப்படும்

பொது விஷயத்திற்கு 'பணவசூல் வேண்டாம்'

அஸ்ஸாம் சர்க்கார் உத்தரவு

எந்தப் பொதுக் காரியத்திற்கும் சர்க்கார் உத்யோகஸ்தர்கள், தம் இலாகா தலைமை அதிகாரி அல்லது டிவிஷன் கமிஷனர் அநுமதியில்லாமல் பண வசூல் செய்யலாகாது என்று தடுத்து அஸ்ஸாம் சர்க்கார் ஓர் உத்தரவு போட்டிருக்கிறது.

மேலதிகாரிகளின் தொந்திரவிற்காக சிறு சம்பளம் வாங்கும் சர்க்கார் சிப்பந்திகள் ஏழை கிராமவாசிகளைத் தொந்திரவு செய்வதாகக் கிடைத்த புகாரின் விளைவு இவ் உத்தரவு.

ஐ. மா. வில் பெட்ரோல் வரி

பிப்ரவரி 15-ந் தேதி வெளியான ஐ. மா. சர்க்கார் விசேஷ கெஜட்டில், பெட்ரோல் வரி மசோதா ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மாகாண அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் வேண்டியிருப்பதால், இந்த வரி விதிக்கப்படுகிறதாம். காலனுக்கு 2 அணாவுக்கு மேல் வரி இருக்காதாம்.

இந்திய சமஸ்தானங்கள்

ஸ்ரீ. எம். ஸி. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்.

நமது இந்திய தேசமானது, ஒரு பெரிய கண்டத்திற்கு ஒப்பிடக்கூடிய தென்பது, யாவருமறிந்த விஷயம். நம் தேசத்தை ஆங்கிலேயர் இரண்டு வகுப்புக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதாவது,—ஆங்கிலேய சர்க்காரால் நேராக ஆளப்படும் இந்தியாவென்றும், இந்திய அரசர்களால் ஆளப்பட்டு வரும் இந்தியாவென்றும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய சமஸ்தானங்களிற் சில மிகவும் பெரியவை. அவைகளில் முக்கியமானவை மைசூர், பரோடா, ஹைதராபாத், திருவாங்கூர் முதலியவை யாகும். அனேக சிறிய சமஸ்தானங்கள் இந்தியா தேசம் பூராவும் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொரு சமஸ்தானமும் ஒரு அரசனுக்குக் கீழ் இருந்து வருகிறது. ஹிந்து அரசர்களும் இருக்கிறார்கள்; மகம்மதிய அரசர்களும் இருக்கிறார்கள்.

சமஸ்தான அரசர்கள் அவரவர்கள் சமஸ்தானம் சம்பந்தப்பட்ட மட்டும் தங்கள் இஷ்டப்படி அரசாளலாம். ஆனால், இதர சமஸ்தானங்களுடனும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களுடனும் அவர்கள் இஷ்டம் போல் இருக்கமுடியாது. மற்ற சுதந்திர தேசங்களுடனாவது சேனை விஷயங்களிலாவது எந்த விதத்திலும் தலையிட முடியாது. சமஸ்தான ஆக்ஷியிலும் பல தொல்லைகள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும் ஆங்கில சர்க்கார் பிரதிநிதியான ஒரு ஆங்கிலேய துரை இருந்து வருகிறார். சில சமஸ்தானங்களில் அவர்கள் இட்டதுதான் சட்டம். எந்தச் சமஸ்தானத்திலும் அவர் கூடாதென்று சொன்ன காரியத்தைச் செய்ய முடியாது.

இவ்வளவு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் இவ் இந்திய சமஸ்தானங்கள் உண்மையில் எங்ஙனம் சுயேச்சையாக விருக்க முடியும்? சமஸ்தானத்திலுள்ள ஜனங்கள் அடிமைகளுக்கு அடிமைகள் என்று சொல்லுவதற்கு யாதொரு தடையுமில்லை.

1935-வருடம் பார்லிமெண்டால் இந்தியாவிற்கென்று கொண்டுவரப்பட்டு அங்கீகரித்துச் சட்டமாக விருக்கும் அரசியல் திட்டத்தில், மத்திய அரசாங்க சபையில்—அதாவது பெடரல் அசெம்பிளியில்—சமஸ்தானங்களின் பிரதிநிதிகளையும் அங்கத்தினர்களாகச் சேர்த்திருக்கிறார்கள். சமஸ்தானப் பிரதிநிதி என்றால், சமஸ்தான அரசரின் பிரதிநிதியே தவிர, ஜனங்களின் பிரதிநிதியைக் குறிக்கவில்லை.

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மாகாணங்கள், ஒருவிதமான ஜனநாயக ஆட்சியில் இருந்து வருகின்றன. இப்போது அம்மாதிரியான ஆட்சியாவது சமஸ்தான ஜனங்களுக்கு வேண்டுமென்று பலவிடங்களில் இயக்கம் நடந்து வருகிறது.

இந்திய காங்கிரஸ், சில காரணங்களால் சமஸ்தான விஷயங்களில் நேராகத் தலையிட்டுக்கொள்வதில்லை யென்று ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. சமஸ்தான ஜனங்களே தங்கள் தங்கள் தேசத்தின் சுதந்திரப் போரை நடத்தி வெற்றி பெறுவதுதான் நிலையாக விருக்குமென்பது ஒரு காரணம். மற்றொரு காரணம், காங்கிரசுக்குப் பல இதர வேலைகளிருக்கின்றன. புலியுடன் போராடும்பொழுது பூனையுடனும் போராடுவது முடியாது.

பல சமஸ்தான அதிகாரிகள் பெரிய ஜமீன்தார்களை யொத்திருக்கிறார்கள். ஜமீன்தார்களையாவது ஆங்கில சர்க்கார் கண்டிக்க முடியும். ஹைகோர்ட்டுகளும் இடையிடையே தலையிடலாம். ஆனால், சமஸ்தான சிற்றரசர்களை எந்தச் சட்டமும் கட்டுப்படுத்தாது; அவர்கள் போட்ட உத்தரவிற்கு மேலே யாதொரு அப்பீலும் கிடையாது. மாகாண அரசாங்கத்தில் ஒரு குற்றவாளி தண்டிக்கப்பட்டால், அவன் இங்கிலாந்துக்குச் சென்று விடுதலை யடையலாம். சமஸ்தான குற்றவாளிக்குச் சமஸ்தானத்தில் நியாயம் கிடைக்காவிட்டால், அவன் கதி அதோகதிதான்.

இந் நிலைமையில் சிலர், இவைகளை ஒழித்து விடுவதுதான் தேசத்திற்கு நன்மை யென்கிறார்கள். மற்றும் சிலரோ, இம் மன்னர்கள் ஜனங்களுக்குப் பொறுப்பாட்சி யளித்து நியாயமாக நடந்தால், அவர்களை அரசாங்கத்திலிருந்து கீழே இறக்குவது அவசியமில்லை யென்கிறார்கள். மகாத்மாவின் அபிப்பிராயமும் இதுவே.

சமஸ்தானங்கள் சரியான நிலைமையிலிருக்க வேணுமென்றால் ஜனங்களுக்கு அரசாட்சிப் பொறுப்பைக் கொடுக்கவேண்டியது அவசியம். சில தினங்களுக்குமுன் காந்திஜியும், இனி காங்கிரஸ், சமஸ்தானங்களில் நடக்கும் அட்டூழியங்களைப் பார்த்துக்கொண்டு பேசாமலிருக்காது என்று சொல்லி விட்டார். ஒரு காலத்தில் இந்தியா பூர்ண சுயேச்சை யடைவது நிச்சயம். அச்சமயம், சமஸ்தானங்கள் அழியாமலிருக்க வேண்டுமென்றால், சமஸ்தான அரசர்கள் கண் திறந்து காலப் போக்கை அநுசரித்து, உடனே சுதேச மக்களுக்குப் பொறுப்பாட்சி யளிக்க முற்பட முயலவேண்டும்.

எல்லை காந்தி-கவர்னர் சந்திப்பு

'எல்லைப்புற காந்தி' கான் அப்துல் கபார்கான் பிப்ரவரி மாதம் 15-ந் தேதி யன்று மாலை எல்லைப்புற கவர்னர் சர். ஜார்ஜ் கன்னிங்ஹாமை கவர்னர் மாளிகையில் சந்தித்தார். குதாயி கித்மத்கார் இயக்கம், மாகாணத்தில் குற்றங்கள் அதிகமாய்க்கொண்டு வருவது, மலை வகுப்பினர் பிரச்னை முதலியவைகளைப்பற்றி இருவரும் மனதைவிட்டு விவாதித்ததாக ஸ்ரீ. கபார்கான் கூறினார்.

கவர்னர் மாளிகையிலிருந்து திரும்பி வந்ததும், ஸ்ரீ. கபார்கான், மௌலானா ஆஸாதை சந்தித்து, கவர்னரைப் பேட்டி கண்ட விவரங்களைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு மிகவும் முக்கியமானதென்று காங்கிரஸ் வாதிகளிடையே கருதப்படுகிறது. ஸ்ரீ. கபார்கான் கவர்னரைச் சந்தித்தது இதுதான் முதல் தடவை யென்பது குறிப்பிடத் தக்கது.

ஸிகரெட் மோகம் ஏன்?

நமது ஹிந்தி, தமிழ்ப் படங்களில் பல, அவைகளைப் பார்க்கும் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும், நடிப்பு, டைரக்ஷன், சங்கீதம், நடனம், இயற்கைக் காக்ஷிகள் இவைகளின் மேன்மையும், இத் துறையில் அடைந்திருக்கும் அபிவிருத்தியையும் மாத்திரம் எடுத்துக் காட்டாமல், மற்றொரு முக்கியமான அம்சத்திலும் முற்போக்கைத் அறிவுறுத்துகின்றன. ஒவ்வொரு படமும் எவ்வளவு அதிகமான சிகரெட் டின்களைக் காலியாக்க முடியுமென்பதில் போட்டியிடுவதுபோல், அபரிமிதமாக ஸினிமாக்களில் ஸிகரெட்டை உபயோகப்படுத்துவதை நாம் தினம் பார்க்கிறோம். இது முதலில் ஹிந்திப் படங்களில் அதிகமாக ஆரம்பித்து, பின்னர் தமிழ்ப் படங்களிலும் பரவி விட்டது.

இதனால் உண்டாகும் கெடுதல்கள், நாம் எடுத்துக் காட்டாமலேயே, ஜனங்களுக்கு விளங்கும். கதாநாயகனும் மற்ற இதர பாத்திரங்களும் சிகரெட்டைத் தாராளமாய் உபயோகிப்பதைப் பார்த்து, நம் நாட்டு வாலிபர்கள், "அவைகளை நாமும் உபயோகித்தால்தான் நாட்டின் முன்னேற்றத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்கள் ஆவோம்; இல்லாவிடில் பட்டிக்காட்டு அநாகரீகர்களாகக் கருதப்படுவோம்" என்று நினைத்து, இக் கெட்ட பழக்கத்தை ஆரம்பிக்கிறார்கள். இம்மாதிரித் தூண்டுகோல் இல்லாவிடில், அதை உபயோகிப்பதைக் குறித்துக் கனவிலும் கருதமாட்டார்கள்.

இம் மனப்பான்மை முக்கியமாக, தங்கள் தாய் தகப்பன்மாரை விட்டுத் தனியாக ஹாஸ்டலில் படிக்கும் மாணவர்களிடத்தில்தான் காணப்படுகிறது. தூரத்திலிருக்கும் பெற்றோர்க்குத் தங்கள் புதல்வனின் துன்மார்க்கங்கள் தெரிவதில்லை. யாராவது தெரிவித்தாலும் நம்புவதில்லை. இதனால் கெட்ட பழக்கம் ஏற்படுவதோடு நில்லாமல், அனாவசியமான பண விரயம் ஏற்படுவதும் யாவரும் அறிந்த விஷயமே! இம் மனப் பிராந்தியை அகற்ற வேண்டியது எல்லோருடைய கடமையாகும். படங்களில் கூடியவரையில், சிகரெட்டுகளின் உபயோகத்தைத் தடுக்கவேண்டும்.

இனி, படங்களில் சிகரெட்டுகள் அவசியமா வென்று கவனிப்போம். அவைகள் அவசியமில்லை யென்றே தோன்றுகிறது. ஜனங்கள் நடிகர்களின் நடிப்புத் திறமையைக் கண்டு அனுபவித்துச் சந்தோஷமாய்ப் பொழுது போக்குவதற்கென்று படங்களுக்கு வருகிறார்களே தவிர, நடிகர்கள், அந்த மூன்று மணி சாவகாசத்தில் எவ்வளவு சிகரெட் டின்களைக் காலியாக்குவார்கள் என்று கணக்கிடவல்ல. அதிகமாகவும் அனாவசியமாகவும் சிகரெட்டுகளை உபயோகிப்பது நடிக்கத் திறமையின்மையால் ஜனங்கள் மனதை வேறு வழியில் திருப்பி, தங்களுடைய குறையை வெளிக் காட்டாமலிருக்க உபயோகிக்கும் ஒரு சாதனம் என்றே கருதவேண்டியுளது. இக் குறையை நிவர்த்தித்துக்கொண்டு, இன்னும் திறமையாக நடிக்க நடிகர்கள் பாடுபடவேண்டுமே யல்லாமல், இம் மாதிரி சாக்குப் போக்குக் காட்டினால், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்கள் ஆவார்கள்.

'மேனுட்டுப் படங்களில் சிகரெட் உபயோகப்படுத்த வில்லையா? அது படங்களைக் கெடுத்து விடுகிறதா?' என்ற கேள்விகள் பிறக்கலாம். மிகவும் நன்ருய் நடிக்கப்பட்ட மேனுட்டுப் படங்களில் இவ் ஆபாசம் கிடையா தென்றே திட்டமாய்ச் சொல்லலாம். உதாரணமாக "மேரி அன்டாயி னெட்"டை எடுத்துக் கொள்வோம். அது 'பிரெஞ்சு' தேசத்தின் வாழ்க்கை யைக் குறித்த படம். உலகில், பிரஞ்சுக்காரர்களைப்போல் போகம் அனுப விக்கப் பிறந்தவர்கள் ஒருவரும் கிடையாதென்று சொல்வார்கள். அதிலும் இப் படம் சாதாரண ஜனங்கள் ஒரு புரட்சியை உண்டாக்கும் கட்டத்தைக் காட்டுகிறது. சாதாரண ஜனங்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும், போகத் துக்கு அதிகமான பிராதான்யம் கொடுக்கும் தேசத்துப் படத்தில் ஒரு இடத்திலாவது, ஒருவனுவது ஒரு சிகரெட்கூட உபயோகிக்கவில்லை யென்ருல், நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்களா? இப் படத்தைவிட மேன் மையான படம், நான் இதுவரையில் பார்த்தது கிடையாதென்று தைரிய மாய்ச் சொல்வேன். இந்தச் சம்பவமாவது நமது மனத்தைக் கொஞ்சம் யோசனை செய்யச் செய்யாதா?

கொஞ்சநாளைக்குமுன் சென்னையில் காண்பிக்கப்பட்ட, ஒரே தத்து வத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு படங்களைப்பற்றி ஆராய் வோம். ஒன்று இங்கிலீஷில் வந்த "குட்எர்த்" என்ற படம். மற்ருென்று ஹிந்தியில் காண்பிக்கப்பட்ட 'தர்த்தி மாதா' என்ற படம். இரண்டும் விவ சாயத்தை அடிப்படையாகக் கொண்ட படங்கள். முதலாவதில் சிகரெட் களை உபயோகித்ததாகக் காணும். அது மிகவும் சிறந்த நடிப்புடன் கூடி யிருந்தது. இரண்டாவதில் நடிப்புக்குப் பதில் கணக்கில்லாத சிகரெட்டுகள். பூமியை எவ்விதமாக உழுது பயிரிடவேண்டுமென்ருல் வாயில் சிகரெட்டை வைத்துக்கொண்டு புகை விடுவதனுல்தான் என்று நமக்கு அப் படம் காட்டி யதைத் தவிர, வேறு ஒன்றும் தெரியவில்லை. முதலாவது படத்தைப்பற்றி நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. வாசகர்களுக்கே நன்ருய்த் தெரியும். 'லோகஸ் பெஸ்ட்' அதாவது பூச்சிகளின் உபத்திரவத்திலிருந்து பயிர்கள் காக்கப்பட்ட காட்சி இன்னும் மனதைவிட்டு அகலவில்லை.

சிகரெட்டுகளின் உபயோகம் படங்களைக் கெடுப்பது மன்றி, வாலிபர் களின் மனத்தையும் கெடுக்கின்றது. நமது படங்களில் நடிப்பும், கலா விருத்தியும் முதன்மையாகத் தலை தூக்கி, சில்லரை ஆபாஸங்கள் ஒழியும் காலம் சீக்கிரம் வாராதா என்று எதிர்பார்ப்போமாக.

—ஜி. ஆர்.

சென்னையிலும் விற்பனை வரி

சென்னை மாகாணத்தில் விற்பனை வரி விதிக்க சென்னை சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிருர்கள். இது சம்பந்தமாக ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு வருகிறது. சீக்கிரத்தில் இம் மசோதா கெஜட்டில் பிர சுரிக்கப்படலாம். பொதுவாக விற்பனை வரி விதிக்கும் அதிகாரம் வேண்டு மென்று சர்க்கார் கேட்பார்களெனத் தெரிகிறது.

முதல் :—வாய் வேதாந்தம் பேசும் அவனுடைய பிதா இந்தத் திருக்கோலக் காட்சியைப் பார்த்தால் தெரியும். அது என்னவோ மடிசஞ்சியைப்போல் கிராமத்தில் உட்கார்ந்திருக்கிறதே !

இரண்:—உம்....எங்கிருந்தால் என்ன ! அவருக்கு எத்தனையோ பேர் மூலம் சமாசாரம் காற்றுப்போல் பரவி விட்டதாம். அந்தக் கோபத்தினுல் அவர், அவன் முகத்தில் விழிக்கப் பிடித்தமின்றி, அவமானத்தால் குன்றிப்போய் உட்கார்ந்து கிடக்கிறுர். மகன் செய்வதை அவர் ஒருபோதும் ஒப்பமாட்டார்.

மூன்று :—என் சார் ! அனுதாலயத்தின் போஷகர்களில் ஒருவரான அனந்தராம் வீட்டில் ஏதோ தீ விபத்து ஏற்பட்டதாம். அங்கு ஆரோக்கியசாமிக்கும் ஆத்மநாதனுக்கும் என்னமோ சண்டை நடந்ததாம். அவன், ஆத்மநாதனை பலர்முன்பு அவமானப் படுத்திப் பேசினுனும். அதற்கு அவன் என்னமோ சொன்னுனும். ஆரோக்கியசாமிக்குப் பெருத்த கோபம் வந்துவிட்டதாம். அவன் ரொம்ப காரமா யிருக்கிறுனமே !

வேறு :—ஆமாம். நானுங்கூடக் கேள்விப்பட்டேன். ஆத்மநாதனின் நடத்தை பிடிக்காது ஒரு லேடி டாக்டர் ஆரோக்கிய சாமியிடம் வந்துவிட்டாளாம். ஆத்மநாதனைப் பழி தீர்க்கவும் அவமானப்படுத்தவும் அவர்கள் கங்கணங் கட்டிக்கொண்டிருக் கிறுர்களாம்.

புதிதாக வந்தவர்:—என்ன சார் ! ஆத்மநாதன் புராணமோ!... இருக்கட்டும். யார் வேண்டுமானுலும் கங்கணங் கட்டிக்கொண்டு விடலாம். யாரை யார் என்ன செய்துவிட முடியும் ? ஆத்மநாதனின் கைராசியும், புகழும் ஜனங்களுக்கு நன்றுகத் தெரிந்துவிட்டது. அதைக் கண்டு வயிற்றெரிச்சல் பட்டதனுலேயே அதை அழிக்கமுடியுமா ! என்ன சார் செய்துவிட முடியும் ?

முதல்:—போமய்யா ! போம். என்ன செய்துவிட முடியுமாம் ? சூன்யக்காரனுக்கு அதன் உளவு தெரியும். திருடனுக்கு, கன்னம் வைக்கும் வழி தெரியும். அதுபோல் கெடுப்பதற்கு என்று கிளம்பி விட்டவர்களுக்கு அது தெரியாதா ! ஆத்மநாதனின் ஆராய்ச்சியினுலேயே, நோயாளிகளினுலேயே, பாட்டுக்காரகச் சேகரித்துள்ளவர்

களாலேயே, அவனுடைய பிதாவினுலேயே அவனுக்குக் குழி தோண்ட முற்பட்டு விட்டார்களாம்; தெரியுமா! என்னய்யா நினைத்தீர்?

புதிதாக:—ராம, ராமா! இதென்ன அக்கிரமச் செயலோ! கடவுள் ஒருவருண்டு என்பதை இந்தச் செய்கை நிரூபிக்குமோ அல்லது இல்லை என்றுதான் தீர்மானிக்குமோ! யார் அறிவது?— என்று கூறிக்கொண்டேபோய்விட்டார். மற்றவர்கள் கொல்லென்று கையைக் கொட்டிச் சிரித்தார்கள்.

17

ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டிற்றும்

புத்திர வாத்ஸல்யத்தினுல் மனமார அன்பு மயமாய் நிரம்பிய சிதம்பரநாதன், தானே வியக்கும்படி ஊருக்கு வருவதற்காகத் தன் துணிமணிகளைக் கட்டிக்கொண்டு புறப்படத் தயாரானுர். கந்தனும் வெகு விரைவில் பிரயாண சித்தமாகி இரட்டைமாடுகள் பூட்டிய வண்டியைத் தயாராக வீதியில் கொண்டு வந்து நிறுத்தினன்.

அக்கம் பக்கம் உள்ளவர்களில் சிலர் சிதம்பரநாதன் வீட்டு வாசலில் வண்டி நிற்பதைக் கண்டதும் ஆச்சரியமடைந்தவர்களாய், வந்து, "ஏன் சார்! எங்கேனும் வெளியூர் பிரயாணமா அல்லது உங்கள் வீட்டிற்கே போகப் போகிறீர்களா?" என்று கேட்டார்கள்.

அச் சமயம் அங்கு வந்த இன்னெருவர், "ஏது! திடீரென்று கிளம்பிவிட்டாப்போ லிருக்கிறதே. பிள்ளையிடமா?" என்ருர்.

சிதம்:—நீர் எப்போய்யா ஊரிலிருந்து வந்தீர்? எங்க வீட்டு சமாசாரம் ஏதாவது தெரியுமா!

வந்த:—ஓ! தெரியாமலென்ன! 'பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழி எப்பவாவது பொய்யாவதுண்டா! நீங்கள்தான் இப்படி அஞ்ஞானத்துடன் அடித்துக் கொள்கிறீர்கள். அவன் என்னவோ ஜம்மென்று களியாட்டமாயிருக்கிறான். உங்க மனைவி எத்தனை சொல்லியும் அதை லக்ஷியமே செய்வதில்லையாம். கிருஸ்தவப் பெண் ஒருத்தியிடம் சகவாஸம் இப்போது பலமாக இருக்கிறதாம். இன்னும் கொஞ்சநாளில் அவனே கிருஸ்துவ மதத்திலும் சேர்ந்துவிடுவான் போலிருக்கிறதென்று ஊரார் சொல்லிக் கொள்கிறார்கள். என்னமோ போங்கள்! நீங்கள் இருக்கும் ஆசார சீலத்திற்கும் உங்கள் வயிற்றில் பிறந்து அவன் இருக்கும் வெட்கக் கேட்டிற்கும் தலை இறக்கமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது? போய்ப் பார்த்து, நல்ல புத்தி சொல்லித் திருத்துங்கள்.

வேறொரு:—ஆமாம்! திருத்துவதாவது திருத்துவது; திருத்துவதற்குக் காயா! கறியா! பழமா? அதிகப்படிப்பு; மூளையே கெட்டு விட்டது. நியாய அநியாயங்கூடத் தெரியாது போய்விடுகிறது.

சிதம்பரநாதனுக்குத் துவேஷம் ஒரு சிறிது மாறி, மனம் இளகிக் கொண்டு வந்ததற்கு நேர் விரோதமாய் இவர்கள் பேசிய பேச்சிலிருந்து உடனே பழயபடி மாறிவிட்டது. முகம் சிவந்துபோய் விட்டது. கண்கள் கோபாக்கினி ஜ்வலிக்க நாலா பக்கமும் உருள்வதைக் கண்ட கந்தனுக்கு அங்கு சமயத்திற்குச் சனியன்கள் போல் வந்தவர்கள்மீது கோபம் மூண்டது. "இவர்களை எல்லாம் யார் வரச் சொன்னது?" என்று பல்லைக் கடிக்கிறான்.

தன் எஜமானன் எங்கே பிரயாணத்தை நிறுத்தி விடுவாரோ என்ற பயத்தினால் தானே மூட்டைகளையும் படுக்கையையும் வண்டியில் கொண்டு ஏற்றிவிட்டு, "எஜமான்! மணியாவுதுங்க" என்று மெல்லக் கூறினான். அதே சமயம் சிதம்பரநாதன் கந்தன் மூட்டைகளை வண்டியில் வைப்பதைப் பார்த்து, "டேய்! கந்தா! மூட்டைகளை உள்ளே கொண்டுபோய் வை. நான் ஊருக்கும் போகவில்லை. எந்த எமலோகத்திற்கும் போகவில்லை. போடா! உம். மூட்டையே எறக்கு!" என்று கர்ஜித்தார்.

கந்த :—(வெகு சாந்தமாகப் பேசத் தொடங்கி) எஜமான்! பயணத்தெ நிறுத்தாதேங்கோ! ரயிலுக்கு நேரமாச்சுங்க. புறப் படுங்க எஜமான்!

வந்த :—என்னடா அது? நீ பண்ற தடபுடல் பெரியதா யிருக் கிறது. அவருக்கு இஷ்டமில்லாவிட்டால், என் உபத்திரவப்படுத்து கிருய்? எஜமானுக்கும் எஜமானே நீ?....என்ருர்.

கந்தனுக்கு இந்த அதிகப்பிரஸங்கித்தனமான வார்த்தை மிக்க கோபத்தை உண்டாக்கிவிட்டது. அவன், தனது இயற்கை யான சாந்தத்தை விடாது பேசத் தொடங்கி, "சாமீ! நீங்கல்லாம் நல்லா படிச்ச பெரியவங்க. இந்த வேலெக்கார கயிதையே பாத்து பெரிய, பெரிய வார்த்தெங்க சொல்லாதீங்க சாமீ! ஏதோ குடும் பம்னு இருந்தா அதுலே சண்டெ கிண்டே, சச்சரவு கிச்சரவு அல்லாந்தான் வரும். அதோடு உட்டுப்பூடுமா சாமீ! அதிலும் பெத்த பிள்ளைக்கும் அப்பாக்கும் உட்டுப்பூடுமா?

எல்லாம் நாளாவெட்டத்துலே சரியாகிடும் சாமீ! நீங்கல்லாம் நல்லதை சொல்லியனுப்பாமே இப்படியா செய்யறது. எங்க சின்ன ராசா மேலே பொருமை கொண்ட பிசாசுங்கத்தான் கண்டபடி ஒளற்றதுங்க. அவரு என்னமோ தரும ராசாதான்" என்று இவன் அன்பின் பெருக்கால் கூறி முடிப்பதற்குள், அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

அவர்கள் பல்லைக் கடித்துக்கொண்டு "டேய்! அதிகப்ரஸங்கி! நீ வேலைக்காரக் கழுதை என்று நினைத்தாயா! அல்லது எஜமானுக் கும் எஜமான் என்று எண்ணிப் பேசுகிருயா? உன்போன்ற போக் கிரிகளின் சகாயமும் உளவும் ஆதிமுதல் இருந்ததனுல்தான், உன் சின்ன எஜமான் இந்தக் கதிக்கு வந்துவிட்டான். தெரியுமா!

பள்ளம் இருக்கிற இடத்தில்தானேடா தண்ணீர் தேங்கும். மேட் டில் ஒருசொட்டு ஜலமாவது நிற்குமா! உன் சின்ன எஜமானசின் பவிஷு தெரியாதென்று நினைத்தாயா! எங்களுக்காடா கொள்ளித் தனம். எங்களுக்காடா வயித்தெரிச்சல்; நாங்களாடா ஒளற்ருேம்? நாக்கை உள்ளே அடக்கிப்பேசு; பத்ரம். ஓய்! சிதம்பரம்! கேவலம் ஓர் வேலைக்காரனுக்கு இவ்வளவு இடம் குடுத்து எங்களை அவ

மானப்படுத்துவது உங்களைப் போன்ற பெரிய மனிதருக்குக் கொஞ்சங்கூட அழகில்லை.

வாருங்காணும் வாரும். எனக்குப் பணச் செலவானாலும் ஆகட்டுமென்று நானும் உம்மோடு வருகிறேன். நேரே உமது வீட்டுக்குப் போனால், அவன் ஜாக்கிரதையாகி விடுவான். அப்படிப் போகாமலேயே எங்க பந்துக்கள் வீட்டிலிருந்தபடியே உமது மகா மேதாவியான மகனின் திருவிளையாடல் புராணக் காட்சிகளை நேரில் காட்டுகிறேன்; வாருங்காணும். இந்த அதிகப்ரஸங்கி வேண்டுமானாலும் வந்து பார்க்கட்டும். இப்படி பிதற்றுவதைப் பிறகாவது நிறுத்திக் கொள்ளட்டும். உம். எழுந்திருமய்யா! எழுந்திரும்" என்று கண்கள் சிவக்கும் கோபத்துடன் மூச்சைப் பிடித்துக்கொண்டு கூறியபடி எழுந்து மேல் உத்தரியத்தை வரிந்து கட்டிக்கொண்டார்.

சிதம்பரநாதனுக்கு அச் சமயம் இருந்த மனோ நிலைமையில் கந்தன்மீதே கோபம் பீறிக் கொண்டு வந்தது. ஒருநாளும் அத்தனை கோபத்துடன் அவனைப் பிறர் எதிரில் ஏளனம் செய்தறியாத மனிதன் இன்று கண்ணு மண்ணு தெரியாமல் கையை நீட்டி, கந்தனின் முதுகில் ஓங்கி அறை பட்டார் என்று விட்டு, "தடிப்பயலே! மரியாதை மட்டு இல்லாமல் பேசுவதற்கு உனக்கு அத்தனை திமிராடா வந்து விட்டது. இவர்களையும் உன்னைப்போன்ற வேலைக்காரன் என்று பார்த்தாய். அதிகப்ரஸங்கி! இனி நாக்கை உள்ளடக்கிப் பேசு. உன்னை இனி வேலைக்கு வைத்துகொள்வதற்கே நீ லாயக்கில்லை" என்று தலைகால் தெரியாமல் கர்ஜித்தான்.

உண்மை உழைப்பாளியும் உள்ளன்பும் உள்ள வேலைக்காரனாகிய கந்தனுக்கு மனம் குழம்பியது. கண்ணீர் பலபலவென்று வந்து விட்டது. தொண்டையை அடைக்கும் துயரத்துடன் நாத் தடுமாற "எஜமான்! நீங்க சொல்றது உண்மைதானுங்க. என்னைப்போல உண்மையான வேலைக்கார நாயி என்று நான் அவங்களை நெனச்சுப் பேசலிங்க. குடியைக்கெடுக்கும் குண்டுணி வேஷக்கார சுயநலப் பிசாசுங்கன்னு நெனச்சுத்தான் பேசினேனுங்க.

எஜமான்! இந்தக் கயிதையே இத்தினி வருசமா ஒரு கடுகளவு கூட வித்யாஷமா பேசாத நீங்க இன்னிக்கு இவங்க எதிரே

183030

என்னே அடிச்சத்துனாலே எனக்குக் கொறஞ்சு போகலெங்க. ஒங்க உப்பெத் தின்னு வளர்ந்த இந்தக் கட்டையே நீங்க இன்னு சேஞ்சாலும் இந்த நாயிக்கு சந்தோஷந்தானுங்க. நான் ஒங்களே கெடுக்குரேன்னு சொன்னுங்களே அதுமட்டும் நீங்க நம்பாதிங்க. குடியே கெடுக்க வந்தவன் நானில்லெங்க. அந்தப் பேச்சு அவங்களுக்கே தானுங்க.

என்று வயிற்றெரிச்சலுடன் பேசி முடிப்பதற்குள், அவர்களில் ஒருவனுக்குக் கோபம் பிறிக்கொண்டு வந்துவிட்டது. "ஆ! ஆ!! ஆ!!!....என்ன சொன்னே? நாங்களாடா குடி கெடுக்கிறவர்கள்! டேய்! உன்னைப்போல் சோற்றுகில்லாத பொறுக்கிகளாடாநாங்கள்? இனிமேல் இந்த மாதிரி பேசாதே; பேசாதே!" என்று சற்றும் எதிர்பாராத விதம் கந்தனின் கன்னத்தில் பட்டார் பட்டார் என்று அறைந்துவிட்டு, "ஓய்! இப்படி அவமானப்படுத்த வேண்டுமென்று எத்தனை நாளாய் நீர் இம்மாதிரி கறம் வைத்துக் கொண்டிருந்தீர்? நாங்கள் இதைச் சகிக்கவே மாட்டோம்.

என்று கூச்சலிடுவதைக் கேட்ட சிதம்பரத்தின் கோபம் பின்னும் பஞ்சமஸ்தாயியை எட்டியது. தடதடவென்று கந்தனின் கழுத்தில் கையை வைத்துத் தள்ளியவாறு, "அடேய் அகம்பாவம் பிடித்தக் கழுதை! நீ இத்தனை போக்கிரி என்று தெரிந்திருந்தால், உன்னை என்றைக்கோ தொலைத்திருப்பேன். போய்விடு. இனிமேல் நீ இங்கு நிற்க யோக்யதை இல்லை. போய்விடு" என்று தள்ளினர்.

கந்தனின் வயிறு எரிகிறது. மனது வெடித்துவிடும் போலிருக்கிறது. "ஆண்டவனே! எஜமானரின் புத்தியை இப்படியா இமை கொட்டும் நேரத்தில் மாற்றிவிட்டுச் சோதிப்பாய்" என்று பணிவாக எண்ணுகிறுனே யன்றி, எஜமான்மீது ஆத்திரமே உண்டாகவில்லை.

அவன், தனக்குள்ள இயற்கையான சாந்தத்தை அப்போதும் இழக்காமல் கண்ணீர் வழியப் பேசத் தொடங்கி, "எஜமான்! எத்தனையோ வருஷக் கணக்கில் நல்லா இருந்த நான் இன்னிக்கு ஒங்க மனசுக்கு விரோதியா பூட்டாக்கூட நான் ஒங்க காலு செருப்புலே ஒட்டின தூசிக்கிக்கூட கெடுதல் செய்றவன் அல்லண்றது சாமி ஒரு

நாளைக்குக் காட்டாமே போகமாட்டாரு. ஆண்டவன் ஒங்களெயும் எங்க சின்ன ராசாவெயும் காப்பாத்தணும்" என்று கண்ணீர் ஆறு, குளம்போல் வழிந்தோடக் கூறிக்கொண்டே போய்விட்டான்.

ஆத்திரம் அதிகரிக்கும்போது அவர்களின் மூளையும் கொதித்து விடுவதால் மழுங்கிப்போவதற்கு ஒப்பாகிறது. கண்மூடித்தனத்தில் செய்துவிடும் எந்தக் காரியத்தையும் பிறகு சீர்திருத்தமுறச் செய்ய முடியுமா! ஒருபோதும் முடியாது. சிலது அப்படியே பாழாகிவிடுகிறது. சிலது இரண்டுங் கெட்டானுகிறது. சிலது பின்னல் வருந்தித் தன் மதியீனத்தை நொந்துகொள்ளச் செய்கிறது. இவைகளில் எந்த ரகத்தில் சிதம்பரநாதனுடைய முடிவு வருமோ! யார் கண்டது?

கந்தன் கண்ணீர் வழியச் செல்லும் காட்சி, என்ன விருப்பினும் சிதம்பரநாதனின் மனத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கியது. அதே சமயம் அந்தக் கூட்டத்திலிருந்தவன்—அதாவது கந்தனைக் கைகூசாது அடித்த மேதாவி—"என்ன யோசனை செய்கிறீர். இந்த ராஸ்கல் தொலைந்தால், இனி உங்கள் குடும்பமே சீராகும். இந்த படவாப்பயல் கந்தன்தான் உங்கள் மகனுக்குத் தீய வழியில் உதவி வருகிருன் என்று நான் வெகு நாட்களாகக் கேள்விப்படுகிறேன். உம். புறப்படும் போவோம். அதற்கென்று கிளம்பிய பிரயாணத்தைத் தடை செய்யவேண்டாம். ஏறும் வண்டியில்" என்று சிதம்பரத்தை ஊக்கினன்.

உடனே கூட்டத்திலிருந்த ஒருவரை நோக்கி, "நான் ஊருக்குப் போய் வருவதாய் எங்கள் வீட்டில் சொல்லிவிடும்....சரி! இதோ நானே சொல்லிவிட்டு வருகிறேன்" என்று எதிர்சாரியிலுள்ள நான்காவது வீட்டுக்குத் தலை தெறிக்க ஓடினன். வாசலில் நிற்கும் மனைவியிடம் ஏதோ ரகஸ்யமாய்க் கூறிவிட்டு, வேஷ்டியின் கச்சம் அவிழ்ந்து விழுவதுகூடத் தெரியாது ஓடிவந்து வண்டியில் ஏறி உட்கார்ந்தான். சிதம்பரமும் பொம்மைபோல் ஏறி உட்கார்ந்ததும், வண்டி ஜல் ஜல்" என்று சதங்கையும் மணியும் ஓசைப்படக் கிளம்பிவிட்டது.

கந்தனுக்கு நேர்ந்த கதியைக் கண்ட வண்டிக்காரனுக்கும் மன வருத்தந்தான். ஆனால், அத்தனை பழகிய கந்தனுக்கே இக்கதியாகும்போது புதிதாக வந்த வண்டிக்காரனுக்கு என்ன செய்ய முடியும். தெருக் கோடியில் இருட்டில் நின்றுகொண்டு துக்கம் தொண்டையை அடைக்கப் பார்த்துக்கொண்டு நிற்கும் கந்தனுக்கு வயிற்றில் சகிக்கமுடியாத சங்கடம் செய்கிறது. "ஐயோ! குடி கெடுக்கும் பாவி எஜமானை அழைச்சிண்டுபோய் என்னென்ன விபரீதங்கள் பண்ணிவிடுவானே! சாமீ! கடவுளே! எங்க எஜமான் குடும்பத்தைக் காப்பாத்து" என்று உள்ளன்புடன் வேண்டிக் கொண்டு கை குவித்தான்.

18

ஏமாற்றமும், தடுமாற்றமும்

தன் கடமையில் கருத்து ஒருபுறமும், தன்னுயிர்ப் பொக்கிஷத்தை ஒரு முறை பார்க்கலாம் என்கிற ஆசை மற்றொரு புறமும் இதயத்தில் வேகமாய் அடித்துக் கொள்ள, ஆத்மநாதன் வழக்கம் போல் ஆச்ரமத்தைப் பார்வையிட வந்தான்.

அங்குள்ள அத்தனை குழந்தைகளும் ஆத்மநாதனைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் வரவேற்றுக் குதித்தார்கள். சின்ன குழந்தைகள் தங்கள் அன்பை ஆத்மநாதனுக்குக் காட்டுவதுபோல் டாக்டரைப் பார்த்தவுடனே கையை நீட்டுவதும் சொக்காயைத் தூக்கி மார்பு, முதுகு முதலியவைகளைக் காட்டுவதும், நாக்கை நீட்டுவதுமாகச் செய்வதைக் கண்ட ஆத்மநாதன் சந்தோஷத்துடன் பார்த்து அவைகளைத் தட்டிக் கொடுத்தான்.

ஆனால், கண்களும் மனமும், தான் தேடிய பிம்பம் எங்கிருக்கிற தென்பதைக் கள்ளத்தனமாகத் தேட ஆரம்பித்தன. தலைவி பக்கத் திலிருந்தபடியே ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள தேக நிலைமையைச் சொல்லிக்கொண்டே வந்தாள். ஆத்மநாதன், மருந்துகளின்

பெயரைச் சொல்ல, உதவி வைத்தியன் அவற்றை எழுதிக் கொண்டே வந்தான்.

ஆத்மநாதனின் கார் ஓசையைக் கேட்டதும் மனம் துடித்த வளாய், பயமும் பீதியும் ஒன்ருகப் பாதிக்க உள்ளே ஓடிய சுமதி யின் இதயத்தில் சொல்ல அறியாத வேதனைகள் சூழ்ந்துகொண்டு அவளைச் சித்திரவதை செய்கின்றன. ஆத்மநாதனின் குரல் கேட்கக் கேட்க அவளுடைய வேதனை அதிகரித்து அவளைப் பயித் தியமாக்குகிறதே யன்றி, அவளால் நிலைமையைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

ஜன்னலின் இடுக்காலாவது தான் ஆத்மநாதனைப் பார்க்க லாமா என்று நினைக்கிருள். அடுத்த நிமிடமே தலைவியின் அதி முக்கியமானதும், பயங்கரமானதுமான உபதேசம் காதில் ஒலித்து, பின்னும் நடுங்கச் செய்துவிட்டது. "இப் பாழும் உலகத்தில் நான் ஏன் பிறந்தேன். என்னை ஏன் ஈச்வரன் பிறப்பித்து, இப்படி பொம்மலாட்டம்போல் ஆட்டவேண்டும்?

தன் பிறவி, தனக்குத் தெரியாது திண்டாடும் இப் பாவிக்கு ஏன் இந்தச் சோதனை? காதல்வேதனை? வெளியுலக விவகாரங்கள் இன்னதென்று தெரியாது ஆச்ரமத்திற்குள்ளேயே அடைத்து வைத்திருக்கும்போதே இந்தக் கதியாகிவிட்டதே. வெளியுலகில் உள்ளவர்களின் கதி எத்தகைய பயங்கரமானதோ யார் அறியக் கூடும்? ஹா! அவருடைய குரல் தேவகானம்போல் செவியில் விழு கிறதே. எப்படித்தான் அவரைப் பார்க்காமலிருப்பேன்? ஐயோ! விதியே!" என்று தனக்குள் மிக்க துயாமுற்றுத் தவிக்கிருள்.

தன் நிலைமையை யாரேனும் கவனித்துவிடப் போகிருர்களே என்ற பயம் ஒரு புறம் பாதிக்கின்றதனல், கண்ணைக்கூட திறக் காமல் மூடிக்கொண்டு குப்புறப் படுத்துவிட்டாள்.

ஆத்மநாதனுக்கும் மனம் கட்டுக் கடங்காது தவிக்கின்றது. மற்ற எல்லோரையும் பார்த்த பிறகு அவன் திரும்பிப் போவதைத் தவிர, வேறு என்ன இருக்கிறது. சாதாரணமாய் ஆச்ரமத்திற்கு இவன் வந்த உடனே ஒரு மூலையாக வந்து நிற்கும் சுமதி அன்று கண்ணிலே படாதது மிகவும் வியப்பாக விருந்தது.

தன் தொழில் முறையில் கேட்பதுபோல் தலைவியை நோக்கி, "சரி! வேறு ஒருவருக்கும் ஒன்றும் உடம்பு இல்லையே?" என்றான்.

தலைவி :—ஆண்டவன் அருளால் ஒன்றுமில்லை. எல்லோரும் சுகமே.

ஆத்ம—ஓ! மறந்து விட்டேனே! நேற்று அனுப்பிய பேஷண்ட் எப்படியிருக்கிறாள்? ஒன்றும் கம்ளெய்ண்டு இல்லையா?

தலைவி :—ஒன்றுமில்லை. மிகவும் சவுக்யமாக இருக்கிறாள்.

இதற்குமேல் அவன் என்ன செய்ய முடியும்? தன் கவுரவம் ஒன்று குறுக்கிடுவதால் மனம் உடைந்துபோய், "சரி! போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சடக்கென்று போய்விட்டான்.

அவன், தானே சொந்தமாய்க் காரையோட்டுபவனாகையினால், தன் கவனம் முற்றிலும் அந்த ஆச்ரமத்தில் நாலாபக்கத்திலும் சிதறுண்டுத் தவிக்கும் நிலைமையில் காரைச் சரியாய் செலுத்தாது ஏதேனும் விபத்து வந்துவிடப் போகிறதே என்ற அச்சமும் அவனைப் பாதித்தது.

நேற்றிரவு தான் அவளுடன் இன்பமாய்ப் பேசி யனுப்பியிருக்கிறேன். இன்று இதற்குள் அவள் என்னைக் காணாது உள்ளேயே இருப்பதற்கு யாது காரண மிருக்கும்? ஒருகால் நாம் நமது கட்டுக்கடங்கா ப்ரேமையை அவளிடம் உடைத்துக் கூறிவிட்டதால், அவள் மனத்திற்குப் பிடிக்காது நம்மீது கோபங்கொண்டு வெறுப்புடன் எதிரே வாராது நின்றிருப்பாளோ!

இல்லை....இல்லை....அங்ஙனம் நினைப்பதற்கு இடமே இல்லை. அவள் முழு மனத்துடன் நேற்றுப் பேசிய வேகமும், "நான் தோற்று விட்டேன் டாக்டர்" என்று கூறிய உணர்ச்சியும் தன் இதயத்தைத் திறந்து என்னிடம் புதைந்துள்ள ப்ரேமை பொக்கிஷத்தை எடுத்து செவ்வனே காட்டியதே. அத்தகைய நங்கை இன்றே இம்மாதிரி இருப்பதற்கு ஏதோ முக்யமான காரணம் இருந்தே தீரவேண்டும்.

இதற்கு முன்பெல்லாங்கூட அவள் தன்போக்காக ஆச்ரமத்தில் உலாவும் வழக்கத்திற்கும் விரோதமாய் இன்று அமைந்த இந்தச் செய்கையினால் பெரிய குழப்பமல்லவா ஏற்படுகிறது. ஒரு

வேளை நேற்று திடீரென்று வந்த தலைவி அங்கு நடந்த சம்பவத்தைக் கவனித்துவிட்டாளோ! ஹா! பயங்கரம்! பயங்கரம்! அப்படிக் கவனித்திருப்பாளாயின், இனிமேல் சுமதியின் வாழ்க்கைக்கே ஒரு சகாப்தம் முடிந்துவிட்டதாகவன்றோ ஆகும். என்ன செய்வது?"

என்றெல்லாம் தனக்குள் எண்ணமிட்டுக் குழம்பியபடியே அந்த உணர்ச்சியில் தாக்கப்பட்டு வண்டியையோட்டியதால் ஆச்ரமத்துக்குப் பின் செல்லவேண்டிய வீட்டை மறந்துபோய் அதைத் தாண்டி வண்டியை ஓட்டிவிட்டான். டைரியில் குறித்துள்ளபடி போகாமல் நேரே போவதைப் பார்த்த, கூட வரும் உதவி டாக்டர் வியப்புற்று, "சார்! 12 நம்பர் வீட்டுக்குப் போக வேண்டுமே; அதைத் தாண்டி ஓட்டிவிட்டீர்களே!" என்று அவன் சொல்லிய பிறகே ஆத்மநாதன் அவ் உலகக் கனவிலிருந்து இவ்வுலகத்திற்கு வந்தான்.

தன்னுடைய இந்தத்தவறுதலை காட்டிக்கொள்ள இஷ்டமின்றிச் சமாளிக்கும்பொருட்டு, "மறக்கவில்லை. இதைவிட மேலத் தெருவு 15 நம்பர் வீட்டில் அதிக அவசரமாகப் போகவேண்டும். அதற்காக முதலில் அங்கு போய்விட்டுப் பிறகு திரும்பி வரவே, வேகமாய்ப் போகிறேன்" என்றான்.

பார்க்கவேண்டிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு, ஆத்மநாதன் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான். தன் தொழிலில் ஒருவிதமான கோளாறும் ஏற்படாமலிருக்கும்படியாக அருள்புரிய வேண்டிப் பகவானைத் தோத்திரம் செய்து வேண்டுகிறானேயன்றி, சுமதியின் மனமோகனகாரமான சுந்தர பிம்பத்தை அவனால் மறக்கவே முடியவில்லை.

"இந்த ரகஸ்யம் ஒருவேளை தலைவிக்குத் தெரிந்திருக்குமாயின், சுமதியின் கதி என்னவாகும்! ஆச்ரமத்தின் பெயருக்கே அது ஹானியாக வன்றோ முடியும்? ஐயோ! இந்தப் பயங்கரப் படுகுழியினின்று சுமதியை எவ்விதம் மீட்பது? என்னுடைய கௌரவத்தைக் குலையாமல் எவ்விதம் காப்பாற்றிக் கொள்வேன்?" என்ற பெருங் கவலையில் தத்தளித்தவனாய் இடிந்துபோய்விட்டான்.

19

மூர்க்க நாடகத்தின் முதல் காட்சி

சிதம்பரநாதனின் மனத்தைக் கலைத்து, கந்தனையும் உதைத்துத் துரத்தச் செய்து, அவரை அழைத்துக்கொண்டுபோகும் புண்ணியவான், "எங்கே சிதம்பரநாதனின் மனம் மாறிவிடுகிறதோ!" என்கிற பயத்தினால் வண்டிமுற்றும் உபதேசரத்னமாலை படித்து அவருடைய கோபத்தைக் கிளறிக்கொண்டே சென்று, டிக்கட்டை வாங்கி ரயிலில் ஏறிவிட்டான். அதன் பிறகுதான் அந்த மனிதனுக்கு மனம் நிம்மதியாகியது. எனினும் வண்டி கிளம்புகிறவரையில், திக்கு திக்கு என்று அடித்துக்கொண்டுதான் இருந்தது.

மணியடித்து வண்டியும் கூவிக்கொண்டு கிளம்பிய பிறகே, 'அப்பாடா' வென்ற பெரியமூச்சு வந்தது. ரயிலில் ஏதேதோ சமாசாரங்களையும், பத்திரிகை விஷயங்களையும் பற்றி, கூட விருந்த பொதுஜனங்களுடன் சம்பாஷித்தபடியே ப்ரயாணம் மும்முரமாக நடக்கிறது.

டிக்கட்டில்லாது வெகு சுதந்தரத்துடன் குடும்ப சகிதம் பிரயாணம் செய்யும் மூட்டைப் பூச்சிப் பெரியார்களின் தொல்லை யொருபுறம். டிக்கட் வாங்கியும் மூட்டைப் பூச்சிக்குமேல் அடைபட்டு, நிற்கவும் இடமின்றித் தத்தளிக்கும் பொதுஜனங்களின் சங்கடம் ஒருபுறம். டிக்கட் வாங்காது ரயிலில் ஏறிவிட்டு, டிக்கட் பரிசோதகர் எங்கே பார்த்துப் பிடித்துவிடப்போகிறார்களோ என்ற பயத்தினால் அகப்பட்ட இடத்தில் ஒளிந்துகொள்ள முயற்சிப்பதும் ஒளிந்துகொண்டு உபத்திரவிப்பதுமான இம்சை யொருபுறம். இத்தனைக்கும் மத்தியில் பாட்டுப் பாடிக்கொண்டு பிச்சைக்காரர்கள் வந்து ரோதனைசெய்யும் வேதனை யொருபுறம். மூட்டைப்பூச்சியின் கடி தாங்காது குழந்தைகள் அலறும் ஓலம் ஒருபுறம். "என் சார்! ஒரு வண்டிக்கு இத்தனை பிரயாணிகள்தான் ஏறலாம்" என்கிற போர்டைமட்டும் அழகாக வண்டியில் பதியவைத்திருக்கிறதே பிர

யாணிகளைப் பாருமையா பாரும். கணக்குக்குமேல் ஒன்றரை பங்கு இருக்கிறார்கள். இந்த அநியாயத்திற்குக் கேள்விமுறை இல்லையா? என்று ஒருவர் சிதம்பரநாதனைப் பார்த்துக் கேட்டார்.

எதற்கும் முந்திக்கொள்ளும் முந்திரிக்கொட்டை சுபாவமுடைய புண்ணியவானாகிய வைத்தியநாதன், உடனே "ஆமாம். கேள்வி யாவது முறையாவது சார்! வரவர அக்ரமந்தான் அதிகமாகிவிட்டது. சினிமாக் கொட்டாயிலும், நாடகக் கொட்டாயிலும் இத்தனை டிக்கட்தான் விற்கலாம்; அதற்குமேல் இடமில்லை என்று சொல்லுவதற்கு மட்டும் சம்பிரதாயமோ, சட்டமோ ஒன்று இருக்கிறது. ஆனால் அனுஷ்டானத்தில் பாருமே! பணத்திற்காக ஏராளமான ஜனங்களை விட்டுவிட்டு ஆடுமாடு சந்தைபோல் செய்து பெருத்த அமளியை உண்டாக்கி விடுகிறார்கள். அதில் எத்தனை திருட்டு. எத்தனை அடிதடி. எத்தனைபேர் நசுங்கிச் சாதல். அப்பப்ப! அந்த கதிபோல் இதுவும் ஒன்று. நீர் வேண்டுமானால் இங்கு டிக்கட்டு வாங்காது மூலையில் பதுங்கும் பெரிய மனிதர்களை விட்டுவிட்டு, டிக்கட்டுகளை மட்டும் எண்ணும் பார்க்கலாம். இங்கு போட்டுள்ள கணக்கைவிட ரெட்டைப் பங்காக இல்லாவிட்டால் நான் காதை யறுத்துக்கொள்கிறேன். சார்! இந்த அநியாயத்தைக் கேட்பாரே இல்லை. இப்படி இராக்காலத்தில் ஜனங்கள் உட்காரவும் இடமில்லாது தத்தளிப்பதென்றால், அதில் உண்டாகும் கஷ்டங்கள் கூறத் திறமா? இதற்கெல்லாம் யாரய்யா ஜவாப்தாரி? இப்படி அடைப்பது சுகாதாரத்துக்குத்தான் முறையா?" என்று ஆத்திரத்துடன் கூறினான்.

இதை முடிப்பதற்குள் எதிர்ப் பலகையில் உட்கார்ந்திருந்த ஒரு நாட்டுப்புறத்து ஆள் பேசத்தொடங்கி, "எஞ்சாமி! சுகாதாரமும் ஜீவகாருண்யமும் இந்த மூணாவது வகுப்பிலே ஏதுங்க? அதிலும் என்னெப்போல ஏயெகிட்ட மருந்துக்குக் கூட அகப்படாதுங்க.

ஒசத்தியான வகுப்பிலே யாரோ ஒரு பெரிய டாக்டரு பிரயாணம் செய்தாராம். அவர் கைவிரல்லே வண்டியின் ஜன்னக் கதவு பட்டுடிச்சாம். அதுக்காவ அந்த டாக்டர் கேஸ் போட்டு ரயில்

காரங்க கிட்ட ஆயிரமாயிரமா ரூபாயெ கறந்துப்புட்டாராம்னு பத்திரிகே படிச்சு ஒத்தரு சொன்ஞரு.

சாமீ! அத்தெ கேட்டு எனக்கு ஆக்ஷீரமாயி போயிடுச்சுங்க. அவரு பெரிய பணக்காரரு. அவருக்கு அது தகும். இந்தமாதிரி மூணுவது வகுப்பு வண்டிலே அடைபட்டு நசுங்கி காயம் பட்ற ஜனங்க தினம் கணக்கா வழக்கா சாமீ!

முந்தாநேத்தி நான் இப்படித்தான் ரயில்லே போனேன். ஒரு கர்ப்பிணி. இன்னொருத்தி சின்ன பச்செ கொயந்தெயே எடுத்துக் கிணு ரயில்லே வந்தாங்க. ஒரு பெரிய டேஸன்லே யார் யாரோ வண்டிலே மூட்டெயும் முடிச்சும் சாமானும் பொட்டியுமா மிருகம் போலே வந்து ஏறி, பொட்டியெயும் படுக்கையெயும் இயுத்து இயுத்து உள்ளே தள்ளிஞங்க.

யார் எத்தனெ கூச்சபோட்டும் கேக்காமே ஒரு படுக்கெயெ தூக்கி போடச்செ சின்ன கொயந்தெ மேலெ போட்டுட்டாங்க. சாமீ! என்ன அக்குறும்பு பாருங்க. கொயந்தெ மூச்சுத் தணறி போயிடுச்சு. ஏதோ யார் சேஞ்ச புண்ணியமோ மூச்சு நிக்கல்லே. ஆனாலும் ஆபத்து ஆபத்து தானேங்க. கர்ப்பிணி காலே மெரிச்சு ரத்த காயமாப்பூடுச்சு. ஏயெங்கன்ஞ இப்படித்தான். இவங்க கொயந்தெ செத்துப்போயிருந்தாலும் அதுவும் கேப்பாரில்லிங்க. அவுங்க அஜாக்கிரதெண்ணுதான் பூடுங்க" என்று குறையோடு கூறினன்.

சிதம் :—ஆமாம்! வாஸ்தவந்தான். இவன் சொல்றது முற்றி லும் உண்மை. அம்மாதிரியான சம்பவங்களை நானும் எத்தனையோ பார்த்திருக்கிறேன். அவ்வளவு தூரம் போவானேன்? இதே வண்டியில் அதோ! அதோ!....நாலாவது பலகையில் படுத்திருக்கும் பெண்ணைப் பாரும்; பிராணன் இழுப்பதுபோலிருக்கிறது. இந்த வண்டியிலேயே மோக்ஷம் பெற்றுவிடுமோ என்னவோ! அடுத்த பலகையில் பூர்ண கர்ப்பிணி. எதிர்ப் பலகையில் ஐயோ பாவம்! குஷ்டரோகி. இந்த பக்கம் பாருமே. க்ஷயரோகி இரும்பிக் கோழை யைக் கூடத் துப்புகிறுன். இதெல்லாம் நரகானுபவம் என்றுதான் நினைக்கவேண்டும்.

இந்தக் கோழையை மிதித்தால் கட்டாயம் க்ஷயரோகம் வந்தே தீரும். அதேமாதிரிதான் குஷ்டரோகமும் இல்லையா சார்! இந்த ரயில்வேக் கம்பெனிக்காரர்கள், இம்மாதிரி கொடிய நோயாளிகள் ஏறுவதற்கென்று ஒவ்வொரு ரயிலிலும் ஓர் தனி வண்டியை ஏன் சார் போட்டு, அதில், "கொடிய நோயாளிகள் ஏறும் வண்டி" என்று போர்டு போடக்கூடாது. ஜனங்களின் சுகாதாரத்தையும் நன்மையையும் ஏன் கவனிக்கக் கூடாது? எல்லோருக்கும் சௌகரியத்தைச் செய்யவேண்டிய இந்த உயர்தர ஸ்தாபனத்தில் இந்த மாதிரி சில மாறுதல்கள் செய்தால் எத்தனையோ நல்லதா யிருக்குமல்லவா!

வேறொருவர்:—ஆமாம் சார்! நீர் பெரிய சீர்திருத்தத்தைச் சிருஷ்டிக்கிறீரே! அது அவ்வளவு சுலபமாய் நடந்துவிடும் காரியமா! பெரிய மனிதர்கள், பத்திரிகாசிரியர்கள், பொது ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து, இம்மாதிரி விஷயங்களை எழுதிப் போட்டுக் கிளர்ச்சி செய்தால், ஒருகால் நடக்குமோ என்னமோ!

நாட்டு:—ஏஞ்சாமீ! சீமெ, கீமெ அந்த ஊருங்கள்ளேல்லாம் ரயில்லே பொதுஜனங்களுக்கும் ஏபெங்களுக்கும் எத்தனையோ சவுக்கியங்க செஞ்சுதராங்களாமே. அது நிஜந்தானுங்களா!

சிதம்:—சீமையிலும் மற்ற வெளி தேசத்திலும் ஒரு பிச்சைக்காரனைக் கண்ணால் காணமுடியாதாண்டா; நம்ப தேசத்தில் பிச்சைக்காரர்களைத் தவிர வேறு பொருளைக் காணமுடிவதில்லை. பிச்சைக்காரர்களுக்கு ஏதோ தொழிலைக் கொடுத்துக் காப்பாத்துகிறார்களாம். அவர்களுக்கு அந்தந்த தேசத்தின் கவுரவம், மதிப்பு, ஜாதி யபிமானம், சுயமரியாதை இதெல்லாம் இருக்கிறது. நம் தேசத்தைப் பாரேன். ஒற்றுமையில்லாது ஒருவருக்கு ஒருவர் சம்பந்தமே இல்லாதது போலிருக்கிறார்கள். இதில், எப்படியப்பா விமோசனம் உண்டாகும்?....

என்று லோகாபிராமமாய்ப் பேசிக்கொண்டு வருகையில், ரயில் ஓர் பெரிய ஜங்ஷனில் வந்து நின்றது. ஒரே இரைச்சல், பல ப்ராயாணிகள் ரயில் மாறுவதற்கு ஏறுவதும், இறங்குவதும் பெருத்த கோஷமாகிவிட்டது. தின்பண்டங்கள் விற்போரின் கூக்குரலும்,

போர்ட்டர்களின் போட்டியும், இன்னும் வேறு பண்டங்கள் விற்போரின் அமளியும் ஏக தடபுடலாக விருந்தது.

சிதம்பரம் ஏறி இருந்த வண்டியிலுள்ள பழய மனிதர்கள் கொஞ்சம் இறங்கினுர்கள். அப்பாடாவென்று இனியாவது காலை நீட்டிக்கொண்டு படுத்துக்கொள்ளலாம் என்று படுக்கையை அவிழ்ப்பதற்குள், முன்னேயைவிட இரண்டு பங்கு அதிகரித்த ஜனங்கள் குழந்தையுங் குட்டியுமாய் வந்து அடைந்துவிட்டார்கள்.

சிதம்பரநாதனுக்குக் கோபம் பிறிக்கொண்டு வந்துவிட்டதென்றாலும் அதை யார்மீது காட்டமுடியும்? அவிழ்த்த படுக்கையை மீண்டும் கட்டி வைத்துவிட்டு, உட்கார்ந்துள்ள இடமாவது தக்குமோ, அசைந்தால் அதுவும் போய்விடுமோ என்ற பயத்துடன் உட்கார்ந்திருந்தார்.

எதிர்ப்பலகையி லிருந்தவர் "என்ன இரைச்சல்! என்ன அநியாயம். இந்த 15 ரூபாய் டிக்கட்டு வந்தாலும் வந்தது. இந்த மாதிரி அவதிதான். எந்தப் பக்கத்து ரயிலில் பாருங்கள். ஆடுமாடு அடைவதுபோலத்தான் ஜனங்கள் அடைந்து கிடக்கிறுர்கள். அதோ! பாருங்களேன். நிற்கும் வண்டிகளில் எதிலாவது ஒரு இடமாவது காலி இருக்கிறதா? நாலாபக்கமும் போகும் வண்டி, வரும் வண்டிகளில் இதே கதிதான் பாருங்கள்" என்றுர்.

சிதம்பரத்துடன் கூடவந்த புண்ணியவான், "அப்பா! மூச்சு அப்படியே நின்றுவிடும் போலிருக்கிறதே! சாராயத்தைக் குடித்துவிட்டு, இந்தப் பீடைகள் எல்லாம் வந்து ஏறிவிட்டன. மூக்கைத் துளைக்கிறது. ரயில் நகர்ந்தால்தான் காற்று கொஞ்சமாவது வரும். பகல்போல் வெக்கையாயிருக்கிறதேயன்றி, இரவுபோலிருக்கிறதா பாரும். நான் இறங்கி சற்று உலாவுகிறேன். நீர் என் இடத்தைப் பார்த்துக்கொள்ளும்" என்று கூறி இறங்கி, "அம்மாடீ!" என்று சற்று அப்படியும் இப்படியும் உலாவினுன்.

கோடிவரையில் போய்த் திரும்பிவருகையில், அவனையறியாது ஆச்சரியத்தால் தாக்கப்பட்டு, அப்படியே முதல் வகுப்பு வண்டியின் ஜன்னல் பக்கம், தடைகட்டிய நாகம்போல் சில விநாடிகள்

நின்றான். உடனே எதையோ எண்ணியவனைப் வியர்க்க விரு விருக்க ஓட்டமாகத் தான் உட்கார்ந்திருந்த வண்டிக்கு ஓடிவந்தான்.

சிதம்பரத்தை நோக்கி, "ஓய்! ஓய்! சீக்கிரம் இறங்கி வாரும். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலாகிவிட்டது. இங்கே வாருமே!" என்று ரகஸ்யம்போல் காதோடு கத்தினான். இடம் போய்விடாதபடி உத்தரியத்தை வைத்துவிட்டுச் சிதம்பரநாதரும் ஏதோ, என்னவோ என்று ஆத்திரத்துடன் இறங்கிவந்தார்.

அந்த மனிதன் அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அந்த முதல் வகுப்பு வண்டியருகில் தடதடவென்று ஓடி ஜன்னலின் அருகில் நிற்கவைத்து, "உஷ்!....மூச்சுவிடாதேயும். உள்ளே என்ன பாரும். இப்போதாவது கந்தன் முகத்தில் சாணி அறைந்தாற்போல் உண்மை புலப்படும்" என்று குத்தலாகக் குத்திக் காட்டினான்.

சிதம்பரநாதன் இதயத்தில் படபடவென்று அடித்துக்கொள்ளும் வேகத்துடன் உள்ளே நோக்கினார். நெருப்பை மிதித்தவர் போல் "ஹா" வென்று ஒரு துள்ளு துள்ளிக் குதித்தார். அப்படி அவரைத் துள்ளச் செய்தக் காட்சியாவது, அழகான ஓர் இளம் பருவத்து மங்கை படுக்கையில் ஒய்யாரமாய் பல தலையணைகளுடன் படுத்திருக்கிறாள். ஆத்மநாதன் சிறிய கண்ணாடிக் கோப்பையில் எதையோ அவள் வாயில் மெல்ல ஊற்றுகிறான். கழுத்தையும் வயிற்றையும் தடவுகிறான். அவள் முகம் எதிர்ப் புறமாயிருப்பதால் நன்றாகத் தெரியவில்லை.

இக் காட்சியொன்று போதாதா? சிதம்பரத்தின் ஆத்திரத்தை அதிகப்படுத்திவிட்டது. அவர் பொது ஸ்தலமென்பதையும் பாராமல், "ஹா!....என்ன அக்கிரமம்! நான் நினைத்தபடியேதான் ஆகிவிட்டது. இம்மாதிரியான திருட்டு வியாபாரம் இருந்ததால்தான் அவன் கல்யாணமென்றால் கசந்து வந்தான். இந்த அக்கிரமத்தை நான் சகிக்கமாட்டேன். இப்போதே இந்தக் கதவை இடித்துக் கொண்டு உள்ளே போய் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விடுகிறேன். இந்தக் கண்ணாடிக் கதவை உடைத்து விடுகிறேன்" என்று ஆவேசத்துடன் கூறிக்கொண்டே, கையை ஓங்கிக் கண்ணாடியை உடைக்க முயன்றார்.

கிளறிவிட்டுக் கூத்துப் பார்ப்பவர்களின் கண்களுக்கு இது போன்ற காட்சிகள் குளிர்ச்சி யல்லவா? மனத்தில் உதைப்போ, பயமோ, சங்கடமோ ஒன்றுமே இல்லாது விபரீதத்தை விலைக்கு வாங்க எதிர்பார்ப்பவர்கள்போலல்லவா ஆகிவிடுவார்கள்? அம்முறையில் இம் மனிதனும் இருப்பதில் என்ன வியப்பு!

20

சந்தர்ப்ப சாட்சியும், சனியனின் ஆட்சியும்

அன்று ஆத்மநாதன் சாப்பாட்டிற்கு வீட்டிற்குச் செல்வதையும் வெறுத்து யோசனைகளில் குழம்பிப்போய் ஆஸ்பத்திரியிலுள்ள தன் தனி அறையில் ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டிருந்தான். வழக்கத்திற்கு மேல் அதிக நாழியாகிவிட்டதால், வீட்டில் அவனுடைய தாயார் மனவருத்தத்துடன் ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் செய்தாள்.

அந்த மணியின் சப்தத்தைக் கேட்ட பிறகே அவன் சற்று உணர்ச்சி பெற்று எழுந்து ரிஸீவரை எடுத்தான். "ஹல்லோ! அம்மா!....என்னம்மா!....இதுக்காகவாம்மா நீ பட்டினி கிடக்க வேண்டும்? நீ சாப்பிடம்மா! எனக்கு கொஞ்சம் வேலை இருக்கிறது. பிறகு வருகிறேன். ஒருகால் சாப்பாட்டிற்கு வராவிட்டாலும் டிப்பனுக்கு வருகிறேன்....நான் பட்டினி ஒன்றும் இல்லையம்மா!.... ஏதேதோ சாப்பிட்டிருக்கிறேன். ஆமாம்....பிஸ்கேட்டு நீ கொடுத்ததைத்தான் சாப்பிட்டேன்....சரி!....ஆகட்டும்....என்று பேசிவிட்டு மீண்டும் உட்கார்ந்தான்.

"சேச்சே!....என்ன பாவத்தைச் செய்கிறேன்? பெற்ற தாயின் மனத் தவிப்பையும், அன்பையும் அறிந்துங்கூட என் சுயநலத்தின் ஒரு அல்ப விஷயத்திற்காக நான் நெறி தவறி அன்னையிடம் பொய் சொல்லவும் ஆரம்பித்துவிட்டேனே! ஒரு பொய் சொல்லிவிட்டால்,

அதை மறைக்க ஆயிரம் பொய்யல்லவோ சொல்லவேண்டி வரும்" என்ற சித்தாந்தம் எனக்குத்தான் பலிக்கும்போல் இருக்கிறதே!

என் அன்னை கொடுத்த பிஸ்கேட்டை அப்படியே சுமதியின் வயிற்றில் நானே அன்புடன் செலுத்தி அதை க்ளோஸ் செய்த ஒரு சிறு குற்றத்தையும், பொய்யையும் மறைப்பதற்கு அதை நானே தின்றதாக இன்னொரு பொய் சொல்லியாகிவிட்டது. உம்....இந்தப் பிரேமையின் விஷயத்தில் இன்னும் எத்தனை பொய் சொல்ல வேண்டுமோ! எத்தனை குற்றங்கள் செய்ய வேண்டுமோ! பெற்ற வர்களிடத்திலேயே எத்தனை மறைத்தும், சாக்கிட்டும், வஞ்சித்தும் நடக்கவேண்டுமோ?

ஐயோ! நான் சத்தியத்துடன் நெறி தவறாது நடக்கவேண்டு மென்ற சங்கல்பத்துடன் இதுவரையில் நடந்து வந்தும் இந்த ஒரு அல்ப விஷயத்தில் இன்றே பொய் சொல்ல ஆரம்பித்துவிட்டேனே! இன்னும் என்னென்ன நடக்குமோ! ஹா! நான் சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் என் சுய நல உணர்ச்சியை இழப்பேனா? அல்லது அந்த அல்ப விஷயத்திற்காக அழியாத சத்தியத்தையும், தருமத் தையும், கடமையையும் இழந்துவிடுவேனா!

இல்லை....என் கடமையை நான் ஒருபோதும் இழக்கமாட் டேன். 'எந்த கிருஸ்துவச்சியை—எந்த அனாமதேயத்தை—கட்டிக் கொண்டு அழுகிறாயோ?' என்று தந்தை சொல்லியதுபோலவே, தன் பிறவி தனக்குத் தெரியாத அனாதையின்மீதல்லவா என் பாழும் மனம் சென்று தவிக்கிறது. இதைப் பிறரிடம் சொல்லவும் வெட்கம். துக்கம்....சிரிப்பார்கள்.

பாழாய்ப்போன என்னுடைய அந்தஸ்தும், உயர்ந்த குல மென்கிற போர்வையும் இதற்கு நேர் விரோதமாக வன்றோ அமைந்துவிட்டன. சுமதியைப்பற்றி நான் வார்த்தையை எடுத் தாலே என் பிதா தற்கொலையல்லவா செய்துகொள்வார்! என்மீது தன்னுயிரையே வைத்திருக்கும் பெற்றோருக்கு நான் பெருந் துரோகியாக வல்லவோ ஆகிவிடுவேன்? ஹா!....இதென்ன தர்ம சங்கடம்!" என்று தனக்குள் பலவித எண்ணத்துடன் குழம்பிப் போய் உட்கார்ந்திருந்தான்.

அச் சமயம் ஒரு வேலைக்காரன் பணிவுடன் உள்ளே வந்து "சார்! ராதாபுரம் ஜமீந்தாரிணியம்மாள் வந்திருக்கிறார்கள். அவசரமாக உங்களைப் பார்க்கவேண்டுமாம். உள்ளே வரலாமா என்று கேட்கிறார்கள்" என்றான். வரச்சொல்லு என்று கூறிவிட்டுத் தன் மாறுதல்களை அடக்கிக்கொண்டு, தெளிவாய் உட்கார்ந்திருந்தான்.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஜமீந்தாரிணி கண்ணீர் பெருக "டாக்டர்! டாக்டர்! இதோ தந்தியைப் பாருங்கள்" என்று கூறி, ஒரு தந்தியைக் கொடுத்தாள்.

ஆத்ம:—என்ன விசேஷம்?....இப்படி உட்காருங்கள்—என்று கூறித் தந்தியைப் பார்த்தான்.

> "ஆபத்து. ச்யாமளாவுக்கு உடம்பு மிகவும் அதிகமாக இருக்கிறது; ஜுரம் 105 டிக்ரிக்கு வந்துவிட்டது. டாக்டருடன் உடனே புறப்படவும்."

இதைப் பார்த்ததும் ஆத்மநாதன் சில விநாடிகள் யோசித்தான். "சரி! இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்? ஏதாவது கம்ப்ளெயிண்டு முன்பே உண்டா?" என்றான்.

ஜமீந்:—ஒன்றுமே இல்லை டாக்டர்!....இரண்டு நாட்களுக்கு முன்பு ஏதோ சாதாரண ஜுரம் என்று அவளே எழுதினாள். அவள் புருஷனும் கல்கத்தாவுக்கு காரியமாய்ப் போயிருக்கிறாராம். இத் தந்தியிலிருந்து அதே ஜுரம் அதிகரித்து விட்டதாகத் தெரிகிறது. நீங்கள் உடனே புறப்பட்டு என்னுடன் வரவேண்டும். எனக்காக எதையும் சாக்குச் சொல்லக்கூடாது. காரிலியே கொண்டுவந்து விடலாம்.

ஆத்ம:—அடாடா....105 டிக்ரி ஜுரமிருக்கையில் காரில் கொண்டுவருவதாவது. எவ்வளவு தூரமிருக்கிறதென்று நினைத்திருக்கிறீர்கள்? உங்கள் மகள் இருக்கும் ஊர் இங்கிருந்து 300 மைலுக்குக் கிட்டத்தட்ட இருக்கிறது. நீங்களும் இந்த நிலைமையில் அவ்வளவு தூரம்போய் வருவது சற்றும் சரியில்லை. உங்களுக்கு இன்றும் டெம்பரேச்சர் 100 இருந்ததென்று காலையில்தானே சொல்லி அனுப்பினீர்கள். நீங்களும் போகக்கூடாது; காரிலும் அவளைக் கொண்டு வரக்கூடாது.

ஜமீந் :—ஐயோ! இந்தச் சமயம் என் உடம்பைப் பற்றிப் பார்க்க எனக்குத் தோன்றவில்லை டாக்டர்! நான் எப்படி செத்தாலும் பரவாயில்லை. குழந்தை பிழைத்தால் போதும். அவரும் டில்லிக்குப் போய்விட்டார். அப்படியானால் ஒன்று செய்யுங்கள். வைத்தியரும் கடவுளும் ஒன்று என்ற வாக்கின்படி நீங்கள் மட்டும் இன்று வண்டியிலேயே போய் முதல் வகுப்பில் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்துவிடுங்கள். எங்கள் காரியஸ்தனை உதவிக்கு வேண்டுமாயின் அனுப்புகிறேன். இதோ! 500 ரூபாய் செலவுக்கு இருக்கட்டும். கூட ஒரு நர்ஸ், ஐஸ் எல்லாம் கொண்டுபோங்கள். எனக்காக சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும்—என்று கண்ணீர் பெருகக் கெஞ்சினாள்.

அந்த ஜமீந்தாரிணியம்மாள் இந்த ஆஸ்பத்திரிக்குப் பலவிதத்திலும் உதவி செய்திருக்கிறாள். ஆகையால், அவர்கள் விஷயத்தில் அவன் கடமைப்பட்டவனாகிவிட்டான். மறுக்கமுடியாமல் ஒப்புக் கொண்டான். "சரி; அம்மா! நீங்கள் கவலைப்படவேண்டாம். இதோ நான் போகிறேன்" என்று தைரியஞ் சொல்லியனுப்பி விட்டான்.

உடனே மருந்துகள் தயார் செய்துகொண்டு ஒரு பழகிய நர்ஸை பிரயாணச்சித்தமாகும்படி உத்தரவிட்டுவிட்டு வீட்டிற்கு வந்தான். தாயார் அப்போதும் சாப்பிடாது காத்திருந்தாள். அன்னையின் அன்புக்காக உள்ளம் பூரித்தவனாய், சாப்பிட்டுக்கொண்டே தான் ஊருக்குப் போய்வருவதாகக் கூறிவிட்டு, உடனே கிளம்பி விட்டான்.

அவ்வாறு சென்று ஜமீந்தாரிணியின் மகளான நோயாளியை முதல் வகுப்பு வண்டியில் அழைத்து வருவதைத்தான் முன் அத்யாயத்தில் கூறியபடி, சிதம்பரநாதனும் வைத்தியநாதனும் பார்த்துப் பிரமித்தார்கள். அச் சமயம் மருந்து கொடுக்கவேண்டிய நேரமாதலால் சிறிய அவுன்ஸ் கிளாஸிலிருந்து மருந்தைத் தானே நோயாளிக்குக் கொடுத்து வாந்தியாகாதபடித் தடவிக் கொடுத்தான். ஐஸை அலம்பிப் பையில் போடுவதற்காக அச் சமயம் நர்ஸ் பாத்ரூமுக்குள் சென்றிருந்ததால் இங்கு இவ்விருவர் மட்டும் அவர்களின் கண்ணிற்குப் பட நேரிட்டது.

இந்தக் காட்சியைக்கண்டு விபரீதமான கோபமடைந்த சிதம்பரநாதன் கண்ணுடியை உடைக்கக் கையைத் தூக்கினதும், வைத்தியநாதன் அவர் கையைப் பிடித்து நிறுத்தி, “ஓய்! இதென்ன இப்படி விபரீதமான காரியம் செய்து விஷயத்தைச் சந்தி சிரிக்க அடித்துவிடப் பார்க்கிறீரே! நில்லும். உமது மகனின் திருவிளையாடல் காட்சிகளில் இப்போதுதானே முதல் காட்சி, முதல் படலம் பார்த்தீர். இன்னும் மிச்சத்தையும் பார்த்தபிறகல்லவோ அவனைத் தண்டிக்கவேண்டும்? நீர் கண்ணுடியை உடைத்தால் ரயில்வே போலீஸார் உம்மை இவ்விடத்திலேயே கைதியாக்கி விடுவார்கள் தெரியுமா? அதையே ஒரு சாக்காகக்கொண்டு உமது மகன் உம் மீதுள்ள ஆத்திரத்தினுல், உமக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று சாக்ஷியங் கொடுத்து உம்மைப் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டுத் தான் ஹாய்யாக இருப்பதைப் பார்ப்பான் தெரியுமா!

அவன் பெரிய டாக்டராகையால், அவன் வார்த்தைதான் எடுக்கும். ஆத்திரப்பட்டு அகப்பட்டுக் கொள்ளாதேயும். ஐயையோ! இன்னும் வண்டி கிளம்ப மூன்றே நிமிஷங்கள் தான் இருக்கின்றன. வாரும்; வாரும்” என்று மூச்சுவிடாது கூறினன்.

இவைகளை எல்லாம் கேட்ட சிதம்பரநாதனுக்கு ஒருபுறம் பயம் பிடித்துக்கொண்டது. எங்கே தன்னைக் கைதியாக்கி பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் போட்டுவிடுவார்களோ என்ற திகில் உள்ளூறப் புகுந்துகொண்டதால், கண்ணுடியை உடைப்பதை நிறுத்தினர். “ஏன்? நாம் இப்போதே இதே வண்டியில் ஏறிக்கொண்டு, அவனைப் பஜித் செய்தால் என்ன?” என்று உறுமினர்.

வைத்தி:—அட எழவே! ஏனய்யா உமக்கு இந்த ஆத்திரம்! ஒவ்வொன்றில் ஒரு ஆபத்து இருக்கிறதய்யா! இது என்ன வகுப்பு தெரியுமோன்னே! முதல் வகுப்பு. டிக்கட்டில்லாமல் ஏறியதால் அவனுக்கு உம்மீதுள்ள ஆத்திரத்தில் அவனே காட்டிக் கொடுத்து உம்மைத் தண்டித்துவிடுவான் தெரியுமா....அதுவும் தவிர கோபம், பாபம், சண்டாளம் என்பது போல், ஓடும் ரயிலிலிருந்து உம்மை உருட்டிவிட்டாலும் விடுவான். எதற்கும் துணிந்துவிட்ட அவனை

நீர் நம்பாதேயும். கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது. வாரும். நேரமாகிவிட்டால் வண்டி போய்விடும்.

சிதம் :—என்னய்யா எந்த பக்கம் போனாலும் மடக்கி எழ வெடுக்கிறீர் ? நான் ஏன் இனி அங்கு போகவேண்டும். அடுத்த ரயிலில் ஊருக்கே போய்விடலாம் வாரும். இந்த ஒரு கண்ருவி யைப் பார்த்ததே போதாதா !

வைத்திய :—அடாடா ! க்ஷணபித்தம், க்ஷண சித்தமா சார் உமக்கு ? வாருமய்யா ! காசைக் கொட்டி டிக்கட்டு வாங்கியாச்சு. இவன் லீலைகளை முற்றிலுந்தான் பார்த்துவிட்டுப் போமய்யா ! ஐயையோ ! இன்னும் ஒரே நிமிஷந்தானிருக்கு. வாரும்—என்று இருவரும் ஓட்டமாக ஓடித் தாங்கள் முன்பு இருந்த வண்டியில் ஏறினர்கள். அடுத்த விநாடியே வண்டி கிளம்பிவிட்டது.

வண்டியின் வேகமும் இறைச்சலும், நெருப்பும், புகையும் எத்தனை விதமிருக்கிறதோ அத்தனைவிதம் சிதம்பரநாதனின் மனத்தில் வேலை செய்கிறது. தான் தவம் செய்து பெற்ற மகனின் கதி இப்படியா ஆகவேண்டும். அவனுக்குக் கல்யாணத்தைச் செய்து கண்குளிரப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டதற்கு அவன் இம்மாதிரி துர்ப்புத்திக்காரனாகிவிட்டானே என்கிற ஆத்திரமும், துக்கமும், வெட்கமும் மாறி மாறி அவரைச் சித்திரவதை செய்கின்றன. அதே எண்ணத்தில் குழம்பிப்போய் சிதறிய மனத்துடன் அசையாப் பதுமைபோல் உட்கார்ந்து விட்டார்.

வைத்தியநாதனுக்கோ, தான் சபதம் செய்து அழைத்து வந்த மனிதனுக்கு ரயிலிலேயே தான் கோரிய காரியம் சித்தி பெற்றுவிட்ட சந்தோஷத்தால் உள்ளம் பூரித்தது. அவ் வகையில் அவனும் ஊமைபோலானன். ரயிலும் தன் வேலையை விடாது செய்து கொண்டிருந்தது.

பொழுதும் தியங்காமல் தன் கடமைப்படி நகர்ந்துகொண்டே இருந்தது. ஜமீந்தாரிணியம்மாள் இருக்கும் பங்களாவுக்கும் வண்டி போய் நிற்கும் பெரிய ஜங்ஷனுக்கும் சுற்று தூரம். அதோடு ஜங்ஷனில் இறங்கினல் அசாத்திய கூட்டமாகவிருக்கும். நோயாளியை

ஸ்ட்ரெச்சரில் தூக்கிச் செல்ல கஷ்டமாயிருக்கும் என்பதை எல்லாம் உத்தேசித்து ஆத்மநாதன் நாலைந்து சின்ன ஸ்டேஷனுக்கு முன்பே இறங்கி காரில் போய்விட ஏற்பாடு செய்திருந்தான்.

அதன்படியே ஜமீந்தாரிணி தக்க ஏற்பாட்டுடன் அந்த ஸ்டேஷனில் வந்திருந்தாள். அப்போது பின்மாலை மணி 5 இருக்கும்; இருள் பிரியவில்லை. வண்டியிலிருந்து நோயாளியை இறக்கி ஜாக்கிரதையாக காரில் ஏற்றிக்கொண்டு ஆத்மநாதன் ஜமீந்தாரிணியுடன் போய்விட்டான்.

ரயிலுக்குள் குமுறிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் சிதம்பரநாதன் ஆத்திரத்தின் மிகுதியால் தான் அந்த வண்டியின் அருகிலேயே போய் நின்று அவன் இறங்கும்போது காரியுமிழ்ந்து பஜீத் செய்து விடவேண்டும் என்று எண்ணித் தனக்குள் தீர்மானித்துவிட்டார்.

வண்டியும் தான் இறங்கவேண்டிய இடத்தில் நின்றதும் முதலில் அதி வேகமாக இறங்கி அந்த முதல் வகுப்பு வண்டியின் முன்பு போய் நின்றார். அதே முதல் வகுப்பு வண்டியின் மேல் பலகையில் படுத்திருந்த ஒரு ஆங்கிலோ—இந்திய தம்பதிகள் கையில் பெட்டியுடன் இறங்கினர்கள்.

சிதம்பரநாதன் கற் ற்றென்று காறிக்கொண்டு உமியவும் தயாராகிவிட்ட சமயம், சடக்கென்று முகத்தைப் பார்த்ததும் வேறு மனிதனாக விருப்பது கண்டு தனக்குள்ளேயே வெட்கித் தலை குனிந்தார். அந்த மனிதன் இவர் காரியத்தைப் பார்த்துவிட்டானாகையால் கன்னத்தில் அறையாத தோஷமாய் "ஓய்! இது என்ன ஒங்கூட்டுச் சாக்கடேன்னு பாத்தியா! ஜாக்கிரதை. ஆள் வற்றது தெரியாமெ காரித் துப்பப்போறே" என்று கையைப் பிடித்து இழுத்துத் தூர நிற்க வைத்துவிட்டு, தன் மனைவியை இறக்கி அழைத்துச் சென்றான். அவள் கடகடவென்று சிரித்துக்கொண்டே போனதானது சிதம்பரநாதனின் மனத்தில் ஈட்டி குத்தியது போலாகிவிட்டது.

வைத்தி:—ஓய்! நீர் ஆனாலும் அவசரக் குடுக்கை. ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கவில்லையா! வீணாக அந்த சிடுமூஞ்சி சட்டைக்காரனிடம் அவமானப்பட்டீரே! என்ன அவசரம் அடித்துக்கொண்டு போகிறதுன்றேன்.

சிதம்:—இந்த அழகான பிள்ளையெ பெத்ததற்கு எல்லாரிட மும்தான் நான் அவமானப்பட்டுச் சாகப்போகிறேன். அது கிடக் கட்டும். ஆசாமி எங்கெங்காணும்? இந்த வண்டியில்தானே இருந்தான்.

வைத்தி:—ஐயையோ! எறங்கிப்போய் விட்டானு என்ன! நாம் பார்த்தபோது துரைமகன் அதிலில்லையே. இது வேறு வண்டியோ என்னவோ—என்று இருவரும் ஓட்டமாக ஓடி, முதல் வகுப்பு வண்டிகளை எல்லாம் பார்த்தார்கள். எல்லாம் காலி.

சிதம்பரத்தின் மனம் உடைந்து சப்பென்று ஆகிவிட்டது. "ஜால வித்தையா யிருக்கிறதே....சரி. இந்த கூட்டத்தில் இனி தேடமுடியாது. அவளுடன் அவன் காரில் போய்ச் சேர்ந்திருப் பான். நீர் வாரும். எங்க மாமா வீட்டிற்குப் போகலாம்" என்று அவரை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

தன் ஊரிலேயே தன் வீட்டுக்குப் போகாது வேறு மனிதர் வீட்டிற்குப் போனுல் யாரேனும் பார்ப்பவர்கள் பரிகஸிப்பார் களோ என்ற பயம் ஒருபுறம் சிதம்பரத்திற்குப் பாதிக்கிறது. அதோடு, தான் வந்தும் தன் வீட்டிற்குப் போகாதது மனைவிக்குத் தெரிந்தால் அவள் என்ன நினைப்பாள்? மனம் வருந்திப் புலம்பு வாளே என்றும் தோன்றி வதைக்கிறது. மனைவியைப் பார்க்கவும் மனம் பதைக்கிறது.

வாடகைக் காரில் போகும்போது தன்னைப் பிறர் பார்க்கா திருக்கவேண்டுமே என்று தலையில் முக்காடிட்டு மூடிக்கொண்டு பனிக்காக மூடியதாய் சொல்லிவிட்டு, யோசனையுடன் உட்கார்ந்து செல்கிறுர்.

வண்டியும் ஒரு மாடி வீட்டு வாசலில் வந்து நின்றது. சிதம் பரநாதன் இறங்கியவுடனே அவ் வீட்டு வாசலில் தொங்கும் போர்டு அவர் கண்ணில் பட்டதும் அதைக் கவனித்தார். ஸ்ரீமதி. டாக்டர். விமலாதேவி, என்று போட்டிருந்ததைக் கவனித்ததும் சற்று அசைவற்று நின்றுர். அவள் தன் மகனுடைய ஆஸ்பத்திரி யில் வேலைக்கிருந்த ஞாபகம் ஒரு சிறிது வந்தது. தனி போர்டு எப்படி போட்டுக்கொண்டாள்....ஒருகால் தான் வந்திருக்கும் விஷ

யத்தை ஆத்மநாதனுக்குச் சொல்லிவிடப் போகிருளே என்ற பயம் உண்டாகிவிட்டதால் மீண்டும் காரில் ஏறப்போனுர்.

இதைக் கண்ட வைத்தியநாதன் "ஓஹோ! உமது யோசனைக்குக் காரணம் எனக்குத் தெரியும். விமலா உமது மகனின் துர் நடத்தையால் அவன் ஆஸ்பத்திரியை விட்டு விலகி, இப்போது தனி பிராக்டீஸ் நடத்துகிருள் தெரியுமா! உள்ளே வாரும்" என்று கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே போனுன். இந்தப் பிரவேசம் எந்த முடிவைக் காட்டுமோ!

21

சுயநலப் புலியின் சூரக் கொள்ளை

கந்தனைத் தவிர இன்னும் ஒரு வேலைக்காரனும் சிதம்பரநாதனின் கிராமத்து வீட்டில் உண்டு. அவன்தான் எப்போதும் கிராமத்துடன் இருப்பவன். எஜமானர் கந்தன்மீது இத்தனை ஆசையாயும், மதிப்பாயும் இருப்பது பற்றி வெகு நாட்களாய் வயிற்றெரிச்சலுடன் இருந்தான். அதற்குக் காரணம் அவன் தானிய வகைகளில் கருத்தாக விராமல் சுயநலம் பாராட்டித் திருடுவதைக் கந்தன் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டதே யாகும். இப்போது கந்தனுக்குக் கிடைத்த தண்டனையில் அவனும் பரிபூர்ண திருப்தியடைந்தான்.

கந்தனுக்கு மனம் கேட்கவில்லை. எஜமானன், தன்னைப் பலர் முன்பு இழிவுபடுத்திப் பேசி வேலையைவிட்டு நீக்கியபோதிலும் அவரது குடியை எப்படி யெப்படி கெடுத்துவிடுவார்களோ என்ற பயமும் கவலையும் குடிகொண்ட மனத்துடன் கண்ணீர் பெருக வீட்டுக்குச் சென்ருன்.

சிதம்பரநாதன் எங்கிருந்தாலும் அவர் தோட்டத்து குடிசையிலேயே அவன் குடும்பத்துடன் இருக்கும் வழக்கமாதலால் அவருடைய தோட்டத்துக் குடிசைக்கே போனுன். கந்தனின் மனைவி

பச்சையம்மாள் தூரவிருந்தபடியே இந்த விஷயங்களை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்ததால் அவளுக்கும் ஆத்திரம் ஒருபுறமும், கந்தனைப்போல் எஜமானனின் குடும்பத்தின்மீது அனுதாபம் ஒருபுறமும் பாதிக்க கந்தனின் வரவையே எதிர்பார்த்திருந்தாள்.

அவன் வந்ததும், பச்சையும் கண்ணீர் பெருக "அல்லாந் தெரியும். என் சொம்மா அழுவுரே! இத்தினி நாளா இருந்த நெலமே அல்லாம் தெரியாமே எஜமான் இப்படி செஞ்சப்றம் அவரு குடிசெலெ மாத்ரம் இருக்கலாமா! இத்தெ உட்டுட்டுப்போண்ணு பொன்னங்கூட அதிகாரம் செய்வான். நாம்பளும் ராவோடே ராவா போயிட்லாம் வாயேன்." என்றாள்.

கந்த :—பச்சே! அய்யா சொல்லிப்புட்டத்தினாலே எனக்குக் கொறஞ்சுபோவலே. அந்த குண்டுணிக்காரப் பாவிங்க சின்ன எஜமானே என்னு செஞ்சுபுடுவாங்களோன்னு வவுத்துலே கலக்குது. கால்மேலேயும், மார்மேலேயும், தோள்மேலேயும் போட்டு நான் வளத்த ராஜாவாச்சே அவரு. பச்சே!....அதோ பாத்தியா! அந்தப் பாவி வைத்தியநாதன் பொஞ்சாதியோடே ரகஸ்யம் பேசச்சேயே எனக்குத் தெரியும். பாயும் படுக்கையும் எஜமான் ஊட்டுக்கு வருது பாரேன். இங்கேயே குடியாப் பூடுவாங்களோ? அதோ அல்லாரும் படுத்துக்க வராங்களே! உம். குடியாப்பூட்டா இன்னு! பாழாப்பூட்டாதான் என்ன? எஜமானுக்கு ஒருவித ஆபத்தும் இல்லாதிருக்கணுமேன்னுத்தான் கவலையாக்கீது. இப்ப நாம்பளும் இதெ உட்டுட்டு பூட்டாக்கா!

பச் :—ஆமாம். பூட்டாக்கா இன்னு! அவங்களா வந்து, போன்னு தொறத்தினப்பறம் போவணுமா! எனக்கு இன்னு தோன்றதுண்ணு! நாம்பளும் ஊருக்குப் போயி, நடந்த சமாச்சாரம் அல்லாத்தையும் எஜமானியம்மாகிட்டேயும், சின்ன ராசா கிட்டவும் சொல்லிப்புடலாம். இந்தப் பாவிங்க பண்ற கொடுமே லேந்து தப்ப அவங்களுச்சும் வழி பண்ணட்டுமே.

கந்த :—ஆமாண்டீ! நீ சொல்றது ரொம்ப நல்ல ரோசனைதாண்டீ! இப்ப வண்டி தப்பிப்பூடுமே. இனுமே வெடியங்காட்டியுந்தானே போகணும்.

பச்சை :—தப்பாதுண்ணு. ஆண்டவன் மேலே பாரத்தெ போட்டு ஓடலாம் வாயேன். வண்டி கிடச்சுடும். சாமானுங்களே எடுத்துக் கட்டி வெக்கலாம். வா—என்று கூறிவிட்டு மினுக்கு மினுக்கு என்று எரியும் காடா விளக்கின் வெளிச்சத்தில் சாமான் களைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

பங்களாவைப் போன்று விசாலமான கட்டிடமாக சிதம்பர நாதன் வீடு அமைந்துள்ளதே யன்றி பங்களாவல்ல. அதன் ஒரு பக்கத்து வராண்டாவில் குசுகுசுவென்று பேசுங் குரல் கேட்டது. அதை கந்தனும் பச்சையும் உற்றுக் கவனிப்பதற்குள் இரண்டு ஆட் களின் முதுகுமீது தூக்கமுடியாமல் பாரமான மூட்டைகள் வெளியே செல்வதைக் கண்டதும் இவர்களின் வயிறெரிந்தது. "ஐயோ! சூரக்கொள்ளை போவுதே. பச்சே!....அது நல்ல ஒஸ்தி யான சிறுமணி யரிசி. கைக்குத்தலா குத்தி சின்ன எஜமானருக் காக வச்சிருக்கற மூட்டெதான் சந்தேவமே இல்லை. இரு! இரு! நான் எதிரே போய் தடுத்து சண்டெபோட்டு வரேன்."—

என்று கூறிக்கொண்டே கந்தன் பத்தடி வைத்தான். ஓர் இமை கொட்டும் நேரத்திற்குள் கந்தனோ பச்சையோ எதிர்பார்க் காத விதம் ஓர் பெரிய தடிக்கம்பு கந்தனின் முதுகு எலும்பை முறித்துவிடும்போல் பட்டார் என்று விழுந்தது. கந்தன் ஹா வென்று அலறியவாறு கீழே விழுந்தான். அதே சமயம் இன்னும் இரண்டு மூட்டைகளும், புதிய எள் ஆடிய இரண்டு எண் ணெய் டின்களும் போவதைப் பச்சை பார்த்தாள்.

பார்த்து என்ன செய்வது? சொத்து வீட்டைவிட்டுப் போய் விட்டது. இனி சண்டைக்குப் போனல் மண்டைதான் உடையும். ஒருவேளை உயிருக்கே உலைவைத்தாலும் வைத்துவிடுவார்கள் என்ற பயத்தினுல் பச்சை பேசாமலிருந்தவாறு கடவுளைப் பிரார்த்தனை செய்தாள்.

கந்தனை மெல்லத்தூக்கிப் பிடித்துக்கொண்டு பார்த்தாள். எங் கும் மனிதர்களே தென்படவில்லை. அன்பின் வேகம் ஆனையின் பலம் என்ற பழமொழிப்படிக்கு, பச்சை முக்கியமான சாமான்களை மட்டும் கட்டிக்கொண்டு மிகுதியைப் போட்டுவிட்டு, அந்த மூட்

டையை சிம்மாடிட்டுத் தலைமீது சுமந்தபடியே, கந்தனைத் தூக்கிப் பிடித்து மெல்ல நடத்தியவாறு ரயிலடிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். பச்சை ஓட்டமாகப் போய் டிக்கட்டுகளைவாங்கி இருவரும் ரயிலேறி விட்டார்கள். இதை தூரவிருந்து பார்க்கும் பழய வேலையாளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

22

காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்

“ஆத்மநாதனின் கை பட்டாலே வியாதி குணமாகிவிடும்; அவன் கையால் ஒரு டோஸ் மருந்து கொடுத்தால் அதுவே தேவஸஞ்ஜீவி போன்றது” என்று பரிபூர்ணமான இதயத்துடன் நம்பியிருக்கும் குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. அம்மாதிரி குடும்பங்களில் நாம் முன்பு கூறிய ஜெமீந்தாரிணியம்மாளின் குடும்பமும் ஒன்றாகும்.

ஆத்மநாதன் தனக்குள்ள பல வேலைகளுக் கிடையில் தட்டாமல், மிக்க அக்கரையுடன் சென்று ச்யாமளாவை அழைத்து வந்து வைத்தியம் செய்வதைக் காண, ஜமீந்தாரிணியின் உள்ளம் பூரித்தது. அன்று ஆத்மநாதன் பலதடவைகள் சென்று பார்த்தும், நர்ஸ்ஸை வைத்து கவனிக்கச் செய்துமாக இருந்தான்.

வைத்தியநாதன் விமலாவின் வீட்டிற்கு சிதம்பரநாதனை வெகு சுதந்தரத்துடனும், இறுமாப்புடனும் அழைத்துச் சென்று ஒரு அறையில் அவருடைய பெட்டி படுக்கை முதலியவைகளைத் தானே இறக்கி வைத்துவிட்டு, அவரை காலைக்கடன்களை முடிக்கச் செய்து, பின்னர் ஒரு சோபாவில் உட்காரவைத்தார்.

சிதம்பரநாதனுக்கு மட்டும் மனம் இடங்கொள்ளவில்லை. திக்கு திக்கு என்று அடித்துக்கொள்கிறது. தான் ஆத்திரத்தில் வந்துவிட்டாலும், திருட்டுத்தனமாய் வந்ததை மகனோ, மனை

வியோ அறிந்துவிட்டால் என்ன நினைப்பார்கள்? அதிலும் மகனிடம் வேலையாயிருந்தவளின் வீட்டிற்கே வந்திருக்கிறோமே என்கிற அச்சமும், ஒருமாதிரியான கூச்சமும் பாதித்தன.

வைத்தியநாதனே காப்பி, பலகாரம் கொண்டுவந்தான். ஆனால் சிதம்பரநாதன் பூஜை புனஷ்காரம், ஜபம் தபம் எல்லாம் அனுஷ்டானப்படிக்குக் குறையாமல் செய்த பிறகுதான் காலை ஆகாரம் செய்யும் வழக்கமாகையால் ஒன்றும் வேண்டாமென்று மறுத்துவிட்டார்.

இரவு ஓர் ப்ரஸவ கேஸுக்காகச் சென்ற விமலா இன்னும் திரும்பிவரவில்லை என்று தெரிந்ததும் வைத்தியநாதனுக்குச் சற்று சப்பிட்டுவிட்டது. சிதம்பரநாதன், இங்கு யாராவது தன்னைத் தெரிந்தவர்கள் வந்துவிடப் போகிறார்களே என்ற பயத்தால் ஒன்றும் தோன்றாது உட்கார்ந்திருந்தார்.

அவருடைய பூஜை முதலிய காரியங்கள் முடிந்ததும் போஜனத்திற்குப் பிறகு, ஆஸ்பத்திரிக்குப் போவதாகத் தீர்மானித்தார்கள். இதற்குள் விமலாவும் வந்துவிட்டாள். சிதம்பரநாதனைக் கண்டு அபாரமான வியப்பும், ப்ரமிப்பும் கொண்டாள்.

முந்திரிக்கொட்டை ஆசாமி முந்திக்கொண்டு "என்ன விமலா! வீட்டிற்கு வரத்தகாத கெஸ்டு வந்திருக்கையில் நீ எங்கேயோ போய்விட்டாயே! இவர் யார் என்று தெரியுமோன்னோ!" என்றான்.

விமலா:—ஓ! நன்றாகத் தெரியும். டாக்டரின் தகப்பனாரல்லவா? வஸுந்தராவின் மாமாவல்லவா! இதேது விசேஷம்? என் குடிசைக்கு பெரிய மனது செய்து வந்தது? இது அவர் மகனுக்குத் தெரிந்தாலே கோபிப்பாரே....

வைத்தி:—கோபிப்பதாவது. அவர் வந்திருப்பது யாருக்குமே தெரியாது. முதலில் இங்குதான் வந்து இறங்கி இருக்கிறார். நீ ஏன் அவனிடமிருந்து விலகிவிட்டாய் என்பதை உன்னிடமே நேரில் அறியவும், ஆஸ்பத்திரியில் நடக்கும் அக்ரமங்களை நேரில் பார்க்கவும் ரகஸ்யமாய் வந்திருக்கிறார். தெரியுமா?

விமலா:—ஓ! அப்படியா! உம். நான் வேலையை விட்டு விலகிய வெட்கக்கேட்டை நானே வேறு சொல்லவேண்டுமா!

என்ன இருந்தாலும் அதை இவர் நம்பவே முடியாது. அது கிடக்கட்டும். ஏதோ என் காலவித்தியாஸம் அவருக்கு அம்மாதிரி புத்தி கொடுத்தது. பெத்த மகனிடம் இதெல்லாம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியுமா என்ன? தண்ணியும் தண்ணியும் பிரித்தாலும் வேருகுமோ!

வைத்தி:—நீ சொல்வதெல்லாம் சரிதான். இருந்தாலும் இவர் இருக்கிற நல்மைக்கும், ஆசார சீலத்திற்கும் நேர் விரோதமாய் இம்மாதிரி மகன் இருந்தால் அது வருத்தந்தானே. சரி!.... எப்போது ஆத்மநாதன் ஆஸ்பத்திரியிலிருப்பான்?

விமலா:—ஏன்? பகல் வேளையில் இப்போதெல்லாம் அதிகமாக ஆஸ்பத்திரியை விட்டே போவதில்லை என்று கேள்வி—என்று கூறிவிட்டு உள்ளே போனாள்.

கதவைத் தாளிட்டுவிட்டு டெலிபோனிடம் ஓடி நம்பரைச் சுற்றி "ஹல்லோ! ஹல்லோ!....ஆரோக்கியசாமியா! எதிர்பாராத சந்தோஷச் செய்தி....என்னவா! சொல்வதற்குள் அவசரமா!.... ஆத்மநாதனின் தகப்பனர் ரகஸ்யமாய் என் வீட்டிற்கு வந்திருக்கிருர்....நிஜமாகத்தான்....நானு பொய் சொல்வேன்....ஆஸ்பத்திரிக்கு ரகஸ்யமாகவே போய் பார்க்கப்போகிருராம்....இன்றுதான்....நீ எழுதிய பலவிதமான கடிதங்களின் பலந்தான் இது என்று தெரிகிறது....அங்கும் சரியாக கவனித்துக்கொள்ளு....சரிதான்....சாயங்காலம் நான் வருகிறேன்....குட் மார்னிங்கு" என்று பேசி முடித்துவிட்டாள்.

பகல் ஒரு மணிக்கு வாடகைக் காரில் சிதம்பரநாதனை அழைத்துக்கொண்டு வைத்தியநாதன் கிளம்பிவிட்டான். ஆத்மநாதன் ஜமீந்தாரிணியின் வீட்டிற்குப் போய்விட்டு அப்போதுதான் ஆஸ்பத்திரிக்கு வந்தான். இரண்டு மூன்று நாட்களாய் ஏற்பட்ட அலைச்சலாலும், ஏற்கெனவே மனத்திலுள்ள ஏக்கத்திலுைம், ஆத்மநாதன் களைத்துப்போய் அப்பாடா! என்று சோபாவில் சாய்ந்தான்.

வெய்யிலின் வெப்பம் ஒருபுறம், அடிக்கடி வெளியிலுள்ள நோயாளிகளைப்பற்றி டெலிபோன் வந்து பதில் சொல்லும் உபத்திரவம் ஒருபுறம், இவைகளை எல்லாம் ஆத்மநாதன் எத்தனைதான்

பொறுமையுடன் சகித்தாலும், அவனையும் மீறி அன்று களைப்பும் ஆயாஸமும் மேலிட்டுவிட்டன.

இம்மாதிரியான சமயங்களில் தன் சிரமத்திற்குப் பரிகாரமாயும், உத்ஸாகமாய் இருக்கும்பொருட்டும் கிராமபோன் ரிகார்டுகளை போடச் செய்து கேட்பான். அன்றும் அப்படியே வேலைக்காரனைத் தன் பிரைவேட்டு அறையில் போடச் செய்து கேட்டு ஆனந்தமாயிருக்கும் சமயம் 'உள்ளே வரலாமா!' என்ற குரல் கேட்டது. உடனே உள்ளே வரச்செய்து, "ஓ! நீங்களா! என்ன சமாச்சாரம்?....உட்காருங்கள்" என்றான்.

வந்தவர்:—இப்போது சுமார் 7, 8 பெண்கள் வெகு அருமையாய்ப் பாடுகிறார்கள். அவர்களைத் தங்களிடம் அறிமுகப்படுத்த அழைத்து வந்தேன். அதோ தோட்டத்திலிருக்கிறார்கள். உத்திரவானால் அழைத்து வருகிறேன். சொல்ப தொகை கொடுத்தாலும் போதும்.

ஆத்ம:—சரி! அழைத்து வாரும்—என்றான்.

உடனே அந்த தாகன் ஒரு குதி குதித்துக்கொண்டு ஓடி அடுத்த நிமிடமே அந்த பெண்களை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். சர்வ சாதாரணமான வழைப் பெண்களாயினும் சுமாரான லக்ஷணத்துடன் பார்ப்பதற்கு வெறுப்பின்றி சுத்தமாக இருந்தார்கள்.

எல்லோரும் தரையில் விரித்துள்ள ரத்தினக் கம்பளத்தில் உட்கார்ந்து ஒவ்வொருவராய்ப் பாட ஆரம்பித்தார்கள். அதே சமயத்தில்தான் சிதம்பரநாதனை வைத்தியநாதன் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான். தோட்டத்திலேயே சிறிய கட்டிடமாகக் கட்டியும், குடிசையாகப் போட்டும் பல ஏழைகளுக்கு ஆத்மநாதன் தயாளத்துடன் உதவி இருக்கும் நல்ல நோக்கத்தை நஞ்சாக மாற்றி "இதோ பார்த்தீரா! இத்தனையிலும் பெண்கள் கூட்டந்தான். ஒவ்வொருவரும் எத்தனை சிறிய வயதும், யௌவன வாலிப சுந்தரியுமாக இருக்கிறார்கள் பாருங்கள். இப்படிக் கெட்டு அலையும் பேமானிக்குக் கல்யாணமென்ன? பெற்றோர்களிடத்தில் மரியாதைதான் எதற்கு? சொல்லும்.

அதோ! அதோ! சற்று உற்றுக் கேளும். அந்த ஜன்னலருகில் யாரோ பேசுவது கேட்கிறது பாரும்" என்றான். அவர் காதைக் கொடுத்து வெகு கவனமாகக் கேட்கலானார்.

உள்ளிருந்து வரும் வார்த்தைகளாவன :—"என்ன கமலா! ஒருமாதிரி இருக்கிறயே. விமலாவைப்போல் நீயும் வேலையை விட்டுப் போய்விடுவாயா என்ன? பயமாயிருக்கிறதே? ஏன்? புதிதாக என்ன நடந்தது சொல்லேன்." என்று ஒருத்தி கேட்டாள்.

கமலா:—(பெரிதாக அழுது விக்கி மூச்சுவிட்டபடியே) புதிதாக ஒன்றும், பழயதாக ரெண்டும் என்ன இருக்கிறது. முன்பெல்லாம் அந்தப் பாவி டாக்டர் குடிப்பது கொஞ்சமாயிருந்தது. இப்போது தலைக்குமேல் போய்விட்டது. கண்ணு மண்ணு தெரியாமல் குடித்துவிட்டு, பிணம்போல் நாற்றம் நாறிக்கொண்டே என் அறைக்கு வந்துவிட்டான்.

இன்னொ :—ஐயையோ! நீ என்ன செய்தாய்? சொல்லும் போதே பயமாயிருக்கிறதே!

கமலா :—செய்வதென்ன இருக்கிறது? தாறுமாறுமாய் உளறினான். தற்கொலை செய்துகொள்ளலாமா வென்றும் எனக்குத் தோன்றிவிட்டது. அவன் சுய உணர்வில்லாததால் நன்றாக தடார் புடார் என்று என் கை சலிக்க அடித்து, வெளியில் தள்ளிவிட்டுக் கதவைப் போட்டுக்கொண்டேன்.

வேறொருத்தி :—ஆமாம். இதெல்லாம் எப்போது நடந்தது?

கமலா :—விடியற்காலம் நடந்தது வெட்கக்கேடு. யாரிடம் சொல்வது? விமலாவை இப்படி எல்லாம் இம்சித்ததால்தான் வேலையை விட்டே போய்விட்டாள். இனி எல்லோருடைய கதியும் அவ்வளவுதான். இனிமேல் நான் இதை சகிக்கவே மாட்டேன். பல பேரறியச்செய்து அவனை அவமானப்படுத்தி விட்டு மறுகாரியம் பார்ப்பதென்று கங்கணமும் கட்டிக்கொண்டு விட்டேன்.

ராஜ :—என்ன அன்யாயமம்மா இது! பிழைக்கவந்த இடத்தில் யாராவது மானமிழந்து வாழ்வார்களா? எத்தனையோ ஏழைச் சிறுமிகளை பாட்டுக்காகவென்றும், ஆராய்ச்சிக்காக வென்றும்

பொய் சொல்லிக் கொண்டே மந்தை மந்தையாகச் சேர்த்துக் குட்டிச் சுவரடிப்பது பெரிய வெட்கக்கேடாயிருக்கிறது.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சிதம்பரநாதனுக்கு அதற்கு மேல் அங்கு நிற்கமுடியவில்லை. "ஓய், வைத்தியநாதரே! இரும். நான் இனி பொறுக்கமாட்டேன். நேரே அவன் முன்புபோய் என் வயிற்றெரிச்சல் தீர அவமானப்படுத்திவிட்டு வருகிறேன்" என்று மெல்லக் கூறிக்கொண்டே ஓடக் கிளம்பினர்.

"இரும். இரும். இப்படி பொறுமையில்லாது போய்விட்டால் காரியம் கெட்டல்லவோ போகும்? ஆத்மநாதனின் நாடகத்தில் இது இரண்டாவது காட்சி. இன்னுமுள்ள காட்சிகளையும் பார்த்துவிட்டுப் பிறகு நீர் எதுவேண்டுமாயினும் செய்யும்" என்று சமாதானம் செய்து, அவனது தனியறையின் பக்கம் அழைத்துச் சென்றான்.

சங்கீத நாதமும், தாளத்தின் ஒலியும், "ஆகா! பேஷ்!" என்று இடையிடையே ஆர்ப்பரிக்கும் ஆனந்தக் கூச்சலுங் கேட்ட சிதம்பரநாதனின் கண்கள் நெருப்புப் பொறி பறந்தன. ஜன்னலால் திரையை விலக்கி எட்டிப் பார்த்தார்.

இதுவரையில் பொறுமையாயிருந்ததெல்லாம் பறந்துபோய் கோபப் புசல் இருதயத்திலிருந்து கிளம்பிவிட்டது. உடனே உள்ளே சென்று அத்தனை பெயர்களின் முன்பும் மகனை அடித்து அவமானப்படுத்திவிடலாமா என்று நினைத்தார்.

அதே சமயம் ஆத்மநாதன் "பேஷ்....பலேபேஷ்! எங்கே, நீ இன்னொரு பாட்டுப் பாடு. ராகம் பாடத் தெரிந்தால் பாடு" என்று சகஜமான சுபாவத்துடன் கூறினன். சிதம்பரநாதனுக்கு அதற்கு மேல் தாங்க முடியவில்லை.

"என்ன விருப்பினும், அவன் செய்வது முற்றும், என் மூச்சு விடுவது முதல் சகலமும், குற்றமாகவும் விபரீதமாகவும் பெற்ற பிதாவிற்குத் தோன்றி த்வேஷம் வளர்ந்துவிட்டதெனினும், தலைக்கு மேல் வளர்ந்துவிட்ட மகனைப் பலர் முன்பு அடித்து இம்சித்து ஆத்திரத்தில் அவமானப்படுத்தி விட்டால் பிறகு பொதுஜனங்கள் மடத்தன மென்று உன்னையே திருப்பிக்கொள்வார்கள். அவன் வயதில் சிறிய மூர்த்தியாயினும் கீர்த்தி பெரிது. பத்திரம்!" என்று

ஏதோ ஒன்று சிதம்பரநாதனின் இதயத்தில் கூறியதுபோல் பளிச் சென்று தோன்றியது.

எனினும், அவரால் அங்கு நிற்கவே முடியாதபடி வதை செய்வதால் விருவிரு என்று அந்த அறைப்பக்கம் கதவின் முன்பு வந்து கண்கள் சிவக்க முறைத்துப் பார்த்தார். பலமாக இரண்டு முறை கனைத்துவிட்டு, பல்லை நெற நெறவென்று கடித்தவாறு சடக்கென்று இமை கொட்டும் நேரத்திற்குள் திரும்பினர்.

இனிமையான சங்கீதத்தினுல் ஆனந்தமுற்று உட்கார்ந்திருந்த ஆத்மநாதனுக்கு திடீரென்று தன் பிதா அங்கு வந்து கண்கள் சிவக்க நின்றதைக் கண்டதும், முதலில் அவன் தன் கண்களையே நம்பவில்லை. தான் சொப்பனத்தில் கூட நினைக்காதபடி தன் பிதா இங்கு எதற்காக வந்து இப்படிக் கடுமையாய்ப் பார்க்கிருர் என்றும் அவனுக்குப் புரியவில்லை.

உண்மையில் அவனுக்குப் பிதாவினிடம் பயபக்தி, மரியாதை, விச்வாசம் எல்லாம் நிறைந்திருந்தன. துவேஷத்தினுல் அன்று கோபித்துச் சென்றவர் இன்றுவரை ஒரு கடிதங்கூட இல்லாது இம்மாதிரி திடீரென்று வந்ததானது அவனுக்கு அதிகமான நடுக்கத்தையே உண்டாக்கிவிட்டது. அதோடு "இங்குள்ள சந்தர்ப்பத்தைக் கண்டு ஏற்கெனவே சந்தேகப் பிராணியாயுள்ளவர் இன்னும் ஊர்ஜிதம் செய்துவிடுவாரே! ஈசா!" என்று தனக்குள் ஒரு இமை கொட்டும் நேரத்தில் மின்னல்போல் தோன்றியது.

உண்மையில் காலும், கையும் நடுக்கலெடுத்துக் கொண்டன. இதயமோ படபடவென்று வேகமாக அடித்துக்கொள்கிறது. சடக்கென்று எழுந்து "அப்பா! எப்போ வந்தீர்கள்?....வாருங்கள். வாருங்கள்" என்று கூப்பிட்டவாறு ஓடி வருவதற்குள் அவர் முன்பு தெரிவித்ததுபோல், கர்ஜனை செய்துவிட்டுத் திரும்பியும் பாராமல் ஓட்டமாக ஓடிச் சென்ருர். கூட வைத்தியநாதனும் ஒய்யார நடையுடன் ஆத்மநாதனை விரைக்கப் பார்த்துக்கொண்டே சென்ருன்.

ஆத்மநாதன் "அப்பா! அப்பா! போகாதீர்கள். நில்லுங்கள். நில்லுங்கள்" என்று கூவிக்கொண்டே பின்தொடர்ந்து ஓட்டமாக வந்து எதிர் மடக்கி கையைப் பிடித்துக்கொண்டான்.

சீச்சி! அனுசாரப் பிண்டமே! என்னைத் தொடாதே. என் முகத்தில் விழிக்காதே. இனி நீ எனக்கு மகனுமில்லை; நான் உன் அப்பனுமில்லை....போதும் உன் லீலைகள்" என்று தாறுமாருகக் கூறிக்கொண்டே ஓட்டமாய்ப் போய் காரில் ஏறிக்கொண்டார்.

மண்டைமீது இடி இடித்ததுபோல் தாக்கப்பட்டவனுய் ஆத்ம நாதன், அப்படியே கம்பத்தோடு கம்பமாய் சாய்ந்தான். காரும் வேகமாக, சிதம்பரநாதனுக்குமேலாகக் கோபப்பட்டுக் கனைப்பது போன்ற பெருத்த இரைச்சலுடன் கிளம்பியது.

23

அதிர்ச்சி அமளி—காஞஸ்திரப் பிரயோகம்

இரவோடிரவாய் தட்டித் திணறி ரயிலில் ஏறிய பச்சையும் கந்தனும் காலையில் இறங்கி, தம் உறவினர் இருக்கும் ஜாகைக்கே சென்ருர்கள். கந்தனின் முதுகில் விழுந்த பலமான அடியின் வேகத்தால் இலும்பே முறிந்துவிட்டது போன்ற வேதனை உண்டாகிவிட்டதால், உறவினர் வீட்டிற்குச் சென்றதும் புளியும் உப்பும் அறைத்துக் கொதிக்கவைத்து முதுகு முழுதும் பத்து போட்டுக்கொண்டு கஞ்சியும் குடித்தான்.

அந்த அடியின் வேகம் தாங்காது ஜுரமும் கண்டுவிட்டதால் மெல்ல போர்த்தி மூடி முக்காடிட்டுக்கொண்டு எஜமானர் வீட்டிற்கு வந்தான். ஏற்கெனவே கவலையால் தினே தினே வாடி வதங்கிப் போய்விட்ட மீனலோசனியம்மாள் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

முன்பு தெரிவிக்காமல் ஒருமாதிரியான முகத்துடன் கந்தனும் அவன் மனைவியும் திடீரென்று அங்கு வந்ததையும், அவர்கள் கண்களில் ஜலம் தளும்புவதையும் பார்த்ததும் மீனலோசனியம்மாளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன் புருஷனுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி சப்த நாடியும் அடங்கியவளாய், வாய்க்

குளற "என்ன பச்சே!....கந்தா!....என்ன சமாச்சாரம்?" என்று கேட்டாள்.

பச்சை :—அம்மா! ஐயாவுக்கு ஒடம்பு ஒண்ணுமில்லீங்க. பயப்படாதீங்க. சின்ன ராசா சவுக்கியமாக்கிருரா?

மீன :—இருக்காருப்பா! என்ன சமாச்சாரம் சொல்லு. உனக்கென்ன உடம்பு?

கந்த :—அம்மணீ! தரும லக்ஷ்மீ! சமாச்சாரம் எப்படி எப்படியோ விபரீதமா போவுதுங்க. வயிற்றெரிச்சக்காரப் பாடெங்க சும்மா இல்லாமே நம்ப குடியெ கெடுக்க வந்துட்டாங்கயம்மா! (நடந்த விஷயங்கள் சகலத்தையும் கூறிக் கண்ணீர்விட்டு) அம்மா! ஐயா வந்திருக்கிற வேகத்தைப் பாத்தா, சின்னய்யாவுக்கு இன்னு ஆபத்து வந்துடுமோன்னு பயம் அடிச்சிகிதுங்க.

மின்சாரம் தாக்கியதுபோல் துள்ளியவளாய் மீனலோசனியம்மாள் "என்ன! என்ன!! ஐயா இந்த ஊருக்கு நேத்து ராத்திரி வந்திருக்கிருரா! உன்னையா அடித்துத் துரத்திவிட்டார். வீட்டுப் பொருள்களா சூறைக் கொள்ளை போய்விட்டன....ஐயையோ! வந்தவர் நேரில் வீட்டிற்கு வராமல் எங்கே போயிருப்பார்? கந்தா! அவர் எங்கே இறங்கப்போகிருரோ அந்த இடம் உனக்குத் தெரியுமா?

கந்த :—ஐயோ! தெரியாதுங்களே! இங்கே ஐயா வந்த வேகத்துலே இன்ன அமக்களம் நடந்துபூடுமோன்னு நாங்க ஓடியாந்தோம் தாயே! இப்ப சின்ன ராசாவுக்கு இந்த சமாச்சாரத்தெ யாரு சொல்றது, எப்படி சொல்றது?

மீன :—ஐயோ! அவன் ஊரிலேயே இல்லையேப்பா! என்னிக்கு வருவானே! தெரியாதே. டெலிபோன் செய்து பார்க்கிறேன்—என்று கூறிக்கொண்டே டெலிபோன் செய்தாள். "டாக்டர் ஊரிலிருந்து இன்று வந்துவிட்டார்; ஆனல் இங்கில்லை. எங்கே போயிருக்கிருர் என்று தெரியாது" என்று தகவல் கிடைத்தது.

மீனலோசனியம்மாள் அனுவச்யமாய் ஆஸ்பத்திரிக்குப் போவதே வழக்கமில்லையெனினும் இந்த கொடிய செய்தியை

அன்று எப்படியாவது மகனிடம் அறிவித்து அவன் பிதா வந்திருக்குமிடத்தைத் தேடிச் சென்று அழைத்து வரவேண்டுமே என்று கவலையால் துடிக்கிருள்.

வண்டியோ கிடையாது. அவள் எவ்விதம் ஆஸ்பத்திரிக்குச் செல்லமுடியும். கந்தா! இப்ப என்ன செய்வதப்பா! பையனுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே. நான் பஸ்ஸிலோ நடந்தோ சென்ருல் பிறர் பரிகஸிப்பார்கள். இதோ பாரு. ஒன்று செய்கிறயா! சில்லறை தருகிறேன். நீங்களிருவரும் ஆஸ்பத்திரிக்குப் போய் இந்த தகவலே மகனிடம் தெரிவித்து அவனை உஷார் செய்து இங்கே அழைத்துக்கொண்டு வந்து விடுகிறீர்களா? சீக்கிரம். சீக்கிரம் போங்கள்" என்று கூறி, ஒத்தை ரூபாயைக் கையில் கொடுத்தாள்.

எஜமானியம்மாளின் தவிப்பைப் பார்க்க கந்தனுக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது. உடனே பச்சையுடன் கிளம்பி பஸ்ஸேறி ஆஸ்பத்திரிக்கு வேகமாகச் சென்ருன். ஆஸ்பத்திரிக்குக் கொஞ்சம் தூரத்தில் பஸ் நின்றதும் இருவரும் இறங்கும்பொழுது காரில் சிதம்பரம், கோபாக்கினி ஜ்வலிக்க இறுமாப்புடன் வைத்தியோடு செல்வதை இந்த தம்பதிகள் பார்த்துவிட்டார்கள்.

"ஐயையோ! அதோ! காருலே போராங்களே! ஆச்சிபத்திரிக்குப் போயிட்டுத்தான் போருங்கபேலெக்கிதே. இன்ன செய்றது? சின்ன ராஜா இருந்தாரோ! இவங்க என்ன செஞ்சாங்களோ! ஒண்ணும் தெரியல்லேயே" என்று பயந்துபோய், மனம் பதைத்தவாறு ஓட்டமாக ஆஸ்பத்திரியை அடைந்தார்கள்.

ஆத்மநாதன் மன அதிர்ச்சியினுல் தாக்கப்பட்டுக் கம்பத்தோடு சாய்ந்துவிட்டதைக் கண்ட அருகிலிருந்த வார்டு காவலாளிக்கு ஒன்றுமே தோன்ருது, பயந்துபோய் "சார்! சார்!" என்று கத்தினன். இதற்குள் இன்னும் இரண்டு நர்ஸுகள், வேலைக்காரர்கள் வந்து கூடிவிட்டார்கள்.

எத்தனைதான் இரும்பைவிட உறுதியான இதயத்தை உடைய தீரனுகவிருப்பினும் தான் எதிர்பாராதவிதமான அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டால் அது ஆளையே ஒரு ஆட்டு ஆட்டிவிடுமல்லவா! அதிலும்

இத்தனை நாளாக கடுங் கோபத்திலிருந்த தகப்பனார் இம்மாதிரி கூறிவிட்டுச் சென்றதானது அவன் இதயத்தைப் பிளந்துவிட்டது. ஏற்கெனவே இரண்டு மூன்று நாட்களாய் இராப்பகல் தூக்கமில்லாது அலைந்து திரிந்ததாலும், தன் இதயத்தில் அந்தரங்கமாய் வேலை செய்யும் சொந்த விசனத்தினாலும் களைத்துப் போயிருக்கும் சமயம், தன்னருமை பிதா தன் ஆஸ்பத்திரியில், பல பேர்களின் முன்னிலையில் "நீ என் மகனல்ல; நான் உன் அப்பனல்ல" வென்று கூறியதை எப்படித்தான் அந்த சுகுமாரன் சகிப்பான்?

"இவைகளெல்லாம் எம்மட்டு விபத்தில் கொண்டுவிடுமோ! இது தாயாருக்குத் தெரிந்தால் அவர்கள் என்ன நினைப்பார்களோ?" என்ற பலவித உணர்ச்சிகள் வந்து சுற்றிக்கொண்டு அவன் மூளையையே குழப்பிவிட்டதால் உணர்வற்றுப் போய்விட்டான் என்றே கூறவேண்டும்.

ஆஸ்பத்திரியின் அதிகாரியும், பிரதம பெரிய டாக்டருமானவரே இப்படி விழுந்துவிட்டால் ஆஸ்பத்திரியின் அமளியைக் கேட்கவேண்டுமா! பல குட்டி டாக்டர்கள் ஒரு வினாடியில் கூடிவிட்டார்கள். ஆத்மநாதனைத் தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தி ஒரு டாக்டர் குழாய் வைத்துப் பார்க்கிறான். ஒருவன் தர்மாமீட்டரை வைக்கிறான். ஒருவன் ப்ளட் ப்ரெஷர் கருவியை வைத்துப் பார்க்கிறான். ஒருவன் ஊசி குத்தி மருந்து ஏற்றுகிறான்.

இம்மாதிரி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் தம்தம் பாண்டித்யத்தைக் காட்டத் தொடங்கிவிட்டார்கள். ஒரே அமளியாக விருக்கிறது. "திடீரென்று டாக்டருக்கு என்ன வந்துவிட்டதோ தெரியவில்லையே!" என்று மற்றவர்களுக்கு கதிகலங்கிவிட்டது.

பாட்டுத் தரகன் வந்த ஜோடு தெரியாது போய்விட்டான். கமலாவும் ராஜமும் இதையோர் வேடிக்கையைப்போல் பார்த்துக் கொண்டு, உள்ளூற மகிழ்ந்தவாறு வெளி வேஷத்திற்குத் தாமும் ஏதோ செய்வதுபோல் அபிநயம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இம்மாதிரி தடபுடல் படும் சமயம்தான் பச்சையும், கந்தனும் ஓட்டமாக ஓடி வந்தார்கள். கந்தன் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு

வந்திருக்கும் பழக்க முடையவனுதலால் அவன் எத்தகைய காவ லுக்கும் பயப்படாமல் தடதடவென்று ஆத்மநாதன் படுத்திருக்கும் அவன் தனி யறைக்குச் சென்றான்.

அங்கு இத்தனை பேர்கள் சூழ்ந்துகொண்டு குசமச வென்று பேசுவதையும், ஓடி நடமாடுவதையும் பார்த்து கந்தனுக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது. "என்ன சமாசாரம்....எஜமானுக்கு என்ன ஒடம்புங்க?" என்று கேட்டவாறு, கும்பலைத் தள்ளிக்கொண்டு கட்டிலின் அருகில் ஓடி வந்தான். ஆத்மநாதன் மயக்கமாகப் படுத்திருப்பதைக் கண்டதும் பேரிடியே தலைமீது விழுந்து விட்ட வன்போல் கந்தன் நடுங்கிப்போய் "சின்ன எஜமான்! சின்ன ராசா! எங்க ராசாவுக்கு இன்னு உடம்பு?" என்று கத்தியவாறு ஆத்மநாதனைத் தடவினான். முகத்தோடு முகம் பதித்துக்கொண்டு கண்ணீரை ஆருய்ப் பெருக்கினுன்.

கந்தன் அன்பு மிகுதியால் அலறுவதை யறிந்தும் அந்த குட்டி டாக்டர்கள் தம் தடபுடல் அதிகாரத்தை விடாமல் "கந்தா! இதென்ன இப்படி பட்டிக்காட்டான்போல் பேத்துகிருயே! ஐயா மயக்கமாக இருக்கையில் இப்படிக் கத்தினுல் அது ஆகாதப்பா! சற்று சும்மா இரு. தெளிந்துவிடும். இரண்டு மூன்று நாட்களாய் அவருக்கு அலைச்சல் அதிகம். அதனுல் இப்படி இருக்கிறது; பயப் படாதே" என்று கந்தனை சற்று விலக்கினுர்கள்.

கந் :—சாமீ! அம்மாளுக்கு டெலிபோன் பண்ணுங்களேன். பெரிய டாக்டர் யாரையாச்சும் கூப்பிடுங்களேன்.

குட்டி டாக்டர் :—அம்மாளுக்கு டெலிபோன் செய்தால் பயந்துபோய் விடுவார்கள். ஒன்றும் பயமில்லை. இப்போதே தெளிந்துவிடும். பெரிய டாக்டர்களுக்கு டெலிபோன் செய்திருக் கிறோம். இதோ வந்து விடுவார்கள்—என்று கூறும்போதே கவர்ன்மெண்டாஸ்பத்திரியின் பெரிய டாக்டர்—வெள்ளைக்காரர்—டாக் டீக்கென்று வந்துவிட்டார். அடுத்த நிமிடமே இன்னும் இரண்டு பெரிய டாக்டர்கள் மலையாளி யொருத்தரும், சாயபு ஒரு வருமாக வந்துவிட்டார்கள்.

வார்டுபாயிக்கு ஒரு சந்தேகம். சரியா பன்னிரெண்டு மணிக்கு இம்மாதிரி மயக்கம் திடீரென்று வந்துவிட்டதால் ஏதேனும் காத்து கரப்பு சேஷ்டையாயிருக்குமோ என்கிற யோசனையினுல் தன் கையாளை அனுப்பி, கைதேர்ந்த மந்திரவாதிகளை அழைத்துவரச் செய்தான். அவர்கள் ஒரு கட்டு வேப்பிலையுடன் பிரஸன்னமாகி விட்டார்கள்.

வந்த டாக்டர்கள் பலமாக பரிசோதித்துப் பார்த்ததும் "இது ஏதோ மெண்டல் சம்பந்தமாயிருக்குமென்று தெரிகிறது. ஷாக் கடித்தது போன்ற அதிர்ச்சியினுல் மூர்ச்சையாகிவிட்டார். அதன் மேல் ஜுரமும் வந்திருக்கிறது" என்று ஒரு டாக்டர் சொன்னுர்.

இன்னொருவர், "இல்லை. சார்! ரத்த ஓட்டம் அதிகரித்து விட்டது. அதனுல் இந்த மயக்கம்" என்ருர். மற்றொருவர், "ஓ! அதெல்லாம் இல்லை. இது ஒருவிதமான மூச்சடைப்பு வியாதி என்று தோன்றுகிறது" என்ருர். இப்படி இவர்கள் குழம்பிக் கொண்டிருக்கையில் கமலாவால் விஷயமறிந்த ஆரோக்கியசாமியும் நடுநிலை தவருது பார்க்க வந்தவன்போல் பரபரப்பாக ஓடிவந்தான்.

கமலாவும் அவனும் உளவு தெரிந்தவர்களாதலால் திருட்டுச் சிரிப்பு சிரித்தார்கள். கந்தனுக்கோ ஆரோக்கியசாமியைப் பார்க்கும்போதே பத்தி எரிகிறது. அப்போதும் ஆரோக்கியசாமி தன் கொழுப்பையும் குறும்பையும் விடாது, மற்ற குட்டி டாக்டர்களை நோக்கி, "என் சார்! இத்தனை வயித்தியமும் தடபுடலும் எதற்கு? உங்கள் பெரிய டாக்டரின் ஆராய்ச்சிதான் அபூர்வமாயிருக்கிறதே. நாலு பாடகர்களைக்கொண்டு பாடச் செய்தால், மயக்கம் நீங்கி உடனே எழுந்துவிடமாட்டாரா! ஏன் அப்படிப்பட்ட ஆராய்ச்சி முறையை அவருக்கே உபயோகப்படுத்தவில்லை?" என்று குறும்புத் தனமாகக் கேட்டான்.

இவனுடைய வார்த்தைகள் அந்தக் குட்டி டாக்டர்களில் சிலருக்கு மிகவும் வருத்தத்தையும், கோபத்தையும் உண்டாக்கின. அவர்கள் ஆத்மநாதனிடம் அன்பாயிருப்பவர்களாதலால், அவனது ஆராய்ச்சி அவர்களுக்கும் பிடித்திருந்தது.

மற்ற பெரிய டாக்டர்கள், "இப்போது நிம்மதியாக விட்டு விடுங்கள். அவருடைய பயித்தியக்கார ஆராய்ச்சிகள் இப்போது வேண்டாம். இப்போது ஸைலெண்டாய் இருந்தால்தான் நலம்" என்று கூறினர்கள்.

"ஆரோக்கியசாமியின் திமிரை அடக்கி உண்மையை வெளிப் படுத்துவதற்காகவாவது கடவுள் கிருபை செய்ய வேண்டுமே!" என்று உதவி டாக்டர் வேண்டியபடியே, வெகு இனிமையாய் வீணை வாசிக்கும் ஓர் வித்வாம்ஸனியை அழைத்துவந்து, அந்த பகல் வேளைக்குத் தகுந்தபடி மத்தியமாவதி, ஸ்ரீராகம், சுத்தபங்களா, தர்பார், நாயகி முதலிய அருமையான ராகங்களை வாசிக்கச் செய்தார்.

பெரிய டாக்டர்களுக் கெல்லாம் இது சுத்த மடத்தனமாகத் தோன்றியதோடு, தாம் சொல்வதைக் கேட்காது இம்மாதிரி செய் கிறனே என்று கோபமும் வந்தது. எனினும், இந்த வேடிக்கை யையும் பார்த்துவிட்டுப் போவது என்ற அலக்ஷியத்துடன் எல்லோரும் சந்தடி செய்யாமல் உட்கார்ந்தார்கள்.

சங்கீத ஞானமற்றவர்களுங்கூட வாணியின் கானம்ருதம் போன்ற இந்த வீணுகானத்தைக் கேட்டதும் தம்மை யறியாமல், 'ச்சு ச்சு' என்று ச்சு கொட்ட ஆரம்பித்தார்கள். ஆரோக்கிய சாமியின் தலையும் அவனை யறியாது இரண்டு மூன்று முறை ஆடிவிட்டது.

படுத்திருக்கும் ஆத்மநாதன் தெளிவு பெற்று கண்ணைத் திறக்க வில்லை. ஆனல், மயக்கமுற்று விகாரப்பட்டிருந்த அவன் முகத்தில் பிரம்மானந்தக் களையும், சுகானுபவத்தின் பூரிப்பும் ஜ்வலிக்க ஆரம் பித்தன. கண்ணைத் திறக்காமலேயே வீணையில் வாசிக்கப்படும் இனிய ராகத்தை அவன் வாயிக்குள்ளேயே மெல்ல இழுக்கும் சப்தம் கேட்டது.

இதைக் கவனித்த எல்லோரும் ஆச்சரியத்தினுலும் பிரமிப் பினுலும் அசந்துபோய் ஆத்மநாதனின் முகத்தையே கவனித் தார்கள். இந்திய சங்கிதத்தின் விவரம் தெரியாத வெள்ளைக்கார

டாக்டர்கூட ஆனந்தமடைந்து, வீணுகானத்தைக் கேட்டதோடு, ஆத்மநாதன் ராகமிழுக்கும் ஆச்சரியத்தில் அப்படியே தோய்ந்து விட்டார்.

ஆத்மநாதன் ராகமிழுப்பதைக் கேட்ட உதவி டாக்டர் பாடகரிடம் வந்து மெல்லிய குரலால், "அம்மா! வீணைக்குச் சரியான மெல்லிய குரலில் கஸ்தூரீதிலகம் ச்லோகத்தைப் பாடிக்கொண்டே வாசியுங்கள்" என்றான். அந்த காயகியும் அப்படியே பாடினாள்.

24

திருமணப் பேச்சு—உருகிடும் பேதை

ஆச்ரமத்தில் சுமதி ஆத்மநாதனைப் பார்க்கமுடியாமல் தவித்துப்போய் குப்புறப்படுத்தவள், அவளுடைய மனோவேதனையில் அவளை யறியாது கண்ணீர் பெருக "பெருங் கவலை, பெருந் தூக்கம்" என்ற பழமொழிப்படிக்குத் தூங்கிவிட்டாள்.

ஏற்கெனவே உடம்பு சரியில்லாதிருந்ததால், அந்த பலஹீனத்தினால் தூங்குவதாக எல்லோரும் எண்ணி இருந்தார்கள். சாப்பாட்டு மணி யடித்தபோதுதான் சுமதி திடுக்கிட்டு எழுந்தாள். வெகு நேரம் ஸ்வப்பன உலகத்தில் தான் சஞ்சரித்ததை அப்போதே உணர்ந்தாள். உடனே முகத்தை சுத்தி செய்துகொண்டு, சாப்பாட்டிற்குச் சென்றாள்.

தன் மாறுதலைக் காட்டிக்கொள்ளாமல் எத்தனையோ தந்திரமாக நடந்துகொண்டும் திடீர், திடீரென்று அவளுடைய தேகம் அவளை யறியாது தூக்கிப்போடுவதை அவளால் தடுக்கவே முடியவில்லை. ஆத்மநாதனைப் பார்க்காத அந்த ஒரே ஒரு நாள் அவளுக்கு ஒரு யுகமாகத் தோன்றியதை நினைக்க இன்னும் எத்தனை நாட்கள் அவனைப் பார்க்காமல் தன்னால் இருக்கமுடியும் என்கிற வேதனைக் கடலில் மூழ்கிவிட்டாள்.

தன் ஆத்ம பொக்கிஷத்தைப் பார்த்தாலும் ஆபத்து, பார்க்கா விட்டாலும் சகிக்க முடியாத சங்கட விபத்துக்கு ஆளாகித் தவிக்க நேருகிறது. என்னதான் செய்வது? "ஈசா! என் வாணுளாவது சீக்கிரம் முடியக்கூடாதா!" என்ற எண்ணமே அவளுக்கு வினுடிக்கு வினுடி அதிகரித்துவிட்டது.

ஆச்ரமத்தில் எந்தவிதமாகக் கிடைக்கப்பட்ட அனாதைக் குழந்தைகளையும் காப்பாற்றுவதும், ஆண் குழந்தைகளை மட்டும் 6 அல்லது 7 வயதுவரையில் வளர்த்து, தர்ம பாடசாலைகளுக்கும், தர்ம சங்கங்களுக்கும் அனுப்பிவிடுவதும் வழக்கம்.

அம்மாதிரி அனுப்பிய ஆண் குழந்தைகள் தம்தம் புத்தியினுலும், படிப்பினுலும், தொழிலினுலும், விருத்திக்கு வந்த பிறகு அவர்களாகவே இஷ்டப்பட்டு இந்த ஆச்ரமத்திலுள்ள அனாதைப் பெண்களில் தமக்குப் பிடித்தமானவர்களை விவாகம் செய்து கொள்வதும் ஆச்ரமத்தின் விதிகளில் ஒன்றாக விருந்தது.

ஏனெனில், தன் பிறவி தனக்குத் தெரியாத அனாதைச் சிறுவனுயினும், சிறுமியாயினும் வெளியார் யார் சம்பந்தம் செய்ய ஒப்புவார்கள்? அவர்களுக்கு ஒரு விவாக பந்தமில்லாவிட்டால், இரு பாலர்களும் கெட்டலைந்து பாழாய்ப்போய்விடுவது நிச்சயம்; ஆதலால், அம்மாதிரி சின்னு பின்னமாய்ச் சிதறுவதைவிட விவாகம் செய்துகொண்டு அதொரு தனி ஜாதியைப்போல் வளரட்டும் என்கிற நோக்கத்துடன் ஆசிரமம் தொடங்கிய நாள் முதல் நடந்து வருகிறது.

அம் முறையில் சில மாணவர்களை அழைத்துக்கொண்டு அவர்களைக் கண்காணித்து வரும் பெரியவர் ஒருவர் ஆசிரமத்திற்கு வந்தார். தலைவி அவரை வரவேற்று உபசரித்து, "என்ன சமாசாரம்? இவர்களெல்லாம் என்ன செய்கிருர்கள்?" என்று அன்போடு விசாரித்தாள்.

பெரியவர் :—கடவுள் கிருபையில் ஏதோ தொழிலில்தான் இருக்கிருர்கள். மாதம் 30, 35 சம்பளத்திலிருக்கிருர்கள். வழக்கப்படி விவாகத்திற்காக வந்தேன்.

தலைவி :—அதுதான் தாங்கள் சொல்லாமலேயே தெரிகிறதே. ஏனப்பா! நீங்கள் கல்யாணம் செய்துகொண்டு மனைவியை வைத்து

சம்ரக்ஷிக்கத் தைரியமிருக்கிறதா! சம்சாரத்தை நடத்த ஆசையும் சக்தியும் இருக்கிறதா! ஏதோ, மேல்போக்காகக் கல்யாண ஆசைக்காக இன்று கல்யாணத்தைச் செய்துகொண்டு பிறகு அந்த அனுதைச் சிறுமியைச் சரியானபடி சம்ரக்ஷிக்காமலும், குதிரைப் பந்தயம், சூதாட்டம் முதலிய கேளிக்கைகளில் இறங்கி நீங்களும் கெட்டு, அவர்களையும் சந்தியில் விட்டுவிடுவீர்களா?

பிள்ளைகளில் ஒருவன் :—தாயே! அத்தகைய துர்ப்புத்திக்கு எங்கள் இதயத்தில் இடமில்லை. இனியும் எங்கள் ஆயுள்பரியந்தம் நாங்கள் இடங் கொடுக்கமாட்டோம். இம்மாதிரி துர்ப்புத்தியுடன் ஆண்களில் சிலர் நடந்ததின் பலனுகத்தான் பெண்களில் சிலர் ஒழுக்கமிழந்து இழுக்கில் புகுந்து எங்களைப் போன்ற துர்ப்பாக்கியப் பிண்டங்களை இவ்வுலகில் நாதியற்றக் கட்டைகளாக அலைய விடும் விதியமைகிறது. இந்த விபரீத பயங்கரத்தை அனுபவத்தில் பிரத்யக்ஷமாகப் பார்த்தும் நாங்கள் அம்மாதிரி படுகுழியில் விழுவோமா! அதைப்பற்றிச் சற்றும் பயப்படவேண்டாம்.

தலைவி :—அப்பா! இதேமாதிரி முன்பொரு தரம் உங்களைப் போன்ற அனுதைப் பையன் என்னிடம் பேசி நான் அதற்கு இசைந்து ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்த பிறகு அவளைச் சந்தியில் விட்டுவிட்டு, எங்கேயோ ஓடிப்போய்விட்டான். ஆச்ரமத்தில் அடைபட்டுக் கிடந்த பெண் ஒரு குழந்தையுடன் திண்டாடித் தெரு பொறுக்கி, மீண்டும் இதே இடத்தில் வந்திருக்கிறுள். பெற்றோராவது, உற்றோராவது, மற்றோராவது பந்தமிருப்பவனுயின், ஒரு வேளை பயப்பட இடமுண்டு. உங்களைப் போன்றவர்களுக்கு ஆண்டவனைத் தவிர வேறு பந்தப்பட்டவர்கள் உலகத்திலேயே இல்லை. ஆகையால், கண்ணுக்குத் தெரிந்தவர்கள் எத்தகையோர் இருந்தாலும், கண்ணுக்குத் தெரியாத பரம் பொருளுக்குத்தான் பயந்து நடக்கவேண்டும் என்ற தத்துவத்தை மனத்தில் உறுதியாகக்கொண்டு நடவுங்கள். உங்களில் யாருக்கு எந்தப் பெண் தேவையோ போட்டியின்றி, இதோ இப் புகைப் படங்களில் பார்த்துத் தேர்ந்துகொள்ளுங்கள்" என்று கூறி, ஒரு புகைப்பட ஆல்பத்தைக் கொணர்ந்து கொடுத்தாள்.

இம்மாதிரி அடிக்கடி வருவதும், கேட்பதும் ஆச்ரமத்தில் வழக்கமாதலால், அதைப் பெண்கள் ஓர் ஆச்சரியத்துடன் பார்ப்

பதும், "உனக்குத்தான் விவாகம், உனக்குத்தான் விவாகம்; உன்னைத்தான் கண்டு மோஹித்து ருக்மிணியைக் கிருஷ்ணன் அடித்துக்கொண்டு போனதுபோல், உன்னை அடித்துக் கொண்டு போய் விடுவான்" என்றெல்லாம் ஒருவருக்கொருவர் பரிகஸித்துக் கொண்டு, எட்டி எட்டிப் பார்ப்பது வழக்கம்.

இன்றும் அதேபோல் பெண்கள், தங்கள் விவாக விஷயமாகப் பேசுவதைக் கேட்டதும் சந்தோஷத்துடன் அவரவர் மனத்திற்குள், தமக்கு அந்தப் பாக்யம் கிட்டுமா! தமக்கு விடுதலை உண்டாகுமா! இந்தச் சிறைவாசத்தை விட்டு வெளியுலகத்தில் இன்புற நற்காலம் பிறக்குமா என்றெல்லாம் நினைத்து, சுவர்க்கோழிபோல் சுவருடன் காதைப் புதைத்துக்கொண்டு, அங்கு நடக்கும் சம்பாஷணைகளைக் கவனிக்கலானார்கள்.

எந்த விஷயத்திலும் நாட்டமில்லாது இறகொடிந்த பறவையைப்போல் துவண்டுபோய் கிடக்கும் சுமதிக்கு இந்த விஷயம் தெரிந்தவுடனே, பின்னும் பயமும் மனக் கலக்கமும் அதிகரித்து விட்டதேயன்றி இதில் ஒரு வேடிக்கையோ, உத்ஸாகமோ ஒன்றும் உண்டாகவில்லை. வந்திருக்கும் வாலிபர்கள் தன்னை எங்கே கேட்டு விடுகிறார்களோ, தனக்கு எங்கே போராபத்து வந்துவிடுமோ, 'ஆண்டவனே! அம்மாதிரி ஒன்றும் நேராத வண்ணம் பார்த்துக் கொள்' என்று தனக்குள் எண்ணியபடியே படுத்திருந்தாள்.

கூடவிருக்கும் பெண்களின் கும்மாளமும், கொக்கரிப்பும் தாங்கமுடியாத தலைவேதனையாகவே சுமதிக்குத் தோன்றியது. ஆனால், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், தான் ஏதோ படிப்பதுபோல் பத்திரிகையை வைத்துக்கொண்டிருந்தாள்.

அப் பெண்களில் சிலர் "சுமதீ! உனக்குத்தான் இப்போது யோகம் வந்திருக்கிறது. உன்னைத்தான் அந்த வாலிபர்கள் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள். ஏன் இப்படி விசனப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? எழுந்திரேன். அந்த வாலிபர்களும் நம்மைப்போல் குப்பைத்தொட்டி ச்வர்க்கத்திலிருந்து தரிசனமளித்து, இதே ஆச்ரமத்தில் வளர்ந்தவர்களாம். அவர்களுடைய அழகைப் பாரேன். கண்களென்ன பாவத்தைச் செய்தன? மன்மதன்போலும், ராஜ வடிவுபோலும் இருக்கிறார்கள். சுமதீ! இதோ பார். எழுந்திரு" என்று ஒரு நங்கை சுமதியின் கையைப் பிடித்து இழுத்தாள்.

சுமதிக்கோ இவர்களுடைய வார்த்தைகள் காதில் நாராசம் போல் விழுகின்றனவே யன்றி, அதைக் கேட்கப் பிடிக்கவில்லை. காதைப் பொத்திக்கொண்டு, "என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம். என்னைத் தேர்ந்தெடுக்காமலிருக்கும்படிக்கு நான் கடவுளை ப்ரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய இந்த ஒரு முறையிட்டிற்காவது கடவுள் க்ருபை செய்யமாட்டாரா என்று எதிர்பார்க்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட அச்சிறுமிகள் கொல்லென்று நகைத்தார்கள். "ஏன் சுமதி! உனக்கு இந்த எண்ணம் வைராக்யத்தினால் உண்டாகியதோ, அல்லது...." என்று ஒருத்தி இழுத்தாள்.

சுமதி:—அல்லது என்று எந்த கல்லைத் தூக்கி என் தலையில் போடப்பார்க்கிறாய்? என்னையே நான் வெறுக்கையில், எனக்கு வேறு எதன்மீது தான் ஆசையுண்டாக முடியும்?

சிறுமி:—அப்படியானால் நீ இந்தச் சிறைவாஸத்தையே முழு மனத்துடன் விரும்புகிறாயா? கடவுள் ச்ருஷ்டியிலுள்ள அற்புதங்களையும், இயற்கை காட்சிகளையுங் கூடக் கண்டறியாதபடி எத்தனை நாளைக்குத்தான் நாம் இப்படி அவதியுறுவது! ஏன் சுமதி? நாமும் வெளியுலகத்தையும், அதன் சுகதுக்கங்களையும் அனுபவிக்க வேண்டாமா!

சுமதி:—ஆஹா! தாராளமாய் ஆசையுற்றவர்கள் அனுபவிப்பதை யாரேனும் தடுப்பார்களா! பேஷாய் அநுபவியுங்கள்: தன்னைப்பெற்ற தாய் இன்னாரென்று அறிய பாக்யமற்ற நமக்கு வெளி சுகம் வேறா? எனக்கு இதுவே சிறைச்சாலை. இதுவே சொர்க்கம். இதுவே இயற்கை தேவியின் இருப்பிடம். இதுவே நரகத்தின் நிழல். இதுவே சகலமும் என்று எனக்குத் தோன்றுவதால் என்னை இம்சை செய்யவேண்டாம்—என்று வெறுப்பாயும், அலக்ஷ்யமாயும் கூறினாள்.

இதற்குள் ஒரு சிறுமி குதித்துக்கொண்டே ஓடிவந்து "இங்கே வாயேன்" என்று இழுத்துக்கொண்டுபோய் அதே ஜன்னலண்டை நிறுத்தி, "அந்த சம்பாஷணையைக் கேளேன். நீ சொல்லியது போலவே சுமதிக்கு ஓட் வந்துவிட்டது. பாரேன்" என்று கூறி, சம்பாஷணையைக் கவனித்தார்கள்.

வாலிபன்:—(படத்திலுள்ள பெண்களில் ஒருத்தியைக்காட்டி) இவள் பேரென்ன? இவள் ஆச்ரமத்திற்கு எப்படி கிடைத்தாள்?

தலைவி :—அப்பா! அதெல்லாம் கூட நீ அறிய விரும்புகிறாயா? நீ எப்படி கிடைத்தாயோ அப்படித்தான் அவளும் ஒரு தெருமூலையில் மூட்டையாகக் கட்டி உருட்டப்பட்டிருந்தாள். அவள் பெயர் லலிதா. ஏன், உன்னுடைய ஒட் இவளுக்கா?—என்று கூறிச் சிரித்தாள்.

வாலிபன், நகைத்துக்கொண்டே "இல்லை. இல்லை. என்னுடைய ஓட்டை நான் சுமதிக்குக் கொடுத்துவிட்டேன். எனக்கு சுமதிதான் தேவை. இந்தப் பெண் அவனுடைய பொருள்" என்று சற்று உரக்கக் கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சிறுமிகள் ஒரே ஓட்டமாக சுமதியிடம் ஓடிவந்து, "அடாடாடா! என்ன அதிர்ஷ்டசாலிடியம்மா நீ? மன்மதன்போன்ற வாலிபன் உன் வலையில் விழுந்து அவனுடைய ஓட்டை உனக்குக் கொடுத்துவிட்டான்" என்று கூறிக் குதித்தார்கள்.

அதே சமயம் சுமதியின் கையிலிருந்த பத்திரிகையிலுள்ள கொட்டை எழுத்துக்கள் அவளுடைய கவனத்தை ஆகர்ஷித்துக் கொண்டிருந்தன. அதாவது,

---

"கலியுக தன்வந்தரி என்று உலகோரால் கொண்டாடப்படும் ஸ்ரீமான் ஆத்மநாதன் திடீரென்று மூர்ச்சையாகி விழுந்துவிட்டார். காரணம் தெரியவில்லை. பல பெரிய டாக்டர்கள் பார்த்து வருகிறார்கள். விவரம் பிறகு வரும்."

என்று மட்டும் எழுதியிருந்ததைப் பார்த்ததும், அவளுக்கு ஆகாயமும் பூமியும் அப்படியே தலைகீழாய்ச் சுழன்றும், பூமி வெடித்தும் போய்விட்டதுபோலாகி விட்ட சமயம், இந்தச் சிறுமியின் வார்த்தையும் அரைகுறையாய் காதில் விழுந்தவுடனே 'ஹா' வென்று தனக்குள் அலறியபடியே, முழு ஞாபகமும் தப்பிப் போய் மூர்ச்சையாகிவிட்டாள். கூடவிருந்த சிறுமிகள் ஒன்றும் தோன்றாது அப்படியே இடிந்துபோய் விட்டார்கள்.

18030

பரிசுகளின் விவரம்

1938ௗ டிசம்பர்மீ 20-ந் தேதிக்குப் பிறகு 1939ௗ பிப்ரவரிமீ 20-ந் தேதிக்குள் சந்தாதாரராகச் சேர்ந்துள்ளவர்களுடையவும், புது சந்தா சேர்த்தனுப்பியவர்களுடையவுமான சந்தா நெம்பர்களைக் குலுக்கிப் போட்டதில் அடியிற் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன.

அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்து, தபாற் செலவுக்காக ரூபாய்க்கு இரண்டணு வீதம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

பரிசு. ந.	ரூ.	சந்தா. ந.	விலாசம்.
1.	15	எஸ். 1245	ஸ்ரீ. என். சண்முகம்பிள்ளை, பினுங்கு.
2.	10	கே. 576	ஸ்ரீமதி. என். ஆர். கமலம்மாள், சமயநல்லூர்.
3.	10	ஆர். 786	மிஸஸ். ஏ. ராகவன், சித்தவட்டம்.
4.	5	எல். 119	ஸ்ரீ. ஆர். எம். எஸ். எல். வி. லக்ஷ்மணன் செட்டியார், ஓ. சிறுவயல்.
5.	5	எம். 632	ஸ்ரீ. ஆர். வி. மகாதேவ ஐயர், சைதாப்பேட்டை.
6.	5	வி. 447	ஸ்ரீ. வி. ஏ. வெங்கடாசாரி, திருவல்லிக்கேணி.

நமது அன்பர்களுக்கு !

நமது ஏஜண்டு ஸ்ரீமான். கே. டி. ராமஸ்வாமி அய்யர், தமிழ் நாட்டின் பல பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். அவரிடம் சந்தாவைச் செலுத்தி, ரசீது பெற்றுக்கொண்டு ஜகன்மோகினியை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நமது விளம்பர விகிதம்

ஒரு பக்கத்துக்கு ஒரு முறை ரூ.	12 0 0	கால் பக்கத்துக்கு ,, ரூ.	4 0 0
அரை பக்கத்துக்கு ,, ,,	6 8 0	உள்ளட்டைக்கு ,, ,,	15 0 0

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

வீண் விளம்பரமல்ல......

வத்ஸகுமார்

அணு 8. சந்தாநேயர்களுக்கு அணு 6

ஆனல், நீங்கள் தினசரி வாழ்க்கையில் காணும் அநுபவம் முடிவு வரை ஊகிக்க முடியாத ஆச்சரியம், அடக்க இயலாத சிரிப்பு மிகுந்த சிறந்த சமூகக் கதை.

ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

உலுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
வத்ஸகுமார்

தனி விலை ரூ 1-6-0
முன்பண மனுப்பினல்
தபாற் செலவு இனும்

"JAGANMOHINI" Vol. XVI No. 3 Regd. No. M.

ஆஸ்பிரினை விலக்குங்க
இருதயக் கோளாறுகளை
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்க

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.

சென்னை கல்கத்தா பம்ப

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madra